# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2033 மார்கழி 29 திங்கட்கிழமை (13-01-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:48


# ஜப்பான் விசேட தூதர் அடுத்த மாதம் பிரபாகரனை வன்னியில் சந்திப்பார்!

## பாலசிங்கத்துடன் தாய்லாந்தில் நேற்று ஒரு மணி நேரம் பேச்சு

பாங்கொக்,ஜனவரி13

**இலங்கைக்கான ஜப்பானிய விசேட தூதுவர் ஜசுஷி அகாஷி, அடுத்த மாதம் வன்னி சென்று விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார். இந்த மாத இறுதியில் வன்னிவரும் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கமும் இந்தப் பேச்சின்போது உடன் இருப்பார். தாய்லாந்தில் அன்ரன் பாலசிங்கத்துக்கும் தூதுவர் அகாஷிக்கும் இடையே நேற்று ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற சந்திப்பின் பின்னர் இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.**

**தாய்லாந்துத் தலைநகர் பாங்கொக்கில் உள்ள நொவெட்டல் ஹோட்டலில் (Novotel hotel) இருவருக்கும் இடையிலான சந்திப்பு நடைபெற்றது. தற்போதைய சமாதான முயற்சிகள் பற்றியும் அபிவிருத்தி பற்றியும் இருவரும் சுமார் ஒரு மணி நேரம் பேசினர்.**

நான்காம் கட்டப் பேச்சுக்களில் கலந்துகொள்வதற்காக தாய்லாந்து சென்ற பாலசிங்கத்தை உள்ளூர் நேரப்படி மாலை 6.00 மணிக்கு அகாஷி சந்தித்துப் பேசினார். கடந்த வாரம் தாய்லாந்தில் நடந்து முடிந்த நான்காம் கட்ட நேரடிப் பேச்சுக்களின் பெறுபேறுகள் பற்றி இருவரும், விரிவாக ஆராய்ந்தனர்.

போரால் பெரும் பாதிப்புக்குள்ளாகி இருக்கும் வடக்கு - கிழக்கை மீளக் கட்டியெழுப்புவதற்கான உதவிகள் பற்றியும் இருவரும் நீண்டநேரம் பேசினர். வடக்கு - கிழக்குக்கு மட்டுமன்றி தெற்கிலும் பொருளாதார அபிவிருத்

(14ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டணி குறித்து சு.கட்சி - ஜே.வி.பி. 20ஆம் திகதி முக்கிய கலந்துரையாடல்

கொழும்பு,ஜன.13

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் மக்கள் விடுதலை முன்னணியும் (ஜே.வி.பி.) இணைந்து எதிர்கால அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவது தொடர்பாக முக்கிய கலந்துரையாடலொன்றை எதிர்வரும் 20ஆம் திகதி நடத்தவுள்ளதாகக் கூறப்படுகிறது. அரசியல் நடவடிக்கைகளுக்காக இரண்டு கட்சிகளும் இணைந்து செயற்படுவதற்கு என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது தொடர்பாக ஏற்கனவே இரண்டு

(14ஆம் பக்கம் பார்க்க)

## மாற்று தமிழ்க் குழுக்களுடனான சந்திப்பு அவசியமற்றதொன்றாகும்

### புலிகளின் மட்டு அரசியல்துறை அறிவிப்பு

மட்டக்களப்பு,ஜன.13

மட்டக்களப்பில் கடந்த வெள்ளிக்கிழமை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாற்று தமிழ் குழுக்களுடனான சந்திப்புபற்றி தமக்குச் சரியான முறையில் அறிவிக்கப்படவில்லை என்று புலிகளின் மட்டு - அம்பாறை அரசியல் துறை அறிவித்துள்ளது.

இவ்வாறானதொரு சந்திப்பு அவசியமற்றதொன்று. நாம் ஏற்கனவே மாற்று இயக்கங்களுக்காக வெளியிட்ட துண்டுப்பிரசுரத்தில் அனைத்து விட

(14ஆம் பக்கம் பார்க்க)

## தனியார் பஸ்ஸில் புலிகளின் சீருடை; மாங்கேணி சாவடியில் கண்டுபிடிப்பு

### சாரதி, நடத்துநர், இரு புலி உறுப்பினர் கைது

கொழும்பு,ஜன.13

தனியார் பஸ் ஒன்றில் எடுத்துச் செல்லப்பட்ட புலிகள் இயக்க சீருடைகள், தலைக் கவசங்கள் வேறுசில பொருள்கள் என்பன வாழைச்சேனை, மாங்கேணி இராணுவ - பொலீஸ் சோதனைச் சாவடியில் கைப்பற்றப்பட்டன.

நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணியளவில் இப்பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து பஸ்ஸின் சாரதியும் நடத்துநரும் கைதுசெய்யப்பட்டனர்.

பஸ்ஸுக்குள் 26 சீருடைகள் இருந்தன எனவும், வாகரையில் இருந்து வாழைச்சேனை, கிரான் பகுதிக்கு அவை எடுத்துச்செல்லப்பட்டிருக்க

(14ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் காங்கிரஸ் தேசிய அமைப்பாளர் பாயிஸ் படுகொலை முயற்சி? 11 குண்டர்கள் வானுடன் கைது!

### துப்பாக்கிகள், கைக்குண்டுகளும் கைப்பற்றப்பட்டன

புத்தளம்,ஜன.13

முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் கே.ஏ.பாயிஸை படுகொலை செய்யச் சென்றதாகச் சந்தேகிக்கப்படும் பதினொரு பேர் கொண்டதான உலகக் குண்டர் கோஷ்டி ஒன்றை அவர்கள் சென்ற வானுடன் சனிக்கிழமை இரவு சிலாபம் பொலீஸார் மடக்கிப் பிடித்துள்ளனர். வானிலிருந்து கைத்துப்பாக்கிகள், ரி-56 துப்பாக்கி ஒன்று, கைக்குண்டுகள் முதலானவை கைப்பற்றப்பட்டன.

பாயிஸ் புத்தளத்தில் வசிப்பவர்; அடிக்கடி கொழும்பு செல்பவர். முஸ்லிம் காங்கிரஸின் 18 ஆவது பேராளர் மாநாடு கொழும்பில் நேற்று நடந்ததால் அவர் அடிக்கடி புத்தளத்திற்கும் கொழும்பிற்கும் இடையே பிரயாணம் செய்யவேண்டியதாயிற்று.

கொழும்பு - புத்தளம் வீதியில் சிலாபத்துக்கு அண்மையில் உள்ள இரணவிலவிலேயே குண்டர் கோஷ்டி கைதுசெய்யப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்களை விசாரணை செய்தபொழுது பாயிஸின் உயிருக்கு உலைவைக்கும் முயற்சி பற்றி அறியவந்தது என்று பொலீஸார் தெரிவித்திருக்கின்றனர். தனிப்பட்ட காரணங்களா அல்லது அரசியல் காரணங்களா இம்முயற்சிக்கான காரணம் என்பது குறித்துப் பொலீஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டிருக்கின்றனர்.

கொலைகள், கொள்ளைகள் உட்

(14ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கு புனர்வாழ்வு, மீள்குடியேற்றம்: பாதுகாப்பு அமைச்சு செயலாளர் இன்று கண்காணிப்புக்குழு பிரதிநிதிகளுடன் சந்திப்பு

கொழும்பு,ஜன.13

வடக்கு - கிழக்கு புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோவுக்கும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதிநிதிகளுக்கும் இடையே சந்திப்பு ஒன்று இன்று நடைபெறவிருக்கிறது.

நாளைமறுதினம் 15 ஆம் திகதியும் 16 ஆம் திகதியும் கிளிநொச்சியில் நடைபெறவிருக்கும் புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் பற்றிய உபகுழுக் கூட்டத்துக்கு முன்னோடியாகவே இச்

(14ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவராக ரவூப் ஹக்கீம் மீண்டும் தெரிவு

கொழும்பு,ஜன.13

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவராக அமைச்சர் ரவூப் ஹக்கீம் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். கட்சியின் புதிய அதியுயர் பீட உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். அமைச்சர் ரவூப் ஹக்கீம் கட்சியின் 18 ஆவது வருடாந்த பேராளர் மாநாட்டில் இவற்றை அறிவித்தார்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் 18 ஆவது பேராளர் மாநாடு நேற்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பு மஹரகம பொலிஸ் பயிற்சி நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. மாநாட்டிற்கு வருகைதந்த கட்சியின் தேசியத் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம்,

(14ஆம் பக்கம் பார்க்க)

## இந்து விவகார அமைச்சின் அறிவிப்பை நம்பி சென்ற பயணிகள் பெரும் ஏமாற்றம்!

### ஏ-9 பாதை நேற்று திறக்கப்படவில்லை

யாழ்ப்பாணம்;ஜன.13

இந்துக்களின் முக்கிய பண்டிகையான தைப்பொங்கலை முன்னிட்டு நேற்று ஞாயிற்றுக்கிழமை ஏ-9 கண்டி வீதி திறக்கப்பட்டிருக்கும் என்று இந்து கலாசார அமைச்சு விடுத்த அறிவிப்பை நம்பி நேற்றுக்காலை முகமாலை சென்ற பெரும் எண்ணிக்கையான பயணிகள் ஏமாற்றம் அடைந்தனர்.

முகமாலை மற்றும் ஓமந்தையில் உள்ள இராணுவம், புலிகள் ஆகிய இருதரப்புகளினதும் சோதனை நிலையங்கள் வழமைபோன்று நேற்றுக் காலை மூடப்பட்டிருந்ததால் பயணிகள் அந்த வீதிவழியாக பயணஞ்செய்ய முடியாமற்போனது.

சைக்கிள்களிலும் மோட்டார் சைக்கிள்களிலும் சென்ற பெரும் எண்ணிக்கையான பயணிகள் இராணுவ சோதனை நிலையப் பகுதியில் வீதியின் நடுவே கூடிநின்றனர். அவர்களைப் பயணம் செய்ய அனுமதிக்கமுடியாது என்று படையினர் தெரிவித்துவிட்டனர். இதனால், கலவரமடைந்த பயணிகள் படையினருடன் வாக்குவாதப்பட்டனர். நீண்டநேரமாகப் பயணிகள் காத்து நின்றதை அடுத்து அவர்களில் சிலரைப் படையினர் பயணஞ்செய்ய அனுமதித்தனர். ஆனால், வாகனங்கள் எதுவும் செல்ல அனுமதிக்கப்படவில்லை. இதனால் அவை மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பின.

புலிகளின் சோதனைச் சாவடிகளும் திறக்கப்பட்டிருக்கவில்லை. வன்னியிலிருந்து யாழ்ப்பாணம் வந்த பெரும் எண்ணிக்கையானோர் இதனால் ஏமாற்றம் அடைந்தனர். நீண்ட நேரத்திற்குப் பின்னர் செஞ்சிலுவை

(14ஆம் பக்கம் பார்க்க)

## நடைபெறும் சமாதானப் பேச்சுக்கள் வெறுமனே போரை ஒத்திப்போடும் தந்திரோபாயமாகிவிடுமா?

### கருத்து முரண்பாடுகள் கண்டு ஹக்கீம் சந்தேகம்

கொழும்பு,ஜன.13

சமாதானப் பேச்சுக்களின் போது எழும் கருத்துமுரண்பாடுகளைப் பார்த்தால் சமாதானப் பேச்சு வெறுமனே போரை ஒத்திப்போடும் தந்திரோபாயமாக அமைந்துவிடும் நிலை ஏற்பட்டுவிடுமோ என்று சந்தேகங்கொள்ள வேண்டி இருக்கிறது என்றார் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம்.

நேற்று கொழும்பு முகத்துவாரம் மஹரகம பொலிஸ் பயிற்சி நிறுவன கேட்போர் கூடத்தில் நடந்த ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் 18 ஆவது பேராளர் மாநாட்டுக்குத் தலைமை தாங்கி ஹக்கீம் உரைநிகழ்த்தினார்.

(13ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# யாழ்.குடாநாட்டை நோய்நொடிகள் இல்லாத பிரதேசமாக்க அனைவரும் பாடுபடவேண்டும்

## கொழும்பு பிரதி மேயர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.13

குடாநாட்டை நோய் நொடிகளற்ற பிரதேசமாக்குவதற்கு பொதுமக்கள், அரச ஊழியர்கள், பொது அமைப்புகள், படையினர் ஆகிய அனைத்துத் தரப்பினரும் இணைந்து பாரிய அளவில் சிரமதானப் பணியை மேற்கொள்ளவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் கொழும்பு மாநகரசபையின் பிரதி மேயரும் ஐ.தே.கட்சியைச் சேர்ந்தவருமான எம். ஆஸாத் எஸ்.சாலி.

இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரனின் அழைப்பின்பேரில் நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்த பிரதி மேயர் தலைமையிலான குழுவினர் நண்பகல் உதயன் பணிமனைக்கு வந்தனர்.

கொழும்பு பிரதி மேயருடன் கொழும்பு மாநகரசபையின் முதன்மைத் தமிழ் உறுப்பினர் பி.வைராம், சிங்கள உறுப்பினர் பிரேமஜயந்த ஆராய்ச்சி, கொழும்பு மாநகரசபை சுகாதார அதிகாரி ஹெரவன் உட்பட 17 பேர் கொண்ட குழுவினரே இங்கு வந்திருந்தனர்.

தமது யாழ். வருகை குறித்து 'உதயன்' செய்தியாளரிடம் பிரதி மேயர் ஆஸாத் சாலி தெரிவித்ததாவது:-

ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள் என்ற அடிப்படையில் அமைச்சர் தி. மகேஸ்வரனின் அழைப்பை ஏற்றே நாங்கள் இங்கு வந்துள்ளோம். கொழும்பு மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரி, வடிகால்கள் சம்பந்தப்பட்ட பொறியியலாளர்கள் ஆகியோரும் எம்முடன் வந்துள்ளனர்.

பிரதமரின் எண்ணப்படி குடாநாட்டு அபிவிருத்திக்கு எம்மால் இயன்ற உதவிகளை வழங்குவதே எமது விஜயத்தின் நோக்கம்.

கொழும்பு மாநகரசபைப் பகுதியில் மக்களே நேரடியாகப் பங்கேற்கும் அபிவிருத்தித் திட்டமொன்றை நாங்கள் செயற்படுத்தி வெற்றி கண்டுள்ளோம்.

அதனை குடாநாட்டிலும் செயற்படுத்தினால் நிச்சயம் வெற்றியளிக்கும் என்று நம்புகிறோம். அதாவது இயந்திர உபகரணவசதிகள், தேவையான பொருள்கள் என்பவற்றை நாம வழங்குகிறோம். அனைவரும் ஒன்று கூடி சிரமதான அடிப்படையில் அபிவிருத்தியை மேற்கொள்ளுவதே எமது திட்டமாகும்.

குடாநாடு தற்போது மிக மோசமான சுகாதாரச் சீர்கேட்டை எதிர்நோக்கியுள்ளது. உயர்பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரில் படையினர் கழிவு நீர் செல்லும் வாய்க்கால்களைத் தடுத்து வைத்திருப்பதை நாம் நேரில் பார்த்தோம். சுகாதார சீர்கேட்டுக்கு இதுவும் ஒரு காரணம்.

ஆகவே, குடாநாடு தழுவிய அளவில் அனைவரும் ஒரே சமயத்தில் சிரமதானப் பணிகளை மேற்கொண்டால் இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடும் என்று நம்புகிறோம். ஏதாவது சனி, ஞாயிறு தினங்களைத் தெரிவுசெய்து கூறுங்கள். அநுராதபுரம், பொலன்னறுவை ஆகிய இடங்களிலிருந்து சுத்திகரிப்பு இயந்திரங்கள், தெளி மருந்து வகைகள் போன்றவற்றை நாம் தருகின்றோம். பொதுமக்களும் படையினரும் தத்தம் பகுதிகளை துப்புரவு செய்யட்டும். தமது பகுதிகளைத் தாமே சுத்தம் செய்யும் போது பணி சீராக இடம்பெறும்.

குடாநாட்டில் தொற்றுநோய் பரவும் வேளையில் இத்தகைய ஒட்டுமொத்த சிரமதான இயக்கம் அவசியமான ஒன்றாகும்.

தமது வீட்டை சுத்தமாக வைத்திருந்ததற்காக பெற்றோர்கள் தமது மகனுக்கோ, மகளுக்கோ ஐஸ்கிறீம் வாங்கிக்கொடுப்பார்கள். ஆனால், ஐஸ்கிறீம் கோப்பையை வீதியில் எறிந்து, அதில நீர் தேங்கி, நுளம்பு பெருகுவதைத் தடுப்பதில் பெற்றோர்கள் அக்கறை காட்டுவதில்லை. இந்த மனோபாவம் மாறவேண்டும்.

நாம் பிறருக்கு சுகாதாரக் கேடு விளைவிக்கக் கூடாது என்பதை மாணவருக்குப் போதிப்பதில் பெற்றோர் மட்டுமன்றி பாடசாலைகளும் அதிக அக்கறை காட்டவேண்டும்.

- என்றார் பிரதிமேயர்.

முன்னதாக பிரதி மேயர் குழுவினர் குருநகர், பாஷையூர் ஆகிய கரையோரப் பிரதேசங்களையும் நகரப் பகுதியில் உள்ள குளங்களையும் பார்வையிட்டனர். அத்துடன், யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும் வர்த்தகக் கண்காட்சி, யாழ். பொதுநூலகம் ஆகியவற்றையும் பார்வையிட்டனர். (ஒ-5)

## மாநகர சபையில் கறுப்புப்பட்டி போராட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.13

யாழ். மாநகரசபைப் பிரதேசத்தினுள் நுழையும் முக்கிய பிரமுகர்களும் சபையினரும் சபை முதல்வரினதும தனித்துவத்தைப் பேணவேண்டிய கட்டுப்பாடுடையவர்கள் என்பதனை வலியுறுத்தியும் அத்தகையவர்கள் சபையின் தனித்துவத்தை உதாசீனம் செய்வதைக் கண்டித்தும் இன்று யாழ். மாநகரசபையில் கறுப்புப்பட்டிப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த அடையாள கறுப்புப்பட்டிப் போராட்டம் காரணமாக சபையின் நாளாந்தக் கடமைகள் பாதிக்கப்படுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது என்றும் சபை முதல்வர் செ.கந்தையான் தெரிவித்தார்.

தென்பகுதியிலிருந்து வருகை தரும் பிரமுகர்கள், யாழ். மாநகரசபை பிரதேசத்தினுள் நுழையும்போது சபையின் தனித்துவத்தைப் பேணத் தவறிவிடுகிறார்கள்.

இது மிகவும் கண்டிக்கத்தக்க விடயமாகும் என்றும் அவர் தெரிவித்தார். (ம-9)

## இலங்கைக்கு தப்ப முயன்ற 11 அகதிகள் கைதாகினர்!

### இராமேஸ்வரம் அருகே சம்பவம்

சென்னை,ஜன.13

இராமேஸ்வரத்தில் இருந்து படகுகள் மூலம் தப்பி இலங்கைக்கு வர முயன்றதாகக் கூறப்படும் 11பேரை தமிழகப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

சென்னை அருகே உள்ள புழல் என்ற இடத்தில் இருக்கும் ஈழத் தமிழர்களுக்கான அகதிமுகாமில் இருந்து அண்மையில் தப்பிச் சென்றவர்களே இவ்வாறு இலங்கைக்கு செல்ல முயன்றதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

இவர்கள் 11பேரும் ஈ.பி.ஆர்.எல்.எவ அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலீஸார் கூறினர். அவர்களை மீண்டும் புழல் அகதிகள் முகாமுக்கே திருப்பி அனுப்பி வைக்க முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

இலங்கையில் அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்கள் நடைபெறுவதால் ஏற்பட்டுள்ள அமைதியான சூழலில் தாம் தாயகம் திரும்ப விரும்பியே படகில் தப்ப முயன்றதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். (ம)

# இலங்கை விடயத்தில் இந்தியாவின் கொள்கையில் மாற்றமேதும் இல்லை

## வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சின்ஹா தெரிவிப்பு

புதுடில்லி,ஜன.13

இந்திய அரசு தற்போது இலங்கை தொடர்பாகக் கொண்டிருக்கும் கொள்கையில் மாற்றம் எதுவும் இல்லை என்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்சின்ஹா தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் முன்னாள் மூத்த இராணுவத் தளபதி சதீஷ் நம்பியார், இலங்கை அரசுக்கு இராணுவ உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக ஆலோசனை வழங்க அழைக்கப்பட்டிருப்பதன் மூலம் இந்திய அரசு, இலங்கை தொடர்பான தன்னுடைய கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறதா? என்று சின்ஹாவிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். "சதீஸ் நம்பியார் தனது சொந்த முயற்சியின் பேரிலேயே இலங்கைக்குச் செல்கிறார். இதற்கும் இந்திய அரசு தற்போது இலங்கை தொடர்பாகக் கொண்டிருக்கும் கொள்கைக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. எங்களுடைய கொள்கையில் மாற்றம் இல்லை" என்றும் ஜஸ்வந் சின்ஹா மேலும் தெரிவித்தார். (ம-9)

## சோதியா நினைவு நிகழ்வில் பிரபா கலந்துகொண்டார்

கிளிநொச்சி,ஜன.13

மேஜர் சோதியாவின் 13 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வில் தமிழ்த் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் கலந்துகொண்டு சிறப்பித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் முதலாவது தளபதியான மேஜர் சோதியாவின் 13 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு, பிரத்தியேகமாக ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

சோதியா படையணி போராளிகளினால் ஒழுங்கமைக்கப்பட்ட இந்த நிகழ்வில், தமிழீழத் தேசியத் தலைவர் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

இந்நிகழ்வில், மேஜர் சோதியாவின் திருவுருவப் படத்துக்கு அவரது தந்தையார் ஈகச்சுடர் ஏற்ற, தாயார் மலர்மாலை அணிவித்தார். சோதியா படையணிப் போராளிகளின் கலை நிகழ்ச்சிகளும் அங்கு இடம்பெற்றன.

# முஸ்லிம் சமூகம் இதுவரை புறக்கணிப்பு; இப்போதுதான் சர்வதேசத்தின் அங்கீகாரம்!

## 18 ஆவது பேராளர் மாநாட்டில் ரவூப் ஹக்கீம்

கொழும்பு,ஜன.13

"முஸ்லிம் சமூகத்தின் அபிவிருத்திக்காகவும் ஐக்கியத்திற்காகவும் உருவாக்கப்பட்டது முஸ்லிம் காங்கிரஸ். ஆனால், இன்று கட்சியின் ஒற்றுமை பற்றிப் பேசும் தாழ் நிலைக்கு கட்சி தள்ளப்பட்டுவிட்டது."

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் 18 ஆவது பேராளர் மாநாட்டில் உரையாற்றுகையில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

தனிப்பட்ட சலுகைகளுக்காகவும், பதவிகளுக்காகவும் சில தீயசக்திகளினதும், அரசியல் வாதிகளினதும் ஆசை வார்த்தைகளுக்காக சிலர் சோரம் போகின்றனரே என்பது வேதனையாக இருக்கின்றது.

ஒரு தேர்தலின் மூலம் ஆட்சியைக் கைப்பற்றும் சக்தியும், துணிச்சலும், நேர்மையும் இல்லாத சில அரசியல் தலைமைகள், சிலரை விலைபேசித் தேர்தலின்றியே ஆட்சியைக் கைப்பற்றத் திட்டம் தீட்டுகின்றனர். இதற்கு இடம்கொடுக்கமுடியாது.

இப்படிச் சோரம் போனவர்கள் இன்னும் எத்தனை நாள்களுக்கு இந்தப் பதவிகளில் இருக்கப்போகின்றனர். அதனைத் தீர்மானிக்கும் நேரம் வந்துவிட்டது. இப்போதுகூட நாம் அவர்களைத் தூக்கி எறிந்துவிட விரும்பவில்லை. கசப்பு உணர்வுகளை மறந்து மீண்டும் வாருங்கள். கட்சியின் தனித்துவத்தை பாதுகாப்போம். நமது பேரம் பேசும் சக்தியைக் கட்டிக்காப்போம் வாருங்கள் என்று பகிரங்கமாக அழைப்புவிடுத்தார்.

அரசுடன் தொடர்ந்து இருந்து அதனை அழிப்பது எமது நோக்கமல்ல. ஆனால், எமது சமுதாயத்தையும் கட்சியின் தனித்துவத்தையும் காப்பாற்றுவதற்கு நாம் ஒரு தேர்தலைச் சந்திக்கவும் தயாராக இருக்கின்றோம். நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை முக்கியமல்ல. கட்சியின் தலைமையும் உறுதியும் தான் அவசியம். இது தொடர்பாக காங்கிரஸ் தலைமையை ஏற்றுக்கொண்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இவ்விடயம் தொடர்பாக பிரதமருடன் விரைவில் பேச்சு நடத்தவுள்ளோம் என்றும் குறிப்பிட்டார்.

ஜே.வி.பியினர் இப்பொழுது முஸ்லிம்கள்மீது காட்டிவரும் திடீர் அக்கறை குறித்தும் ஹக்கீம் விமர்சித்தார்.

முன்பு வெளியிலிருந்து ஆதரவு வழங்குவதாகக் கூறி நன்னடத்தை அரசை உருவாக்கிய ஜே.வி.பியினர், இப்பொழுது பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் நேரடியாக இணைந்து அரசைக் கவிழ்க்க முனைகின்றனர். அதற்கு இடமளிக்கக் கூடாது.

சமாதானப் பேச்சின்மூலம் முஸ்லிம்களுக்கு ஏதும் நன்மைகளும் சலுகைகளும் கிடைத்துவிடுமோ என்ற பீதியினால் இன்று சமாதானப் பேச்சையே குழப்புவதற்கு முனைகின்றனர்; நாட்டு மக்கள் மத்தியில் கருத்து மோதல்களை ஏற்படுத்தப் பார்க்கின்றனர்; எமது சமூகத்தின் ஒற்றுமையைச் சீரழிக்கப் பார்க்கின்றனர்.

அமைச்சுப் பதவிகளுக்காகவும் பட்டங்களுக்காகவும் அமைக்கப்பட்டதல்ல காங்கிரஸ். முஸ்லிம்களின் தனித்துவம்; பாதுகாப்பு, கலாசாரம் என்பவற்றைக் கட்டிக் காப்பதற்காகவே உருவாக்கப்பட்டது.

இதற்குத் தமிழ்க் கட்சிகளை ஓர் உதாரணமாகக்கொள்ள வேண்டும்.

மாறிமாறி வந்த அரசுகள் தமது தேவைக்காக ஒரு சிலருக்கு அமைச்சுப் பதவிகளை வழங்கி வந்தன. இந்த வரிசையில் கடைசியாக அமைச்சர் பதவி பெற்றவர் டக்ளஸ் தேவானந்தா.

அடிப்படைத் தமிழ்க்கட்சிகள் எதுவும் எந்தவோர் அமைச்சுப் பதவியையும் ஏற்கவில்லை. எனவே, சமூகத்தின் பாதுகாப்புக்கு அமைச்சுப் பதவி ஒன்றும் முக்கியமானதல்ல என்றும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் சுட்டிக்காட்டினார்.

களப்போராட்டம் அவ்வப்போது முடிவெடுப்பது. ஆனால், பேச்சுமேடைப் போராட்டம் திரும்பத் திரும்பப் பரிசீலனை செய்யக்கூடியது.

கடந்த 5 மாதங்களில் 16 வழக்குகளுக்கு முகங்கொடுத்து வெற்றி கண்டுள்ளோம். இன்னும் பல வழக்குகள் உயர் நீதிமன்றத்தில் இருக்கின்றன. ஐக்கியத்திற்கும் இன ஒற்றுமைக்கும் இலக்கணமாகத் திகழ்ந்த முஸ்லிம் சமூகம், இன்று மற்ற சமூகத்தவர்களும் விமர்சிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டது. எனவே, நாம் எல்லோரும் சமூக உணர்வுடன் ஒன்றுபடுவோம் என்றும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் அழைப்பு விடுத்தார். (ம)

## மருதானை லொட்ஜில் இளைஞன் தற்கொலை!

மருதானை லொட்ஜில் இளைஞர் ஒருவர் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்ட சம்பவமொன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

மருதானை - டோரல்ல வீதியில் அமைந்துள்ள லொட்ஜின் மேல் மாடியில் வத்தளைப் பகுதியைச் சேர்ந்த மொஹமட் நிசார் என்ற 26 வயதான இளைஞர் ஒருவரே அங்குள்ள மின்விசிறியில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

### கிளிநெச்சி மாவட்டத்திலுள்ள

# 9 கிராம அலுவலர் பிரிவுகளில் மீளக்குடியமரமுடியாத நிலை

வவுனியா,ஜன.13

கிளிநொச்சி மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கையின் போது விதைக்கப்பட்ட வெடிபொருள்கள் அகற்றப்படாமையால் ஒன்பது கிராம சேவையாளர் பிரிவுகளில் மக்கள் மீளக்குடியமர அச்சம் தெரிவித்துள்ளனர்.

கண்டாவளை உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள ஆனையிறவு, தட்டுவன்கொட்டி, உமையாள்புரம், பளை உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள முகமாலை, இத்தாவில், கிளாலி, பூநகரி உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள ஞானியர்மடம், கௌதாரிமுனை, பரமன்கிராய் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள மக்களே மீளக்குடியமர முடியாத நிலையில் உள்ளனர்.

நாட்டில் சமாதானச் சூழ்நிலையில் ஏனைய பகுதிகளில் மக்கள் குடியேறியபோதும் இந்த கிராமங்கள் தொடர்ந்தும் வெறிச்சோடியே உள்ளன. (ம)

# லொறி உரிமையாளர் சங்கம் வேலை நிறுத்தத்தில் குதிப்பு

யாழ்ப்பாணம்.ஜன.13

யாழ்.மாவட்ட தனியார் லொறி உரிமையாளர் கூட்டுறவுச்சங்கம் மீண்டும் இன்று முதல் காலவரையறையற்ற சாத்வீக மறியல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளது.

பருத்தித்துறை இறங்குதுறையில் கப்பலில் இருந்து இறக்கப்படும் சீமெந்தை ஏற்றி வருவதற்கு தனியார் லொறிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டதை ஆட்சேபித்து கடந்த 8ஆம் திகதி இந்தச் சங்கத்தால் மறியற்போராட்டம் நடத்தப்பட்டது. பின்னர் இந்தப் போராட்டம் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதனுடன் ஒரு சுமுகநிலையை ஏற்படுத்துவதற்கு வசதியாகவே தற்காலிகமாக மறியற்போராட்டம் இடைநிறுத்தப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், "அரச அதிபருக்கு வழங்கப்பட்ட மகஜருக்கு எவ்விதமான தகுந்த பதிலையும் தமக்கு வழங்காமல், பொருள்களை ஏற்றுவதற்கான கேள்வி கோரல் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருப்பது எமக்கு அதிர்ச்சியையும் சந்தேகத்தையும் தோற்றுவித்துள்ளது" என்று சங்க பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இந்தச் செயல் எமது உரிமையாளர்களையும், சாரதிகளையும் மீண்டும் சாத்வீக போராட்டத்தில் ஈடுபட வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தி உள்ளது. அமைதியான முறையில் இன்று முதல் தொடரவுள்ள மறியற் போராட்டம் நீதியான ஒரு தீர்வு கிடைக்கும்வரை தொடரும் என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

## தன்னந்தனியாகப் படகில்

# அட்லாண்டிக் கடலைத் தாண்டி பிரிட்டிஷ் மாணவன் சாதனை!

லண்டன்,ஜன.13

அட்லாண்டிக் பெரும் கடலை தனியாகப் படகில் கடந்த இளம்வயதினர் என்ற பெருமையை பிரிட்டிஷ் பாடசாலை மாணவரான செப் குளோவர் பெற்றுள்ளார்.

15வயதான செப்குளோவர், நேற்று ஞாயிற்றுக்கிழமை 2 ஆயிரத்து 700 மைல்கள் தூரமான பயணத்தை முடித்து அன்டிகுவாவில் கரையிறங்கினார்.

கடந்த சனிக்கிழமை மற்றொரு படகில் பயணித்த அவரது தந்தையான இயன் குளோவர், அட்லாண்டிக் கடலைக் கடந்து அன்டிகுவாலை அடைந்திருந்தார். தந்தையும் மகனும் தனித்தனிப் படகுகளில் கடந்த டிசெம்பர் மாதம் 19ஆம் திகதி டெனிரிப் கரையிலிருந்து புறப்பட்டனர். கிறிஸ்மஸ் பண்டிகையையும் அவர்கள் நடுக்கடலிலேயே கொண்டாடினர்.

செப், தனது 12 வயதிலிருந்தே தந்தையிடமிருந்து படகு செலுத்தக் கற்றுக்கொண்டார். அட்லாண்டிக் கடலை, தனியே படகில் கடக்கும் சாதனையை ஏற்படுத்த அப்போதிருந்தே அவர் பயிற்சி பெற்று வந்தார். நீண்ட காலப் பயிற்சியின் பின்னர் 32 அடி நீளமான படகுகளில் தந்தையும் மகனும் அட்லாண்டிக் கடலைக் கடக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். செப் செலுத்திய படகுக்கு 'ரிவ்ளெக்ஷன்' என்றும் தந்தை செலுத்திய படகுக்கு 'ஈசியா' என்றும் பெயரிடப்பட்டிருந்தது. (ஒ)



சாதனை புரிந்த மகிழ்ச்சியில் செப் குளோவர்

# உற்பத்தியை அதிகரிக்க 'ஒபெக்' நாடுகள் திட்டம்

வியன்னா,ஜன.13

பெற்றோலிய எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்க பெற்றோலிய ஏற்றுமதி செய்யும் நாடுகளின் கூட்டமைப்பு (ஒபெக்) தீர்மானித்துள்ளது.

அதிகரித்துவரும் பெற்றோலிய பொருள்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

உலகின் மொத்த மசகு எண்ணெய் உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கை இந்தக் கூட்டமைப்பு நாடுகள உற்பத்தி செய்து வருகின்றன. இக் கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள 11 நாடுகளின் எண்ணெய் வளத்துறை அமைச்சர்கள் வியன்னாவில் ஞாயிற்றுக்கிழமை கூடி விவாதித்தனர்.

நாளொன்றுக்கு 10 லட்சம் பீப்பாக்கள் அளவு மசகு எண்ணெய் உற்பத்தி அதிகரிக்கப்படும் என்று மத்திய கிழக்கு நாடுகளின் பொருளாதார ஆய்வறிக்கை தெரிவித்துள்ளது.

எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளின் கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள சவூதிஅரேபியா மசகு எண்ணெய் உற்பத்தியில் முதலிடம் வகிக்கிறது. விலை உயர்வைக் கட்டுப்படுத்த மசகு எண்ணெய் உற்பத்தி அதிகரிக்கப்படும் என்று சவூதிஅரேபிய வெளியுறவு அமைச்சர் அல்பைஸல் தெரிவித்துள்ளார். லண்டன் மற்றும் நியூயோர்க் சந்தையில் ஒரு பீப்பாய் எண்ணெய் விலை 30 டொலர்களைத் தாண்டிவிட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

# இந்தியப் பெண் கல்பனா மீண்டும் விண்வெளி பயணம்

புதுடில்லி,ஜன.13

அமெரிக்காவில் வசிக்கும் இந்தியப்பெண் கல்பனா சாவ்லா, இரண்டாவது முறையாக விண்ணுக்குச் செல்கிறார்.

கல்பனா உட்பட 7 விண்வெளி வீரர்கள் அமெரிக்காவில் உள்ள கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து எதிர்வரும் 16 ஆம் திகதி கொலம்பியா விண்வெளி ஓடத்தில் புறப்படுகின்றனர். காலை 10 மணி முதல் பகல் 2 மணிக்குள் அவர்கள் புறப்படுவர்.

முதலில் அவர் விண்ணுக்குச் சென்றபோது, அவர் இருந்த விண்கலம் பூமியை 252 முறை சுற்றியது. 375 மணி நேரம் அவர் விண்ணில் இருந்தார்.

அத்துடன், இப்பயணத்தில் இஸ்ரேல் நாட்டின் முதல் விண்வெளி வீரர் கர்னல் இலன் ரமோனும் விண்ணுக்குச் செல்கின்றார்.

கென்னடி விண்வெளி நிலையத்திலிருந்து இந்த விண்கலம் செலுத்தப்படுகிறது. இதையொட்டி அந்தப் பகுதி முழுவதும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. (ஒ)

# பலஸ்தீன நகரத்தின் மீது இஸ்ரேலியப் படை தாக்கு!

காஸாவின் கான்யூனுஸ் நகரில் இஸ்ரேலிய இராணுவம் மேற்கொண்ட நடவடிக்கையில் இரு பலஸ்தீனர்கள் உயிரிழந்தனர். ஏராளமான கட்டடங்கள் இஸ்ரேலிய டாங்கித் தாக்குதலில் தரைமட்டமாக்கப்பட்டன. கான்யூனுஸ் நகரை அண்டிய பெய்ட் ஹனூன் என்ற கிராமமும் இஸ்ரேலியத் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது.

உலக அரங்கில்

இந்த இராணுவ நடவடிக்கைகளில் கான்யூனுஸ் நகரில் 24 வயதான பலஸ்தீன இளைஞர் ஒருவரும், பெய்ட் கானூனிஸ் பலஸ்தீனப் பாதுகாப்புப் படை வீரர் ஒருவரும் உயிரிழந்ததாகப் பலஸ்தீனர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, கான்யூனுஸ் நகரில் செயற்பட்டு வந்த 6 ஆயுதத் தொழிற்சாலைகளைத் தகர்த்ததாக இஸ்ரேலிய இராணுவம் அறிவித்துள்ளது.

இஸ்ரேலியப் பொதுமக்கள் மீதான பலஸ்தீனத் தற்கொலைத் தாக்குதல்களால் விடுதலைப் போராட்டம் சர்வதேச அரங்கில் தவறான கண்ணோட்டத்தை ஏற்படுத்துவதாக பலஸ்தீன நிர்வாக சபை சனிக்கிழமை கூறியிருந்தது. இதனைத் தொடர்ந்து இஸ்ரேலிய இராணுவத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இந்த இராணுவ நடவடிக்கை தொடர்பாக பலஸ்தீனத் தீவிரவாதத் தலைவர் ஒருவர் கருத்துக் கூறுகையில் -

தேர்தலை எதிர்நோக்கியுள்ள இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன், தன் மீதான ஊழல் குற்றச்சாட்டிலிருந்து இஸ்ரேலியர்களைத் திசை திருப்பவே பலஸ்தீன நகரங்களை அழித்து வருவதாகக் குற்றஞ்சாட்டினார்.

1999ஆம் ஆண்டு தேர்தலில் ஏரியல் ஷெரோனின் பிரசாரச் செலவுகளைச் சமாளிக்க அவரது மகன் தென் ஆபிரிக்கர் ஒருவரிடமிருந்து 10 லட்சம் டொலர்களைப் பெற்றதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளதும் -

இஸ்ரேலில் அரசியல் நிதி உதவிகள் தடைசெய்யப்பட்டுள்ளதும் - குறிப்பிடத்தக்கவை. (ஒ)



இஸ்ரேலிய இராணுவத் தாக்குதலில் தனது வீட்டை இழந்து பலஸ்தீனப் பெண் ஒருவர் சோகமே உருவாக அமர்ந்திருக்கிறார்.

# 44ஆவது நாளாக ஈராக்கில் சோதனை

பக்தாத்,ஜன.13

பேரழிவு ஆயுதங்கள் ஈராக்கில் உள்ளதா என்பதைக் கண்டறியும் சோதனையை ஐ.நா.ஆய்வாளர்கள் 44ஆவது நாளாக நேற்று மேற்கொண்டனர். 4குழுக்களாக அவர்கள் சோதனையில் ஈடுபட்டனர்.

அணு ஆயுத நிபுணர்கள் குழு மேற்கு பக்தாத்தில் சோதனை மேற்கொண்டது. ஏவுகணை நிபுணர்கள் குழு கடந்த டிசெம்பரில் சோதனை மேற்கொண்ட பகுதியில் மீண்டும் சோதனை நடத்தப்பட்டது.

வடகொரியத் தலைநகரில் நேற்றுமுன்தினம் சுமார் 10 லட்சம் வடகொரியர்கள் அமெரிக்க எதிர்ப்புப் பேரணி ஒன்றை நடத்தினர். "கொரிய ஒற்றுமையைக் குலைக்கும் வகையில் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அமெரிக்காவை நசுக்குவோம்" என்று பொருள்படும் வாசகம் அடங்கிய பதாகையை பேரணியில் கலந்துகொண்டோர் சுமந்து வந்தனர்.



# வீரப்பனைத் தேடும் நடவடிக்கைக்கு மாநிலங்கள் கேட்கும் உதவி அதிகம்!

## இந்திய மத்திய அரசு தெரிவிப்பு

புதுடில்லி,ஜன.13

சந்தனமரக் கடத்தல்கார வீரப்பனைப் பிடிக்க தமிழக, கர்நாடக அரசுகள் கேட்கும் ஆயுதங்கள் மற்றும் கருவிகள் மிக அதிகமாக உள்ளன. அதனால், மாற்றுத்திட்டம் தயாரித்து அனுப்புமாறு இரு மாநிலங்களையும் இந்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது என்று உள்துறைச் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வீரப்பனைப் பிடிக்கும் நடவடிக்கைக்கு மத்திய அரசு என்னென்ன உதவிகளை வழங்கப்போகிறது, ஏற்கனவே உறுதியளித்தபடி 15 தினங்களுக்குள் அனைத்து உதவிகளும் வழங்கப்படுமா? என்று அவரிடம் கேட்டபோது, வீரப்பனைப் பிடிக்க தமிழக, கர்நாடக அரசுகள் கேட்கும் கருவிகள் மற்றும் ஆயுதங்கள் மிக அதிகமாக இருப்பதாக மத்திய அரசு கருதுகிறது. அதனால், அதற்குப் பதிலாக மாற்றுத்திட்டம் தயாரித்து அனுப்புமாறு இரு மாநில அரசுகளிடமும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றார்.

மத்திய படைகள் தேவையான அளவு அனுப்பப்படுமா என்று கேட்டதற்கு, அந்தப் படை எப்படிப் பயன்படுத்தப்படும் என்பது குறித்து விரிவான அறிக்கை அனுப்புமாறு மாநில அரசுகள் கோரப்பட்டுள்ளன. அதன் பிறகு, எவ்வளவு படை என்பது குறித்து முடிவுசெய்யப்படும் - என்றார் அந்த அதிகாரி. (ஒ)


கொம்பியூட்டர் டிப்ளோமா பாடநெறிகள்

* MS Office XP
* Computer Studies
* Desktop Publishing
* Web Design
* Computer Programming

அறிமுக கட்டணச் சலுகை 2,900/-

தமிழில் விளக்கங்களுடன் சான்றிதழ் மற்றும் டிப்ளோமா பாடநெறிகளுக்கான புதிய பிரிவுகள் ஒவ்வொரு வாரமும் ஆரம்பம்

சான்றிதழ் பாடநெறிகள்

Certificate in Pagemaking
Certificate in Corel Draw
Certificate in Photoshop
Certificate in Visual Basic
காலம் 3 மாதங்கள் Certificate in HTML

ASIAN COMPUTERS
2G, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
அறிமுக கட்டணச் சலுகை 31.01.2003 வரை மட்டுமே!
அனைத்து பாடநெறிகளுக்கும் பாடநூல்கள் இலவசமாக வழங்கப்படும்.

# பாடசாலை நாள்காட்டிகள்

இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் பாடசாலை நாள்காட்டிகள் வெளிவந்துள்ளன.

இந்த நாள்காட்டிகளை யாழ். மாவட்டச் செயலாளர் க.குமாரசாமியிடம் பெற்று விநியோகிக்குமாறு கிளைகளின் செயலாளர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (ஒ-3)


## இலக்கிய விமர்சனம்

**1) கோடை நாடகம்**

**2) நாகம்மாள் நாவல்**

ஆகிய நூல்களின் விளக்கமும் விமர்சனமும்

**3) தமிழ் மொழியில் இலக்கிய விமர்சனம்**

கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதியது.

(13103) விலை ரூபா 40.00.



## மகிழ்ச்சியுடன் பாராட்டி வாழ்த்துகிறோம்



எமது வணிக முகாமைத்துவ பீடாதிபதி திருவாளர்

**மா.நடராஜசுந்தரம்**

அவர்கள் படைத்த "சர்வதேச நாணய முகாமைத்துவம்" என்னும் நூலுக்கு வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் 2001ஆம் ஆண்டுக்கான சாகித்திய இலக்கிய விருது கிடைத்ததையிட்டு பேருவகை அடைவதுடன், அவரின் படைப்புக்களும், கல்விப் பணியும் மேன்மேலும் தொடர எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

முகாமைத்துவ மாணவர் மன்றம்.
யாழ்.பல்கலைக்கழகம்.

(13149)



உங்கள் வெளிநாட்டு பிரயாண டிக்கட் ஒழுங்குகளை யாழ்ப்பாணத்திலிருந்தவாறே நீங்கள் தற்பொழுது செய்துகொள்ளலாம்.

திருத்தலங்களைத் தரிசிக்கவும், வைத்திய ஆலோசனைக்காகவும், வியாபார நோக்கத்திற்காகவும் அல்லது குடும்பமாக உல்லாசப் பயணம் மேற்கொள்ள விரும்புகிறீர்கள என்றால் நாங்கள் உங்களுக்கு கைகொடுக்கத் தயாராக இருக்கின்றோம்.

இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, லண்டன், ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ், டென்மார்க், அவுஸ்திரேலியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் டிக்கட் ஒழுங்குகள் செய்துகொள்ளலாம்.

*மேலதிக தகவல்களுக்கு தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:*

**மனோ, ஜூட், றூபன்**

சிலிங்கோ ட்ரவல்ஸ் டுவர்ஸ் (லிமிட்)

"செலான் வங்கிக் கட்டடம்"

*560, 562, ஆஸ்பத்திரி வீதி,*

*யாழ்ப்பாணம்.*

தொலைபேசி: 021/2225063

(C/26001) கையடக்கத் தொலைபேசி: 0777/270196


## கண்ணீர் அஞ்சலி

எமது கழகத்தின் முன்னாள் தலைவர்

லயன் சு.தங்கநவமணிநாதன் அவர்களின் அருமைத்தாயார்

**திருமதி சுப்பிரமணியம் தெய்வானைப்பிள்ளை**

அவர்கள் 15.12.2002இல் காலமானார்.

எமது கழகத்தின் உறுப்பினர்

லயன் ந.தங்கராஜா அவர்களின் அருமைத்தந்தையார்

**சண்முகம் நடராசா**

அவர்கள் 21.12.2002இல் காலமானார்.

இவர்களின் மறைவிற்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம். பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு அனுதாபம் தெரிவித்து ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், உறுப்பினர்கள் - வடமராட்சி லயன்ஸ் கழகம்.

(C/25957)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள தலைமைப்பீட பெரும்பாக உத்தியோகத்தர்

திரு.ச.உருத்திரேஸ்வரன் *(அரியாலை)*

அவர்களின் அன்பு மாமியாரும்,

சட்டத்தரணி திரு.உருத்திரா அவர்களின் மைத்துனியும் ஆகிய நும்பளையைப் பிறப்பிடமாகவும், புலோலி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட

**திருமதி மகாதேவா பாலாம்பிகை** (தங்கம்)

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மசாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

விவசாய சம்மேளனங்கள் யாழ்.மாவட்டம். (13139) கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் - யாழ்.மாவட்டம்.

## கசிப்பு உற்பத்தி செய்த இடம் கண்டுபிடிப்பு

கசிப்பு உற்பத்தி செய்த இடம் ஒன்றைக் கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் பொலிஸார் கண்டுபிடித்தனர்.

இந்தப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் நீண்டநாள்களாகக் கசிப்பு உற்பத்தி செய்யப்பட்டது. தற்போது பொலிஸாரின் திடீர் நடவடிக்கையில் அந்த இடம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (ஒ-17)

## சட்ட விரோத மின்பாவனை கண்டுபிடிப்பு

சண்டிலிப்பாய்,ஜன.13

மூளாய்ப்பகுதியில் மின்கம்பம் ஒன்றிலிருந்து சட்டவிரோதமாக பத்துக்கும் அதிகமான வீடுகளில் நீண்டகாலமாக மின்சாரம் பெறப்பட்டு வந்ததை இலங்கை மின்சாரசபையின் வட்டுக்கோட்டை உப அலுவலகத்தினர் கண்டு பிடித்தனர்.

எளிதில் கண்டுபிடிக்கமுடியாத வகையில் நிலத்துக்கு அடியில் வயரைப் புதைத்து சட்டவிரோதமான முறையில் இப்பகுதியில் மின்சாரம் பெறப்பட்டது. இரகசிய தகவல் ஒன்றையடுத்து குறிப்பிட்ட பகுதியில் கடந்த வாரம் திடீர்பரிசோதனையில் ஈடுபட்ட இலங்கை மின்சார சபை அலுவலர்கள் இந்த மின்சாரத் திருட்டைக் கண்டுபிடித்தனர்.

சட்டவிரோதமாக மின்சாரம் பெறப்பட்டதன் காரணமாக இப்பகுதியில் அடிக்கடி மின்தடை ஏற்பட்டு வந்தது. மேற்படி சட்டவிரோதமான மின்பாவனைக்கு பயன்படுத்தப்பட்ட மின் வயர்களும் ஏனைய மின் உபகரணங்களும் பறிமுதல் செய்யப்பட்டன. இந்தச் சட்டவிரோத மின்பாவனையைக் கண்டுபிடிப்பதில் கலாசாரத்தைப் பேணும் இளைஞர்கள் உதவியதாகக் கூறப்படுகிறது. (ஒ-135)

## காவலாளிகள் பணி நீக்கம்

வலி.வடக்கு,ஜன.13

யாழ்.செயலக புனர்வாழ்வுப் பகுதியில் கடமையாற்றிய காவலாளிகள் ஐவர் வேலையிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

இம்மாதம்முதல் எந்தவகையான முன்னறிவித்தலும் இன்றி வேலையிலிருந்து நீக்கப்படுவதாகப் புனர்வாழ்வுப் பகுதியில் இருந்து இவர்களுக்கு கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவர்கள் கடந்த இரண்டு வருடங்களுக்கும் மேலாகத் தற்காலிக ஊழியர்களாக நாள் சம்பளம் அடிப்படையில் கடமையாற்றி வந்தவர்களாவர்.

இவர்கள் புனர்வாழ்வுப் பகுதிக்கான களஞ்சியங்களில் காவலாளிகளாகக் கடமையாற்றிவந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-86)

## அம்புலன்ஸ் பற்றாக்குறை

யாழ்ப்பாணம்,ஜன.13

யாழ். போதனா வைத்தியசாலையில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக கொழும்புக்கு அனுப்பும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஆயினும், அம்புலன்ஸ் வாகனப் பற்றாக்குறையால் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே நோயாளர்களைக் கொழும்புக்கு அனுப்பவேண்டிய நிலை இருந்துவருவதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனால் பல நோயாளர்கள் உரிய நேரத்தில் மேலதிக சிகிச்சையைப் பெறமுடியாத நிலையில் சிகிச்சை தாமதம் அடைந்து செல்வதுடன் உயிர் ஆபத்துக்களை, உபாதைகளை சந்திக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஒ-15-139)

## தேசிய விளையாட்டு விழா குறித்த கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.13

இவ்வாண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள தேசிய விளையாட்டு விழா பற்றி ஆராய்வதற்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 23ஆம் திகதி வியாழக்கிழமை யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது. இக் கலந்துரையாடலில் பங்குபற்றுவதற்கென விளையாட்டு அமைச்சின் செயலாளர் என்.ஜி. புஞ்சிவேவ தலைமையிலான அதிகாரிகள் குழுவொன்று எதிர்வரும் 22ஆம் திகதி புதன்கிழமை யாழ். வருகைதரவுள்ளது.

இக்குழுவில் விளையாட்டு அமைச்சின் பொதுப்பணிப்பாளர் ஏ.ஏ.மில்ரன் அமரசிங்க, பணிப்பாளர் சுனில் ஜெயவீர ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். (ஒ-8)


## மனமாரப் பாராட்டுகின்றோம்

சங்கானை, மக்கள் வங்கியின் நடமாடும் பிரிவு நாளை **(14.01.2003)** செவ்வாய்க்கிழமை வட்டுக்கோட்டையில் ஆரம்பிக்கப்படுவதை இட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம். இத்தருணத்தில் வங்கி முகாமையாளர் திரு.பொ. **அச்சுதம்பிள்ளை** அவர்களையும் வாழ்த்துவதோடு, அவர்தம் சேவை எமது பிரதேசத்தில் தொடர இறைவனை வேண்டி நிற்கிறோம்.

அன்புடன் வாடிக்கையாளர்கள்:
பொ.தனபாலசிங்கம்,
ச.ஐங்கரன்.

(C/25986)



## Jaffna College Institute of Technology

**Vaddukoddai**

The Following Courses to Commence From 16th January, 2003 (Day/Evening)

- **Certificate Course in Printing Technology**
  (3-4 Months) Fees:- Rs. 2,500/=
  *(Includes Adobe Page Maker, Corel Draw & Adobe Photo Shop)*
- **Certificate Course in Business & Scientific Application** (3-5 Months)
  - Ms Word
  - C/C++
  - Ms Excel
  - Visual Basic
  - Ms Access
  - Java

  Fees:- Rs. 1000/= per module
- **Certificate in Building Construction Technology**
  (6months) Fees:- Rs.3,025/=
- **Diploma in Civil Draughtsmanship**
  (1 Year) Fees:- 1,500/=

*Application Forms available at:*

- **JCIT, Vaddukoddai.**
- **Undergraduate Department, Jaffna College**
  (Hospital Rd., Jaffna)

**Director**
**Jaffna College Institute of Technology**
**Vaddukoddai.**

T.Phone: 070 213139 (C/26005) E-Mail: jcit@sltnet.lk


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
20
03
1947



மறைவு
14
12
2002

## அமரர் நாகேந்திரம் நாகேஸ்வரி (வவா)

*மாதம் ஒன்று ஆயினும் ஆறவில்லை எம் துயரம்*
*எத்தனை உறவுகள் எமக்கிங்கு இருப்பினும் நித்தம் அம்மா*
*என்றழைக்க இவ்வுலகில் நீங்கள் இல்லையே அம்மா*
*நெஞ்சம் மறக்குமா எம் இதயத் தெய்வத்தின்*
*இழப்பினை! மார்கழி திருவெம்பாவில் சென்றாயோ?*
உங்கள் ஆத்மா சாந்தியடைய எங்கள் குலதெய்வமாம்
வைரவர் பெருமானை வேண்டுகிறோம் அம்மா!

14.12.2002 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவியின் மரணச் செய்திகேட்டு பல வழிகளிலும் உதவி செய்தோருக்கும், தொலைபேசிமூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், அனுதாப அஞ்சலி பிரசுரித்தோருக்கும் மற்றும் இரங்கலுரை வழங்கியோருக்கும், நேரில்வந்து அனுதாபம் தெரிவித்தோருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இத்துடன் இன்று (13.01.2003) திங்கட்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் வேண்டுகிறோம்.

*சி.நாகேந்திரம்,*
*913, நாவலர் வீதி,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.*

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரர்கள்.

(12884)

## மரண அறிவித்தல்

### செல்வநாயகம் அச்சுதன்

மானிப்பாய், மூத்த தம்பி வீதியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட செல்வநாயகம் அச்சுதன் 03.01.2003 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் செல்வநாயகம் - இரத்தினகாந்தி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் வேல்வேந்தன் (கனடா), சிவானந்தன் கௌசுகி (அவுஸ்திரேலியா), தட்சனி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.01.2003) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும்.

*மூத்ததம்பி வீதி,*
*மானிப்பாய்.*

(13113)

தகவல்:
ந.சிதம்பரநாதன் (மாமா)

உதயன்

## ஜனாதிபதிக்கு பாலாவின் செய்தி

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுகள் வெற்றிபெற வேண்டும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இன்றைய ஆட்சியல் பேச்சுமூலம் இனப்பிரச்சினைக்கு எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுகண்டு சமாதானத்தை ஏற்படுத்தினால்தான் உண்டு.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆட்சிப் பொறுப்பை ஏற்றால் பேச்சு நடக்காது; சண்டைதான் நடக்கும். பிரச்சினை தீராது; சமாதானம் வராது.

இப்படி விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியரும் பேச்சுகளின் புலிகள் தரப்புக் குழுத் தலைவருமான அன்ரன் பாலசிங்கம் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார்.

பேச்சுகளின் ஆரம்பத்திலேயே புலிகளின் ஆயுதங்களைக் களைய வேண்டும் என்று ஜனாதிபதி முன்னரே வற்புறுத்தத் தொடங்கிவிட்டார். அதற்கு மேலதிகமாக, புலிகள் தங்களின் கரும்புலிகள் படைப் பிரிவைக் கலைக்கவேண்டும் என்று ஜனாதிபதி இப்போது புதிதாகக் கோரிக்கை விடுத்து வருகிறார்.

இது கபடத்தனமானது என்று அன்ரன் பாலசிங்கம் சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

1994 ஜனாதிபதித் தேர்தலின்போது சந்திரிகா குமாரதுங்கவை எதிர்த்துப் போட்டியிட்ட ஐ.தே.க. வேட்பாளர் காமினி திஸநாயக்கா படுகொலை செய்யப்பட்டார். அதற்கு விடுதலைப் புலிகள் மீது குற்றஞ்சாட்டப் பட்டது. எனினும், புலிகளின் ஆயுதங்களைக் களைய வேண்டும் என்றோ அல்லது கரும்புலிகள் படைப்பிரிவு கலைக்கப்படவேண்டும் என்றோ அப்போது சந்திரிகா குமாரதுங்க கோரிக்கை விடுக்கவில்லை.

அப்படிக் கோரிக்கை விட்டால் பேச்சு நடக்காது என்று அவருக்குத் தெரியும்.

அதுமட்டுமா, சுமார் ஆறு மாதங்களாக அவருடைய அரசு விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தியது. அப்போதும் அவர் ஆயுதக் களைவு நிபந்தனை விதிக்கவில்லை.

இப்போது மட்டும் ஆயுதக் களைவு, கரும்புலிகள் படைப்பிரிவுக் கலைப்பு என்றெல்லாம் அவர் கூறிக்கொண்டிருப்பது தற்சமயம் ரணில் அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் நடைபெற்றுவரும் பேச்சுக்களைத் தொடர்ந்து நடைபெறாமல் செய்வதற்குத்தான்.

ரணில் அரசுக்குத் தொந்தரவு கொடுப்பதற்கு இதையும் ஓர் ஆயுதமாக ஜனாதிபதி பயன்படுத்துகிறார்.

உலகெங்கும் மக்களின் விடுதலைப் போராட்டங்கள் சம்பந்தமான பேச்சுக்களில் எப்பொழுதும் கடைசிக் கட்டத்திலேயே ஆயுதக் களைவு விடயம் எடுத்துக் கொள்ளப்படுகின்றது. ஏனெனில், அது மக்களின் பாதுகாப்புத் தொடர்பானது.

"எங்களுடைய போராட்டத்தின்போது முக்கியமாக அரசுப் படைகளிடமிருந்து ஆயுதங்களைக் கைப்பற்றிக் கொள்வதற்காக எங்களுடைய போராளிகள் 17 ஆயிரம் பேர் உயிர்த் தியாகம் செய்யவேண்டி இருந்தது. பிரச்சினைக்குப் பேச்சுமூலம் தீர்வுகாண்பதற்கு முன்னர் அந்த ஆயுதங்களைத் திருப்பிக்கொடுத்தால் என்ன நடக்கும்?

"ரணில் விக்கிரமசிங்க அரசை ஜனாதிபதி உடனே கலைத்துவிட்டு தாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு இராணுவத்தை எம்மீது ஏவிவிட்டால் எங்கள் போராளிகள் அத்தனை பேரையும் இராணுவம் கொன்றுகுவித்துவிடும். அதற்கு நாம் இடமளிக்க முடியுமா?" என்று கேட்டார் அன்ரன் பாலசிங்கம்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீது தமக்குள்ள அவநம்பிக்கையையும் அன்ரன் பாலசிங்கம் வெளியிட்டார்.

சமாதான முயற்சிகளை ஊக்குவிக்கும் எண்ணம் ஜனாதிபதிக்கு அறவே இல்லை. சமாதான முயற்சிகளைத் தாமே தொடக்கிவைத்தார் என்று அவ்வப்போது அவர் பெருமையாகக் கூறிக்கொண்டாலும் நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுகளுக்கு அவர் எதிராகவே இருக்கிறார். பேச்சுமூலம் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படக்கூடாது என்றும் அவர் விரும்புகிறார்.

அவர் தம்மைச் சமாதானத் தேவதையாகக் காட்டிக்கொண்டாலும் உண்மையில் அவர் சண்டைப் பிரியர். அவர் மீது புலிகள் இயக்கத்துக்கு நம்பிக்கை இல்லை. அவர் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் அவருடன் சமாதானப் பேச்சு நடத்தும் நிலையில் விடுதலைப் புலிகள் இல்லை. ஏனெனில், அவருக்கு சமாதானத்தில் நம்பிக்கை இல்லை. அவருடைய நாட்டம் முழுவதும் போரில்தான்.

"அவருக்கு ஏதாவது சொல்வதானால் ஒன்றை மட்டும் சொல்லலாம்.

"நாட்டுமக்கள் அனைவரது நலனுக்காகவும் பிரச்சினையைத் தீர்க்கவேண்டியது அவசியம். அதனால், பேச்சுகளுக்கு முட்டுக்கட்டை போடாமலும் பேச்சுகளுக்கு எதிராகப் படையினரைத் தூண்டி விடாமலும் ரணில் விக்கிரமசிங்கவின் இன்றைய அரசு பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உதவுங்கள். உண்மையான தலைவியாக நடந்துகொள்ளுங்கள் என்று அவரைக் கேட்டுக் கொள்ளலாம். அவ்வளவுதான்" - என்றார் அன்ரன் பாலசிங்கம்.

# சாட்டுப் போக்குகள் சொல்லாது 'லைசென்ஸ்' எடுப்பதே சிறந்த வழி!

## யாழ்.நீதிவான் அறிவுறுத்தல்



யாழ்ப்பாணம்,ஜன.13

சாட்டுப் போக்குச் சொல்லாது அனைவரும் சாரதி அனுமதிப் பத்திரங்களைப் பெறுவதே வீதி ஒழுங்கு நடவடிக்கையை சீர்செய்ய உகந்த ஒத்துழைப்பாகும்.

- இவ்வாறு யாழ்.மாவட்ட நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா தெரிவித்தார்.

நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் 'உதயன்' பத்திரிகை நிறுவனத்தின் அனுசரணையுடன் இடம்பெற்ற வாகனச் சாரதிகளுக்கான செயலமர்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

பலர்வாகன சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு விண்ணப்பிக்காமலேயே உள்ளனர்.

அவர்கள் ஒவ்வொருவரும் அதற்கு ஏதோ ஒரு சாட்டுப் போக்கினைச் சொல்லுகின்றனர். இத்தகைய போக்கைக் கைவிட்டு சாரதி அனுமதிப்பத்திரத்தினை அவர்கள் பெறுவது வீதிப் போக்குவரத்தினை சீர்படுத்த பெரிதும் உதவும்.

நாம் முதலில் எமது கடமையைச் செய்யவேண்டும். அப்போதுதான் எமக்கு மட்டுமன்றி பிறருக்கும் பிரச்சினைகள் உருவாகாது தடுக்கமுடியும். இன்று பலரும் வீதிகளில் பொலீஸாருடன் தர்க்கத்தில் ஈடுபட்டுக்கொண்டிருப்பதைக் காணமுடிகிறது. சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதில் சிரமம் இருப்பது உண்மைதான். ஆனால், நாம் எமது கடமையைச் செய்கிறோமா? இல்லையே. நீதிமன்றில் வாகனச் சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாமை சம்பந்தமாக முறைப்பாடுகள் வரும்போது சம்பந்தப்பட்டவர்களிடம் 'நீங்கள் சாரதி அனுமதிப்பத்திரத்துக்கு விண்ணப்பித்திருக்கிறீர்களா?' என்பதைத்தான் முதலில் கேட்கிறேன். ஆனால், பெரும்பாலானவர்கள் அதற்கான முயற்சியைக் கூட எடுத்ததாகத் தெரியவில்லை.

அவ்வாறு இருக்கும்போது எப்படி தண்டப்பணம் பெறாமல் விடுவிக்கமுடியும்.

சிலர் நீதிமன்றில் அனுமதிப்பத்திரம் தொலைந்துவிட்டது, கொழும்பில் வைத்துவிட்டு வந்துவிட்டோம் என்றெல்லாம் பொய் கூறுகிறார்கள். இத்தகைய செயல்கள் நிறுத்தப்படுதல் வேண்டும் என்று அவர் தெரிவித்தார். (ஒ-12)

## வீதி ஒழுங்கை மீறுவோரை இப்போது தண்டிக்கலாம்

# 'லைசென்ஸ்'வழங்கல் சீரான பின்னரே சோதனை நடவடிக்கை நியாயமாகும்!

## மோட்டார் திணைக்கள அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.13

முதலில் சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கும் நடவடிக்கையைச் சீர்செய்த பின்னர் அனுமதிப் பத்திரம் இல்லாதோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதே நியாயமானது.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் மோட்டார் திணைக்கள யாழ். பிராந்திய உதவி ஆணையாளர் வி.பத்மநாதன்.

நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடத்தப்பட்ட செயலமர்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கும் நடவடிக்கைகள் சீராக இடம்பெறவில்லை. இந்த நிலையில், சாரதி அனுமதிப் பத்திரத்தை சோதனையிடுவதில் பொலீஸார் சற்று நெகிழ்ச்சிப் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டியதாக உள்ளது.

சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதனை வேகப்படுத்தும் நடைமுறைகள் இன்னமும் ஏற்படுத்தப்படவில்லை. ஒரு தடவையில் சுமார் ஐந்நூறு பேருக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்க முடிந்தாலும்கூட 4ஆயிரத்துக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் தேங்கியுள்ளன.

ஒரு விண்ணப்பம் பெறப்பட்டு ஆறு மாதத்தினுள் அனுமதிப் பத்திரம் வழங்கப்படாது விட்டால் அந்த விண்ணப்பம் செல்லுபடியற்றதாகிவிடும்.



எனவே தொடர் நடமாடும் சேவை ஒன்றினை மேற்கொண்டு இந்த பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்ட பின்னரே பொலீஸார் சாரதி அனுமதிப் பத்திரத்தினை சோதனையிடும் நடவடிக்கையில் அக்கறை காட்டவேவண்டும்.

வன்னிப் பகுதியில் பெரும்பாலான வாகனங்கள் எந்தவிதப் பதிவுகளும் இல்லாது உள்ளன. வன்னியில் இருந்து அத்தகைய வாகனங்கள் இங்கு கொண்டு வரப்பட்டுள்ளன. இந்த நிலையில், திடீர் என நாம் வாகனக் காப்புறுதி, வாகன அனுமதிப் பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம் போன்றவற்றை வலியுறுத்துவதில் எந்தவித நியாயமும் இல்லை.

அவர்களுக்கு போதுமான கால அவகாசம் வழங்கப்பட்ட பின்னரே அவர்களிடம் அவற்றைக் கேட்பது சாத்தியமாகும்.

முதலில் வீதிப் போக்குவரத்திற்கு இடையூறாக சமாந்தரமாக சைக்கிள் ஓடுபவர்கள், பதினெட்டு வயதிற்குக் குறைவான வாகனச் சாரதிகள், ஒரு வழிப்பாதையில் எதிர்த்திசையில் பயணிப்போர் போன்றவர்கள் மீது நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என்றார் அவர். (ஒ-12)



கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வந்திருந்த ஜேர்மன் நாடகக்குழுவினர் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் 'கனவுப் பெட்டகம்' என்ற நாடகத்தை மேடையேற்றினர். அந்த நாடகத்தை வழங்கிய ஜேர்மனிய நடாகக் குழுவினரைப் படத்தில் காணலாம். *(படம்: வசந்தன்)*

## பஸ்ஸில் பணம் அபகரிப்பு

கொழும்புத்துறை,ஜன.13

பஸ்ஸில் பயணம் செய்த பெண்மணி கைப்பையில் வைத்திருந்த 96ஆயிரம் ரூபா பணம் அபகரிக்கப்பட்ட சம்பவம் சமீபத்தில் இடம்பெற்றது.

சாவகச்சேரியைச் சேர்ந்த ஆசிரியை ஒருவரே பணத்தைப் பறிகொடுத்துள்ளார்.

யாழ்.நகர வங்கியொன்றில் தனது கணக்கிலிருந்து 96 ஆயிரம் ரூபாவை மீளப் பெற்ற இந்த ஆசிரியை சாவகச்சேரி செல்வதற்காக பஸ்ஸில் ஏறி அமர்ந்ததாகவும் -

அப்போது கைக்குழந்தையுடன் ஏறிய பெண் ஒருவர் ஆசிரியை அருகே அமர்ந்ததாகவும் -

பஸ் புறப்பட்ட பின்னர் குழந்தை ஆசிரியை வைத்திருந்த கைப்பை மீது தலை சாய்த்து உறங்கிக்கொண்டிருந்ததாகவும்-

யாழ்.திருக்குடும்ப கன்னியர்மட பஸ் தரிப்பிடத்தில் குழந்தையும் தாயும் இறங்கிச் சென்றுவிட்டதாகவும் -

அப்போது தான் கைப்பை திறக்கப்பட்டு பணம் அபகரிக்கப்பட்டமை தெரிய வந்ததாகவும் -

கூறப்படுகிறது.

ஆசிரியை வங்கியில் பணம் எடுத்ததை அவதானித்த பெண்ணே குழந்தையை உறங்க வைக்கும் போர்வையில் பணத்தை அபகரித்ததாக நம்பப்படுகிறது. (ஒ-15-30)

## புற்றுநோய் சிகிச்சை முகாம்

யாழ்ப்பாணம்,ஜன.13

தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையில் புற்றுநோயாளர்களுக்கான சிகிச்சை முகாம் எதிர்வரும் 15ஆம், 16ஆம் திகதிகளில் நடைபெறும் என சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் நவமலர் கனகரத்தினம் தெரிவித்தார். சிகிச்சை முகாமுக்கு நோயாளர்களை அழைத்துச் செல்வதற்கான ஒழுங்குகளை வலி.வடக்குப் பிரதேச சபை மேற்கொண்டுள்ளது. (ஒ-15-139)

### நாளை

மார்கழி 30
செவ்வாய்க்கிழமை
(14.01.2003)
திதி : ஏகாதசி
பிற்பகல் 2.55 வரை
நட்சத்திரம: கார்த்திகை
முற்பகல் 11.17வரை.
சுவர்க்கவாயில்
ஏகாதசி விரதம்
சுபநேரம் : 11.04 - 12.34
ராகுகாலம் : 3.34 - 5.04
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

கொள்கையற்றவரிடமிருந்து அன்பை எதிர்பார்ப்பது மூடத்தனமாகும்.

# ஆயுர்வேத மருத்துவர்களிடம் ஆங்கில மருந்து பெறவேண்டாம்!

## சுகாதார அதிகாரி வலியுறுத்து

வட்டுக்கோட்டை,ஜன.13

ஆயுர்வேத வைத்தியர்களிடம் அலோபதி முறையில் சிகிச்சை பெறுவதை பொதுமக்கள் தவிர்த்துக்கொள்ளவேண்டும். வலி.மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கணேஷ்வரராஜா இவ்வாறு கோரிக்கைவிடுத்தார்.

ஆயுர்வேத வைத்தியர்கள் ஆங்கில மருந்துகளை நோயாளர்களுக்கு வழங்கிவருகின்றனர். ஆங்கில மருந்துகள் பற்றி பூரணமாகத் தெரிந்துகொள்ளாதவர்களால் இந்த மருந்துகள் வழங்கப்படுகின்றன. இதனால் பின் விளைவுகளும், வேறு தாக்கங்களும் நோயாளிகளுக்கு ஏற்படுகின்றன.

இதனை உடனடியாகத் தடைசெய்வதற்குரிய ஆளணி எம்மிடம் இப்போது இல்லை. ஆகவே, ஆயுர்வேத மருத்துவர்களிடம் ஆங்கில மருந்துகளைப் பெற்றுக்கொள்வதை நோயாளிகளோ தவிர்த்துக்கொள்ளவேண்டும்.

இவ்வாறு மேலும் தெரிவித்தார் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி. (ஒ-ரி)

## புற்றுநோயாளர்களுக்கு!

புற்றுநோய் வைத்திய நிபுணர் மீண்டும் 15ஆம், 16ஆம் திகதி களில் பார்வையிடவுள்ளார். நோயாளர்கள் உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

புற்றுநோய் இரத்தப் பரிசோதனையும் நடைபெறுகின்றது.

**சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்**

08, இராமையாச் செட்டியார் வீதி
(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்),
யாழ்ப்பாணம்.

(13100)


## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி

**இரஞ்சிதபூரணி கோபாலகிருஷ்ணன்**

*(இளைப்பாறிய அந்தரங்கக் காரியதரிசி - மக்கள் வங்கி)*



தோற்றம் 09-10-1939 மறைவு 13-01-1999

எம் அன்புத் தெய்வமே!
ஆண்டுகள் பல மாறலாம்
ஆனால் எங்கள் நெஞ்சங்கள்
இருக்கும் வரை உங்கள்
நினைவுகள் என்றும் நீங்கா.

கணவர், மகன், சகோதரர்கள்.

51/7, செட்டித்தெரு,
நல்லூர். (13012)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 22 - 06 - 1922



ஆண்டவனின் அடியில் 15 - 12 - 2002

அமரர்

**சுப்பிரமணியம் தெய்வானைப்பிள்ளை**

*(தங்கம்மா)*

அன்பிற்கும் பாசத்திற்கும் உறைவிடமாய்,
அரவணைத்து, பொறுமையுடன் கரிசனையாய்
பாசத்துடன் எமை வளர்த்த அன்புத்தாயே!
*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

புலோலி தெற்கு,
புலோலி. (13118) - குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் உயிராய் 15 - 04 - 1917



விண்ணில் ஒளியாய் 14 - 12 - 2002

**திருமதி சின்னத்தம்பி இரத்தினம்**

தரணியில் எம்மைப் பண்புடன் வாழவைத்த தாயே!
தனிமையில் எம்மை வாடவைத்துச் சென்றது விந்தையே!
பிரியமுள்ள எங்கள் அன்புத் தாயே! கண்ணைஇமை
காப்பதுபோல் காத்துநின்று எங்கள் உயர்வுக்கு
வழிகாட்டிய அன்புள்ள அம்மாவே!
*உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல கந்தரோடை அருளானந்தப் பிள்ளையாரைப் பிரார்த்திக்கின்றோம்.*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

(13053)

*"இலக்ஷ்மி வாசா"*
*தமிழ்கந்தையா*
*உபாத்தியார் வீதி,*
*கந்தரோடை, சுன்னாகம்.*

பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
மருமக்கள், பூட்டப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

## சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கத் திட்டம்

குருநகர்,ஜன.13

குருநகர் பகுதி மக்களிடையே நாளாந்த சேமிப்புப் பழக்கத்தினை ஊக்குவிக்கும் நோக்குடன் சிலிங்கோ வீடமைப்பு கடன் சங்கத்தினால் சேமிப்பு உண்டியல் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. (ஒ-51)

## புலோப்பளை மக்கள் குடிதண்ணீருக்கு அலைச்சல்

தென்மராட்சி,ஜன.13

புலோப்பளை பகுதியில் மீளக் குடியமர்ந்த மக்கள் தினமும் இரண்டு மைல்களுக்கு அப்பால் குடிதண்ணீர் எடுப்பதற்குச் செல்லவேண்டியுள்ளது.

இப்பகுதியில் பளைப் பிரதேச சபையினால் அமைக்கப்பட்டிருந்த மூன்று குழாய்க் கிணறுகளும் யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்துள்ளன. இதனால் இப்பகுதி மக்கள் அல்லிப் பழை, பளை நகரம் ஆகிய பகுதிகளுக்குச் சென்று குடிதண்ணீர் எடுக்க வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. சேதமடைந்துள்ள குழாய்க் கிணறுகளைத் திருத்தித் தருமாறு பிரதேச சபைத் தலைவரையும் பிரதேச செயலரையும் கோரியுள்ளதாக இப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (ஒ-117)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் நிலவும் குறைகள்

தென்மராட்சி,ஜன.13

சாவகச்சேரி ஆஸ்பத்திரி வார்ட்டுகளில் தங்கிச் சிகிச்சைபெறும் நோயாளிகளுக்கு ஆஸ்பத்திரியினால் உணவு வழங்கப்படாததால் தூர இடங்களிலிருந்துவந்து தங்கியுள்ள நோயாளர்கள் கஷ்டமுறுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆஸ்பத்திரியை அண்டிய பகுதியில் சிற்றுண்டிச்சாலை எதுவும் இல்லாததால் கொதிநீர் பெறுவதற்கும், உணவுகள் வாங்குவதற்கும் அரை மைலுக்கு அப்பால் உள்ள சாவகச்சேரி நகருக்கு வரவேண்டியுள்ளதாக நோயாளர் தரப்பில் கூறப்படுகிறது.

வடமராட்சி கிழக்கு, இயக்கச்சி, பளை போன்ற இடங்களிலிருந்து நோயாளர்கள் இந்த ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஆஸ்பத்திரியில் ஓரிரு லாந்தர் விளக்குகளே உள்ளதால் இரவில் நோயாளர்கள் வெளிச்ச வசதியின்றி சிரமப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

## காணாமற்போனோர் தொடர்பாக 61 முறைப்பாடுகள்

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் கடந்த வருடம் காணாமற்போனோர் தொடர்பான 61முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டதாகத் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பாளர் கிங்ஸ்லி பாஸ்கரன் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:-

கடந்த வருடம் காணாமற்போனோரது எண்ணிக்கை மட்டு., அம்பாறை மாவட்டங்களிலேயே அதிகம் உள்ளது.

இரு மாவட்டங்களிலும் 61பேர் காணாமற்போயுள்ளதாகப் பதிவுசெய்யப்பட்டது.

அவர்களில் 14பேர் மீண்டும் வீடு திரும்பிவிட்டனர். ஒருவரின் சடலம் பின்னர் மீட்கப்பட்டது. மிகுதி 46பேர் இதுவரையில் கண்டு பிடிக்கப்படவில்லை - என்றார் அவர். (ஒ-9)

## ஏகாதசி நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜன.13

கிளிநொச்சி, வட்டக்கச்சி ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோயிலில் இன்று திங்கட்கிழமை இரவு வைகுந்த ஏகாதசி விழா நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் நண்பகல் 12 மணிக்கு புதிதாக அமைக்கப்பெற்ற வைகுந்தத்துக்கு கும்பாபிசேகம் இடம்பெற்று, நள்ளிரவு 12 மணியளவில் சுவர்க்க வாசல் திறப்பு நிகழ்வு இடம்பெறும். (எ-10)


## விற்பனைக்கு

இளசு 150 மொடல் வான் இரைத கட்டு பெட்டி விற்பனைக்குண்டு.

*"அமுதக்கடல்"*
*254, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
T.P: 222 3508 (13126)



# கலாலயா

## பயிற்சியகம்

*மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்*
*(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)*

மகளிருக்கான மனைப்பொருளியலும் கைத்திறனும்
6மாத டிப்ளோமா பயிற்சிநெறி

- கேக் ஐசிங்
- கைவேலை
- உணவு தயாரித்தல்
- உடை தயாரித்தல்
- பூ வேலை
- FABRIC PAINTING

★ மேற்படி பயிற்சிகள் அனைத்தையும் பயில்வோருக்கு கூந்தல் அலங்காரம், மணப்பெண் அலங்காரம், கோலம் என்பன இலவசமாகப் பயிற்றுவிக்கப்படும்.

★ பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

★ இப்பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது!.

கிழமை நாள் பயிற்சிகள்
காலை 9.30 மணிமுதல் பி.ப.1.30 மணிவரை
திங்கள், செவ்வாய், புதன் ஆகிய நாள்களில் நடைபெறும்.
**ஆரம்பம்: 20-01-2003**

சனி, ஞாயிறு பயிற்சிகள்
காலை 9.30 மணிமுதல் பி.ப.2.30 மணிவரை நடைபெறும்.
**ஆரம்பம்: 19-01-2003**

→ மேலும் விவரங்களை பி.ப.2..00 மணிவரை நேரில் அறிந்துகொள்ளலாம்.

(C/26003) **இயக்குநர்.**


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 19 - 08 - 1936



இறைவன் அடியில் 25 - 12 - 2001

**அமரர் கந்தர் சின்னத்தம்பி**

*திதி - 13-01-2003*

*என்றும் உங்கள் நினைவுடன்:*

*கைதடி மேற்கு,*
*கைதடி* (12852) - குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 26 - 10 - 1916



மறைவு 14 - 12 - 2002

**திருமதி சரஸ்வதி சின்னையா**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (13.01.2003) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*ஞானவைரவர் வீதி,*
*கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.* (13134) - குடும்பத்தினர்.

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**அழகையா ஸ்ரானிலி சத்தியநாதன்**

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

*அதிகார் செல்லமுத்து வீதி,*
*மானிப்பாய் தெற்கு,*
*மானிப்பாய்.* (13104)

சரோஜினிதேவி (மனைவி).

# கைத்தொழில் பயிற்சி சபையின் சேவைகள் வடக்கு - கிழக்கிற்கும்

## வன்னி இளைஞர்களுக்கும் தொழில்வாய்ப்புகள்

கொழும்பு,ஜன.13

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சமாதானத் திட்டத்தின் மற்றும் ஓர் அங்கமாக தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் சேவைகள் வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்குத் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவு கிட்டியிருப்பதால் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும் இச்சேவைகள் இடம்பெறும். இதனால் கடந்த 18 வருடகாலமாகப் புறக்கணிக்கப்பட்டிருந்த வடக்கு, கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பல ஆயிரம் தமிழ் இளைஞர்கள் நன்மையடைவர்.

- இவ்வாறு கூறினார் தேசிய தொழில் பயிற்சிகள் மற்றும் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் தலைவர் அஜித் கொலன்னே.

இப்பயிற்சித் திட்டம் தொடர்பாக விளக்கம் அளிக்கும் வகையில் மேற்படி அதிகாரசபையின் தலைமை அலுவலகத்தில் செய்தியாளர் மாநாடு ஒன்றையும் அவர் நடத்தினார்.

அங்கு விளக்கம் அளித்த அதிகார சபையின் தலைவர், 'வடக்கு - கிழக்கு மாகாண இடம்பெயர் தொழில் வழிகாட்டல் சேவை' என்ற பெயரில் மூன்றாம் நிலைக் கல்வி அமைச்சின் அனுசரணையுடன் தேசிய தொழிற் பயிற்சி மற்றும் கைத்தொழில பயிற்சிகள் அதிகாரசபை, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் என்பன இதனைச் செயற்படுத்தவுள்ளன என்றார்.

"இத்திட்டத்திற்கு ஜேர்மனிய அரசு ஆரம்ப உதவியாக 20 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியிருக்கின்றது. அதேவேளை, ஜேர்மனிய அரசின் தொழில்நுட்ப ஏஜென்ஸி நிறுவனம் தொழில்நுட்ப ஆலோசனைகளையும் பயிற்சிகளையும் வழங்கும்'' என்றும் அவர் கூறினார்.

செய்தியாளர் மாநாட்டில் அபிவிருத்திச் சபையின் பிரதித் தலைவர் பி.தயாபரன், ஜேர்மன் தொழில்நுட்ப ஏஜென்ஸி நிறுவனத்தின் வதிவிட இயக்குநர் ரோலண்ட் எம்.ஸ்டியூரர், திட்ட இணைப்பாளர் செல்வி உட்டா மோர்ஜஸ் ஆகியோரும் கலந்து கொண்டு விளக்கம் அளித்தனர்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள எட்டு மாவட்டங்களும் மூன்று வலயங்களாகப் பிரிக்கப்பட்டு இப் பயிற்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்கள் ஒரு வலயம் -

வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய மாவட்டங்கள் ஒரு வலயம் -

மட்டக்களப்பு மாவட்டத்தையும் அம்பாறை மாவட்டத்தையும் இணைத்து ஒரு வலயம்.

- இந்த விதமாக நடைமுறைப் படுத்தப்படும்.

யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு ஆகிய நகரங்களில் மூன்று மத்திய நிலையங்கள் நிறுவப்படும். அங்கு தற்போதைய விஞ்ஞான தொழில்நுட்பப் பயிற்சி சாதனங்களான கணனி, லப்டொப், வானொலி, தொலைக்காட்சி, ஈ-மெயில் மற்றும் பல்வேறு நவீன உபகரணங்கள் பொருத்தப்பட்ட மூன்று வாகனங்களும் வழங்கப்பட்டுள்ளன.

முற்றிலும் தமிழ் மொழியில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதால் எட்டு தமிழ் அதிகாரிகளுக்கு ஜேர்மன் தொழில்நுட்ப ஏஜென்ஸி நிறுவனத்தால் விசேட பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

சகல துறைகளிலும் விசேட தகைமைகளைப் பெற்றுள்ள இந்தத் தமிழ் அதிகாரிகள், மூன்று வலயங்களிலும உள்ள கிராமங்கள் தோறும் சென்று பயிற்சிகளையும் கருத்தரங்குகளையும் நடத்துவர்.

கிராமங்களிலுள்ள பாடசாலைகள், பிரதேச சபை, உள்ளூராட்சி சபை மண்டபங்கள், சமூக அபிவிருத்தி நிலையங்களில் இந்தப் பயிற்சிக் கருத்தரங்குகள் நடத்தப்படும்.

இதுவரை காலமும் புறக்கணிக்கப்பட்டுவந்த தமிழ் இளைஞர், யுவதிகளுக்கு தகவல் தொழில்நுட்பம், இடைநிலை மருத்துவப் பயிற்சி, எழுதுவினைஞர், மரவேலை, புடைவைக் கைத்தொழில், தோட்டத்தொழிற் பயிற்சி, அச்சுத்தொழில், இயக்கத் தொழில் - இயந்திரவியல், வர்ணம் தீட்டுதல், இறப்பர் - பிளாஸ்டிக் தொழில், தோல் பொருள்கள் உற்பத்தி, இரத்தினக்கல், நகைத் தொழில், உலோகப் பொருள்கள் கைத்தொழில், மீன் வளர்ப்பு, இலத்திரனியல், தொலைத்தொடர்பு, மின்சாரத் தொழில், கட்டடக் கலை ஆகிய துறைகளில் ஆரம்பப் பயிற்சிகள் வழங்கப்படும் என்று அவர் கூறினார்.

வடக்கு - கிழக்கு மாகாண இடம்பெயர் வழிகாட்டல் சேவை இம்மாத இறுதியில் பிரதமரால் அங்குரார்ப்பணம் செய்யப்படும் என்று அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் அஜித் கொலன்னே மேலும் கூறினார். (ஐ)

# எப்.எம். வானொலிச் சேவைக்கு சிஹல உறுமயவும் அனுமதி கோருகிறது

கொழும்பு,ஜன.13

எப்.எம் வானொலிச் சேவை ஒன்றை நடத்துவதற்கான அனுமதியை சிஹல உறுமய கோரியிருக்கிறது என்று அக்கட்சியின் தலைவரான திலக் கருணாரத்ன தெரிவித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகளின் இயக்கத்துக்கு எப்.எம்.வானொலிச் சேவை ஒன்றை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதால் தங்களுக்கும் அந்த அனுமதி வழங்கப்படுமென எதிர்பார்ப்பதாகவும் -

வானொலிச் சேவையை ஆரம்பிப்பதற்காக பிரிட்டனிலிருந்து ஐயாயிரம் பவுண்கள் கிடைக்கவிருக்கின்றன எனவும் -

அவர் கூறியிருக்கிறார்.

பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் இவற்றைத் தெரிவித்த அவர், ஜனாதிபதி சந்திரிகா, ஜே.வி.பியுடன் நேர்மையாகப் பேச்சு நடத்துகிறார் என்பதைக் கூறமுடியாது.

அரசுடன் சகவாழ்வும் ஜே.வி.பியுடன் பொதுக்கூட்டும் ஒரேநேரத்தில் எவ்வாறு சாத்தியமாகும் என்பது தெரியவில்லை எனவும் சொன்னார்.(ஒ)

# திருமலை வைத்தியசாலையின் தாதி, சிற்றூழியர் தற்காலிக இடைநிறுத்தம்

## குழந்தை கடத்தல் குறித்து தொடர்ந்து விசாரணை

திருகோணமலை,ஜன.13

திருகோணமலை பொதுவைத்தியசாலையில் கடந்த 31ஆம் திகதி மர்மப் பெண் ஒருவரால் பெண் குழந்தையொன்று கடத்திச் செல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக வைத்தியசாலையின் தலைமைத் தாதி ஒருவரும், சிற்றூழியர் ஒருவரும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரால் தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.


அத்துடன் இக்கடத்தல் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் துறைமுகப் பொலீஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒரு பெண், அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்படவிருக்கிறார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடத்தப்பட்ட குழந்தை இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. இதுபற்றி பல்வேறு ஊகங்கள் கிளம்பியுள்ளன.

குழந்தையின் தாயார் முள்ளிப்பொத்தானையில் வசிப்பதால் கந்தளாய் பொலீஸாரின் உதவியையும் திருமலை துறைமுகப் பொலீஸார் கோரியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பான உள்ளக விசாரணையை வைத்திய அத்தியட்சகர் திருமதி டாக்டர் பி.கே.ஞானகுணாளன் மேற்கொண்டு வருகிறார். சம்பந்தப்பட்ட வார்ட்டுக்குப் பொறுப்பான தாதி மற்றும் ஊழியர்களின் வாக்குமூலமும் குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரி குணவர்த்தனாவால் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இதனையடுத்தே தாதியும் ஒரு சிற்றூழியரும் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

பார்வையாளர் நேரத்தில் அன்றி 3-4 மணியளவில் குழந்தை கடத்தப்பட்டதால் இது ஒரு திட்டமிட்ட செயல் என்ற வகையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஒ)



திருநெல்வேலி லயன்ஸ் கழகத்தினர் வலது குறைந்த பத்துப் பேருக்கு முச்சக்கர சைக்கிள்கள் வழங்கினர். முச்சக்கர சைக்கிள்கள் பெற்றுக்கொண்ட அறுவரை படத்தில் காணலாம். (ஐ)

# புத்தளம் தமிழ் தொண்டர் ஆசிரியர்கள் கல்விப்பணிமனை எதிரே ஆர்ப்பாட்டம்

புத்தளம்,ஜன.13

புத்தளம் பகுதியிலுள்ள தமிழ் மொழிமூல பாடசாலைகளில் சேவையாற்றும் தொண்டர் ஆசிரியர்கள் கடந்த வெள்ளிக்கிழமை புத்தளம் வலயக் கல்விப் பணிமனைக்கு எதிரே ஆர்ப்பாட்டப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

தமக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படவேண்டும் எனக் கோரியே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

தொண்டர் ஆசிரியர் சங்கத்தலைவர் எம்.ஐ.இக்ரம் தலைமையில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கணக்கான தமிழ், முஸ்லிம் தொண்டர் ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.

'தமிழ்மூலக் கல்வியைப் புறக்கணிக்காதே!', 'ஆசிரிய நியமனத்தின் போது தொண்டர் ஆசிரியர் நியமனத்துக்கு முதலிடம் கொடு!' என்பது போன்ற சுலோகங்கள் கொண்ட பதாகைகளை அவர்கள் தாங்கி நின்றனர்.

நியமனம் வழங்கப்படாவிட்டால் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் ஒன்று நடத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (எ)

# போதிய உத்தியோகத்தர் இன்மையால் கால்நடை உற்பத்தித் திணைக்கள பணிகள் ஸ்தம்பிதமடையும் நிலை

அச்சுவேலி,ஜன.13

கால்நடை விரிவாக்க உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையினால் மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பணிகள் ஸ்தம்பிதம் அடையும் நிலையை அடைந்துள்ளன என புகார் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.மாவட்டத்தில் கால்நடை விரிவாக்க உத்தியோகத்தர்கள் 38 பேர் கடமை புரியவேண்டிய நேரத்தில் 15 உத்தியோகத்தர்கள் மட்டுமே தற்போது கடமையில் உள்ளனர். இவர்களிலும் பலர் ஓய்வுபெறும் நிலையை அடைந்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் பத்து பிரதேச கால்நடை வைத்திய அதிகாரிகள், அலுவலகங்களும், மாவட்ட கால்நடை வைத்தியசாலையும், மாவட்ட உதவிப்பணிப்பாளர் அலுவலகமும், செயற்கைமுறைச் சினைப்படுத்தல் நிலையமும் செயற்படுகின்றன. இவற்றின் இயல்பான செயற்பாட்டுக்கு 38கால்நடை விரிவாக்க உத்தியோகத்தர்கள் தேவையாக உள்ளனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

தற்போது கடமையாற்றிவரும் 15பேரில் பலர் சேவைநீடிப்பில் உள்ளவர்கள் என்றும் - பணிபுரிபவர்களும் வேலைப்பளு காரணமாக ஓய்வுபெறும் ஆர்வம் கொண்டுள்ளனர் என்றும் - கூறப்படுகின்றது.

கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்களத்தின் பணியாளர் நிலை நீண்ட காலமாக பூரணப்படுத்தப்படாமல் இருந்து வருவதால், திணைக்களத்தின் பணிகள் ஸ்தம்பிதம் அடையும் நிலையை அடைந்துள்ளன - என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ-11)

# குருநகர் காவலரண் பின்நகர்த்தப்பட்டது

குருநகர் சீநோர் வலைத் தொழிற்சாலைக்கு அருகில் அமைந்துள்ள குருநகர் மீன்வாடிப் பகுதியில் குருநகர் மீனவர்கள் சிரமதானப் பணிகளை மேற்கொண்டனர். இதனையடுத்து வலைத் தொழிற்சாலைக்கு முன்புறமாக அமைக்கப்பட்டிருந்த தமது காவலரணை மேற்குப்புறமாக சுமார் 25யாருக்கு படையினர் பின்நோக்கி நகர்த்தி அமைத்துள்ளனர்.

எனினும் இம்மீன்வாடி பொதுப் பாவனைக்கு இதுவரை திறந்து வைக்கப்படவில்லை. குருநகர் கடற்கரை வீதியில் அமைந்துள்ள குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்க வளாகத்தில் தொடர்ந்தும் குருநகர் மீன்வாடி இயங்கி வருகிறது. (ஒ-51)

# கணனி கொள்வனவு செய்ய அரச ஊழியர்களுக்கு கடனுதவி

வலி.வடக்கு,ஜன.13

அரச உத்தியோகத்தர்கள் தமது பயன்பாட்டுக்கு கணனிகளைக் கொள்வனவு செய்வதற்கும் -

அவற்றுக்குத் தேவையான நிதியை தமது திணைக்களங்களிலிருந்து கடனாகப் பெற்றுக்கொள்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கணனிகள் கொள்வனவுகளுக்கு கடன் வழங்குவது சம்பந்தமான சுற்றறிக்கை ஒன்றை பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு சகல திணைக்களங்களுக்கும் அனுப்பிவைத்துள்ளது. அந்தச் சுற்றறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் இடர்காலக் கடன் சொத்துகள் கொள்வனவுக்கென கடன் வழங்கப்பட்டு வந்தது என்றும் -

இதேபோலவே எதிர்காலத்தில் கணனிக் கொள்வனவுக்கான கடன்கள் வழங்கப்படவுள்ளன என்றும் -

அரச அலுவலர்களிடையே கணனிப் பயன்பாட்டை ஊக்குவிக்கும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அந்த சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-86)

## யாழ்.குடாநாட்டில்

# யுத்த சூழல் காரணமாக இதுவரை ஒருலட்சத்து 50 ஆயிரம் தென்னை அழிவு

யாழ்ப்பாணம்,ஜன.13

குடாநாட்டில் நிலவிய யுத்த சூழ்நிலை காரணமாக ஒரு லட்சத்து 50 ஆயிரத்து 683 தென்னை மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன என தென்னை அபிவிருத்திச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த கொடிகாமம், மிருசுவில், எழுதுமட்டுவாழ், சாவகச்சேரி, நுணாவில், மட்டுவில் ஆகிய பகுதிகள் மீது கடந்த 2000ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஷெல் மற்றும் பல்வேறு தாக்குதல்களே தென்னை மரங்கள் பலவும் அழிவதற்குக் காரணம் என்றும் - அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதேவேளை -

பச்சிலைப்பள்ளி பிரதேசத்திலும் மேற்படி தாக்குதல்கள் காரணமாக அதிக எண்ணிக்கையான தென்னை மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன என்றும்-

இதுவரை 15 ஆயிரம் தென்னை மரக் கன்றுகள் மீள் நடுகை செய்யப்பட்டுள்ளன என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது. (எ-180)

# பனிப்புலம், சில்லாலை பகுதிகளில் மின்மாற்றிகள் பொருத்தப்படும்

பனிப்புலம், காலையடி இரும்பன் கோவில் சுற்றாடலிலும், சில்லாலை பிரதான வீதியிலும் இரு மின்மாற்றிகள் (ரான்ஸ்போமர்கள்) விரைவில் நிறுவப்படவுள்ளன.

பனிப்புலம், சில்லாலை ஆகிய பகுதிகளில் மிகவும் குறைந்த வலுவுள்ள மின்சார விநியோகம் இருந்து வருவதாகவும், இதனால் மின் விளக்குகளும் மிகவும் குறைந்த நிலையில் ஒளி வீசுவதாகவும் மின்மோட்டார்களும் வேலைசெய்ய சிரமமாக இருப்பதாகவும் இப்பகுதிகளிலுள்ள மின் பாவனையாளர்கள் செய்திருந்த முறைப்பாட்டை அடுத்து, மேற்படி இடங்களில் மின்மாற்றிகளை விரைவில் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - பண்டத்தரிப்புப் பகுதியிலுள்ள சாந்தை கிராமத்தில் இதுவரை மின்சாரம் விநியோகிக்கப்படாதிருக்கும் பகுதிக்கு மின்சாரம் விநியோகிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-135)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

4 வெளி பாலை யன்னல் கதவுகளுடன், தேக்கம் கதவுகளும் மற்றும் ஒரு வயது நிரம்பிய நல்ல இன சணல் கடாயும் விற்பனைக்குண்டு. தொடர்பு: செல்வம், 107, டேவிற் வீதி, யாழ்ப்பாணம். (13060)

புதிய Mini-Digital Video Camera (போட்டோ எடுக்கக்கூடியது) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.T.சுதர்சன், பழைய தபால் கந்தோர் ஒழுங்கை, தலையாழி, கொக்குவில். T.P.: 0777 190774 (13147)

தனிப்பாவனையில் உள்ள EN தொடரிலக்கமுடைய மைனர் கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: த.றஜிவ், 309, அரசடி வீதி, நல்லூர். T.P.: 3146 (13108)

சிறுப்பிட்டி மத்தியில் (பருத்தித்துறை பிரதான வீதிக்கு அருகில்) சகல வசதியும் வருமானமும் கொண்ட 51/2 பரப்புக் காணியுடன் கூடிய வீடும், சிறுப்பிட்டி மேற்கு, இராச வீதியில் 5 பரப்பு தோட்டக்காணியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திருமதி இலங்கைநாதன் சாந்தநாயகி, சிறுப்பிட்டி மத்தி, நீர்வேலி. (13153)

பலசரக்குக் கடைப்பாவனைக்கு உரிய சகல தளபாடங்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இ.சபாரட்ணம், இல.20, கே.கே.எஸ். வீதி, பூநாரி மடம், கொக்குவில். T.P.: 0777 152638 (13157)

## வீடு விற்பனைக்கு

ரெம்பிள் றோட் - றக்கா றோட் சந்தியில் அமைந்துள்ள (11/4 பரப்பு) மேல்மாடி வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.மகேந்திரன், 10/1, றக்கா றோட், யாழ்ப்பாணம். (13148)

## தேவை

சிறிய குடும்பத்திற்கு 45 வயதிற்கு மேற்பட்ட பெண் உதவியாளர் தேவை. வீட்டில் தங்கியிருந்து பொறுப்பாக சகல வேலைகளையும் கவனிக்கக் கூடியவராக இருத்தல் விரும்பத்தக்கது. நேரில் தொடர்புகொள்ளவும் இல. 29/1, சோமசுந்தரம் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (13151)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1967இல் பிறந்த, 5'3" உயரமும், திருவாதிரை (4ஆம்பாதம்) நட்சத்திரமும் உடைய லண்டனை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட தற்போது விடுமுறையில் வந்திருக்கும் பொறியியலாளரான மணமகனுக்கு அழகான, படித்த மணமகள் தேவை. தொடர்பு: விளம்பர இல. 1750 C/o உதயன், யாழ்ப்பாணம். (13128)

## தவறிவிட்டது

யாழ்ப்பாணம், 14/2, இராசாவின் தோட்டத்தைச் சேர்ந்த யோ.பார்த்தீபன் என்பவருடைய தே.அ.அட்டை (இல.780653949V), வி.அ.அட்டை (இல.0901031180) என்பன யாழ்.நவீன சந்தைக்கும் வீட்டுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்து தவவும். (13135)

## திருவிழா ஆரம்பம்

குருநகர்,ஜன.13

குருநகர் கடற்கரை வீதியில் அமைந்துள்ள புனித செபஸ்தியார் ஆலய வருடாந்த திருவிழா ஆராதனை கடந்த சனிக்கிழமை பிற்பகல் 6 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (ஒ-51)


**SAMPANTHAN MEDICAL CLINIC**

புற்று நோய் மருத்துவ நிபுணர் வருகை தருகிறார்.

*காலம்:* 15, 16, 17ஆம் திகதிகளில்

☆ முற்கூட்டியே பதிவுசெய்யவும்.

*இடம்:* சம்பந்தன் மெடிக்கல் கிளினிக்

*22, இராமையாச் செட்டியார் வீதி, யாழ்ப்பாணம்.* (13160)


## கேணல் கிட்டு நினைவு தினம்

விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த கேணல் கிட்டு மற்றும் அவருடன் உயிரிழந்த போராளிகளின் நினைவுதின நாளை எதிர்வரும் 16 ஆம் திகதி எழுச்சியுடன் அனுஷ்டிக்க முன்னேற்பாடுகள் இடம்பெற்று வருவதாக பொது அமைப்புகள் தெரிவித்தன.

1993ஆம் ஆண்டு ஜனவரி 16 ஆம் திகதி கப்பலில் தாயகம் திரும்பிக்கொண்டிருந்த சமயம் வங்கக் கடலில் இந்தியக் கடற்படையினரால் வழிமறிக்கப்பட்டு கைதுசெய்ய முற்பட்டவேளை கப்பலுக்குத் தீ மூட்டி தற்கொடையளித்த அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டே இந்த ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் இந்த நிகழ்விற்கான ஏற்பாடுகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதை அவதானிக்க முடிந்தது. (ஒ)

## பாஷையூரில் முதலாம் குறுக்குவீதி மக்கள் பாவனைக்கு!

பாஷையூரில் முதலாம் குறுக்கு வீதி, மக்கள் பாவனைக்கு திறந்து விடப்பட்டுள்ளது.

இதுவரைகாலமும் 2ஆம் குறுக்கு வீதியூடாகவே மக்கள் மீன் சந்தைக்குச் சென்றுவர அனுமதியளிக்கப்பட்டது.

தற்போது 2ஆம் குறுக்கு வீதியின் குறுக்கே கழிவுநீர் ஓடும் வாய்க்கால் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. இதனையடுத்து இராணுவத்தினர் முதலாம் குறுக்கு வீதியூடாக மக்கள் சென்றுவர அனுமதியளித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-17)

## மரக்கறிச் சந்தை செயற்படத் தொடங்கியது

அரியாலை,ஜன.13

நீண்ட நாள்களின் பின்னர் பாஷையூர் மரக்கறிச் சந்தையில் மரக்கறி மற்றும் பழ வகைகள் விற்பனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முன்னர் இந்த இடம் கடலுணவு விற்பனைக்கு பயன்படுத்தப்பட்டது. தற்போது அருகில் உள்ள மற்றொரு கட்டடம் மீன்சந்தையாக மாற்றியமைக்கப்பட்டு இந்த இடத்தில் மரக்கறி விற்பனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ஒ-17)

# துயர் பகிர்கின்றோம்



அளவெட்டி தென்னிந்திய திருச்சபை போதகர்
**அருட்திரு.T.E.அசோக்குமார்**
அவர்களின் அன்பு மாமனாரும்,
போதகரம்மா
**திருமதி T.E.அசோக்குமார்**
அவர்களின் அன்புத் தகப்பனாருமாகிய

**C.C.J.ஜெயராசா**

அவர்களின் திடீர்ப் பிரிவினால் ஆழ்ந்த துயர் அடைவதோடு துயருற்றிருக்கும் போதகரப்பா குடும்பத்தவர்களோடும் அவரது மகன் **திரு.அன்றூ** குடும்பத்தாரோடும் மற்றும் அவர்களது உற்றார், உறவினர், நண்பர்களோடும் துயரில் பங்குகொள்வதோடு அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக இறைவனைப் பிரார்த்திக்கும்...

*தென்னிந்திய திருச்சபை,*
*அளவெட்டி மேற்கு.* (13161) - **திருச்சபை மக்கள்.**

# மரண அறிவித்தல்

## முருகப்பா சேதப்பா கிருஷ்ணசிங்கம்

*(இளைப்பாறிய ஆசிரியர், யா/ஞானாசாரியார் ம.வி., அகில இலங்கை சைவமன்ற அமைப்பாளர்)*

புலோலி கிழக்கு, பண்டாவத்தையைப் பிறப்பிடமாகவும், ஆத்தியடியை வதிவிடமாகவும் கொண்ட முருகப்பா சேதப்பா கிருஷ்ணசிங்கம் அவர்கள் நேற்று (12.01.2003) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சேதப்பா - பொன்னாச்சிப்பிள்ளையின் அன்பு மகனும் காலஞ்சென்ற இலட்சுமிப்பிள்ளையின் அன்புக் கணவரும் சத்தியராதா (கனடா), சேதுராணி ஆகியோரின் அன்புத் தந்தையும் சபாபதிப்பிள்ளை, அமரர் ஜெயராம் ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான Dr.வேல்முருகு, நாகரத்தினம், சபாநாதன் மற்றும் பாசேந்திரம், அன்னஇலட்சுமி ஆகியோரின் சகோதரனும் கணேஷாயினி, மதன், ஜெயக்கிருஷ்ணன், ஐங்கரன் ஆகியோரின் பாட்டனும் துவாரகனின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.01.2003) திங்கட்கிழமை காலை 9மணியளவில் ஆத்தியடி, பருத்தித்துறையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஆத்தியடி,*
*பருத்தித்துறை.* (13156)

தகவல்:
சேதுராணி ஜெயராம் (மகள்)


# சுடர் ஒளி




- உயர் பாதுகாப்பு வலய மீள் குடியமர்வுகளில் புலிகளின் சாணக்கியமும் அரசின் தந்திரமும்.
- குடாநாட்டில் பரவும் காய்ச்சலும் நடவடிக்கை எடுக்காத தரப்புகளும்.
- இந்திய அரசின் வஞ்சக வலையில் சிக்கி கடலில் சங்கமமான தமிழீழத்தின் சொத்து.
- விடியலைத் தேடிய வனிதையர் முடிவைக் காணாத துயரத்தில் லெபனானில் சோகம்.
- அகதியானவர் மீண்டு வந்தால் அவதியாகிவிடும் சூழ்நிலைகள் - நேரடி
- புலிகளின் அலுவலகத்தில் அதிரடிச் சோதனை புலனாய்வுப் பொறுப்பாளர் கிடைக்காது ஏமாற்றம்
- சிங்களத் தீவிரவாதிகள் கண்ணோட்டத்தில் உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினை
- தி.மு.கவுடன் உறவை முறிக்க பா.ஜ.க. துடிக்கிறதா?
- பொங்கல் வந்தாச்சு (சிறுகதை)
- மற்றும் ஆக்கங்கள்

14-01-2003 இதழில்

விலை 14/-


(C/26029)

# போரைச் சந்தித்த ஒரு சமூகத்துக்கு கலை வரலாற்றுத்துறை அவசியமானது

பல்கலைக்கழகக் கல்வியை தொழில்துறைகளுக்கு ஏற்ப மாற்ற வேண்டும் என்ற ஒரு கருத்தை சிலர் இப்போது கூறிவருகிறார்கள். ஆனால், பல்கலைக்கழக கல்வி, அறிவைப் புகட்டுதலை அடிப்படையாகக் கொண்டதென்றும், அவ்வகையில் தொழில் துறைக் கல்வியை அடிப்படையாகக் கொண்ட தொழில்நுட்ப நிறுவனங்கள், கல்வியியற் கல்லூரி முதலியவற்றிலிருந்து அது வேறுபட்டது என்றும் இதற்கு எதிரிடையான கருத்துடையவர்கள் வாதிடுகிறார்கள். கடந்த சில தசாப்தங்களாக பல்கலைக்கழகத்தில் பயிலுபவர்கள் பலரும் (மருத்துவம், பொறியியல் முதலான தொழிலிணைக் கல்வி நெறிகள் தவிர) ஆசிரியத் தொழிலுக்கு உள்வாங்கப்படுகின்றனர். இதனால் பெருமளவிலானவர்களிடம் கலைமாணி, விஞ்ஞானமாணி என்பன ஆசிரியத் தொழிலுக்கான பயில்நெறிகள் என்பது போன்ற ஒரு பார்வை வலுப்பெற்றுள்ளது. ஆயினும், கல்வியிற் கல்லூரியின் வருகை, இன்று இந்த நிலையைப் பேரளவுக்கு கேள்விக்குள்ளாக்கியுள்ளது. இதுவொரு புறம், மறுபுறம் பல்கலைக்கழகங்களில் படித்து வெளியேறியவர்கள் தாம் படித்த பாடத்தைத்தான் பாடசாலைகளில் கற்பிக்கிறார்கள் என்றும் கூறுவதற்கில்லை. இந்தப் பின்னணியில் பல்கலைக்கழகங்களில் மாணவர்களின் பாடத்துறைத் தெரிவு என்பது சுதந்திரமானதாகவும் தமது நோக்கம், விருப்பம், எதிர்கால அபிலாஷைகள் என்பனவற்றைக் கவனத்தில் எடுத்ததாகவும், தமது தனி ஆற்றல்களை மேலும் வலுப்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டதாகவும் இருக்கவேண்டும். உதாரணமாக யாழ்.பல்கலைக்கழகக் கலைப்பீடத்தில் மட்டும் சுமார் இருபத்தைந்து தெரிவுப் பாடங்கள் உள்ளன. இவற்றில் யாழ்.பல்கலைக்கழகத்தில் மட்டுமேயுள்ள பல சிறப்புப் பாடங்களும் உள்ளன. இவ்விதமான பாடநெறிகளுள்ள ஒன்றுதான் 'நுண்கலை' என்ற பெயருடன் கற்பிக்கப்படும் கலைவரலாற்றுப் பாடநெறி.

உலகம் பூராவும் பரவி வளர்ந்துள்ள மேற்படி ஆய்வியல்துறையான கலை வரலாறு, தமிழில் அதிகம் அறியப்படாத அல்லது கற்கப்படாத ஓர் ஆய்வியற் பரப்பாகவேயுள்ளது. ஆனால், இத்துறை அதற்குரிய முழுமையான அம்சங்களுடன் யாழ்.பல்கலைக்கழகத்தில் இயங்கி வருவது பலருக்குத் தெரியாது. இது மட்டுமின்றி இலங்கை முழுவதும் கலை வரலாற்றை அதன் முழுமையில் யாழ். பல்கலைக்கழகம் மட்டுமே கொண்டுள்ளது என்பதும் முக்கியமான ஒரு செய்தியாகும். களனிப் பல்கலைக்கழகத்திலும், கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் ஆற்றுகைக் கலையான நாடகத்துடன் இணைக்கப்பட்ட ஒரு கலவையாகவே இப்பாடநெறி இருக்க, யாழ்.பல்கலைக்கழகத்தில் நுண்கலைத்துறையில் நாடக அரங்கியலும், கலைவரலாறும் (நுண்கலை என்ற பெயருடன்) தனித் தனியே சிறப்புத்துறைகளாக இயங்கி வருகின்றமை என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

கலைவரலாறு, கலைரசனை அல்லது அழகியல் என்பவற்றை முன்னிறுத்திக் கட்புலக் கலைகளான ஓவியம், சிற்பம், கட்டடம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட இலங்கை, இந்திய, ஐரோப்பிய கலைவரலாறு, இந்திய, ஐரோப்பிய, அழகியல் மரபுகள், கலையின் சமூகவியல், உளவியல், சினிமா, புகைப்படக்கலை, கலை வரலாற்று முறையியல் என்பவற்றையும் சிறப்பாக, ஈழத்தமிழர்களது கலைப்பேறு என்பவற்றையும் உள்ளடக்கிய பாடப் பரப்பையுடைய ஒரு துறையாக கலைவரலாறு யாழ். பல்கலைக்கழத்தில் கட்டமைக்கப்பட்டுள்ளது.



இதேநேரம், கலைமாணி கற்கைநெறியின் சிறப்புப் பாடங்களுள் ஒன்றான இதனைக் கற்பதன் மூலம் எதிர்காலத்தில் அரும்பொருளகவியல் (Museology), கலைக்கல்வியியல் (Art Education), அழகியல் (Aesthetics), கலைவரலாறு (Art History) கலை விமர்சனம் (Art Criticism) என்பவற்றில் முதுகலைமாணி முதலிய மேற்படிப்புக்களை பெறுவதற்கான வாய்ப்பும் ஏற்படுகிறது.

### சித்திரமேழி

இவ்விதமான பல்தள முக்கியத்துவத்தினை இப்பாடநெறி கொண்டுள்ளபோதிலும் நுண்கலை (Fine Arts)பிரதானமாகக் கட்புலக்கலை சார்ந்தே நடைமுறைப் பிரயோகத்தில் அதிகம் இருந்தும் கூட இலங்கையில் இது ஆற்றுகைக் கலையினை (Performing Arts)அதிகம் குறிப்பதான நிலைமை இருப்பதனால், இப்பாடம் சங்கீதம் அல்லது நடனம் கற்பவர்களுக்கே உரியது என்ற தப்பான ஒரு விளக்கம் நிலவி வருகிறது.

ஆனால், இது பல்கலைக்கழக மட்டத்தில், கலைப்பிரிவுக்குரிய கலை மீதான ஆர்வமுடைய எவருக்குமான பாடமாகவே காணப்படுகிறதென்பது இது கொண்டுள்ள சிறப்பான வாய்ப்பாகும்.

இதேநேரம், யாழ்ப்பாணத் தமிழரின் கலைப்பேறுகளை வெளிப்படுத்தல், ஆவணப்படுத்தல், அது பற்றிய பரவலான விழிப்பையுண்டுபண்ணுதல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஆய்வுகள், கண்காட்சிகள், கருத்தரங்குகள், ஆவணக் காப்பகத்தை உருவாக்கல் என்ற வகையில் நுண்கலைப் பயில்நெறி செயற்பட்டு வருகிறது. இதனை நடைமுறைப்படுத்துவதில் கலைவரலாற்று (நுண்கலை) மாணவர்களது அமைப்பான கலைவட்டம் சிறப்பான ஒரு பங்கை வகித்து வருகின்றது. இவ்வகையில் தஞ்சாவூர் மரபு வழிவந்த யாழ்ப்பாணத்துக் கண்ணாடி ஓவியங்களை உள்ளடக்கிய காட்சி, யாழ்ப்பாணத்தின் ஆரம்பகால புகைப்படங்கள் பலவற்றை உள்ளடக்கிய காட்சி, முன்னணி இசை நாடகக் கலைஞர்களால் உருவாக்கப்பட்ட சத்தியவான் சாவித்திரி ஸ்பெஷல் நாடகம் முதலியவற்றையும் யாழ்ப்பாணக் கட்டடக் கலை தொடர்பான இருநாள் கருத்தரங்கினையும், அதையொட்டி யாழ்ப்பாணக் கட்டடக் கலைப் போக்குகளைப் ஆவணப்படுத்திய புகைப்படக் காட்சி என்பனவற்றையும் கடந்த காலங்களில் இத்துறை நடத்தியுள்ளது. போருக்குப் பிந்திய சமூகத்தில் கட்டடக் கலையில் மீள் கட்டுமானம் பற்றிய முதல் கருத்தாடல் உட்பட பல கட்டுரைகளை உள்ளடக்கியதாக அமைந்த மேற்படி கருத்தரங்கு உட்பட பல செயற்பாடுகளில் இத்துறை ஈடுபாடுடையதாக இருந்து வருகிறது.

போருக்குப் பிற்பட்ட சமூகங்கள் துறைசார்ந்த தகைமையாளர்களை அதிகம் வேண்டி நிற்பன. இவ்வகையில் மீள் கட்டுமானத்தை உள்ளடக்கிய தேசக்கட்டுமானத்தை நோக்கி தமிழ்ச் சமூகம் நகர்ந்து கொண்டிருக்கும் இவ்வேளையில், துறை சார் தகைமையாளர்களின் தேவையென்பது அதிகரித்துள்ளது. இந்நிலையில் ஏனைய துறைகளை மாணவர்கள பயன்படுத்திக்கொள்வது போல இப் பாடநெறியையும் மாணவர்கள் பயன் படுத்திக் கொள்ளமுடியும்.

# காலத்துக்கு ஒவ்வாத சட்டத்தை காலாவதியாக்கிவிட வேண்டும்!

## இரா. சம்பந்தன் எம்.பி. கோரிக்கை

கொழும்பு,ஜன.13

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் தனிநபர் பிரேரணையாக முன்வைக்கப்பட்டிருந்தாலும் இதன் முக்கியத்துவத்தை அரசு உணரத் தலைப்பட வேண்டும்.

முக்கிய பிரேரணை ஒன்று விவாதிக்கப்படும் இவ்வேளையில் சபையில் சிறுபான்மையினரை பிரதிநிதித்துவம் செய்யும இரு அமைச்சர்களான ஏ.எச்.எம்.அஸ்வரும், மகேஸ்வரனும் அமர்ந்துள்ளனர். பாதுகாப்பு அமைச்சரும் பொலீஸ் விசாரணைகளுக்குப் பொறுப்பான அமைச்சரும் சபையில் இல்லை. இது கவலை தருகிறது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ரத்துச் செய்யக்கோரும் விவாதத்தில் உரையாற்றுகையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பியான இரா.சம்பந்தன் நாடாளுமன்றத்தில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

சமாதானப் பேச்சுக்கள் சுமுகமாக முன்கொண்டு செல்லப்படும் இவ்வேளையில், காலத்திற்கு ஒவ்வாத ஒரு சட்டத்தினை இன்னும் ஏன் அரசு நடைமுறைப்படுத்துகிறது?

எதுவிதக் காரணமும் கூறாது பொதுமக்களைக் கைதுசெய்வது, அவர்களது சொத்துக்களைப் பறிமுதல் செய்வது, கைது செய்தவர்களைத் தடுத்து வைத்திருப்பது, சித்திரவதை செய்து கட்டாய வாக்குமூலங்களைப் பெற்றுக்கொணர்வது போன்ற அநியாயங்களே இந்தச் சட்டத்தின் உதவியுடன் பொலீஸாரால் மேற்கொள்ளப்பட்டன.

தான்தோன்றித்தனமான, இந்தச் செயல்களுக்குப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டமென பெயர் சூட்டப்பட்டது. பங்கரவாதம் என்றால் என்ன என்பதற்கு இந்தச் சட்டவரைவுகளில் எந்த இடத்திலும் வரைவிலக்கணம் முறையாகக் கூறப்படவில்லை.

1980இல் உருவான தமிழ் இராணுவத்தை அடக்கக் கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் காரணமாக நாட்டின் சுமுகமான கட்டமைப்பு மாற்றப்பட்டது.

இதனால், வெகுண்டெழுந்த தமிழ் இளைஞர்களின் உணர்வலைகள் முன்னால் இச்சட்டம் தோற்றே போய் விட்டது - என்றார்.

(ஒ)

# கடற்றொழில் கல்லூரியில் சேர விரும்புவோருக்கு!

யாழ்ப்பாணம், பாங்ஷால் வீதியில் அமைந்துள்ள கடற்றொழில் மற்றும் கடலோட்டு இயந்திரவியல் கல்லூரியில் கடலக இயந்திரவியல் தொழில்நுட்பம், கடலக தொழில்நுட்பவியல், கடலக சுழியோட்டம், தும்புக் கண்ணாடியிழைத் தொழில்நுட்பம், இறால் வளர்ப்பு முகாமைத்துவம், மீன் பதனிடலும் பாதுகாத்தலும் ஆகிய பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட உள்ளதாக இக்கல்லூரியின் அதிபர் எம்.செபஸ்ரியாம்பிள்ளை தெரிவித்தார்.

இப்பயிற்சி நெறிகளைப் பின்பற்ற விரும்புவர்கள் பயிற்சிநெறிக்கு கட்டணம் செலுத்தவேண்டும். ஒருவர் ஒரு தடவையில் ஒரு பயிற்சி நெறியையே பின்பற்றமுடியும். 8ஆம் ஆண்டு சித்தியடைந்த அல்லது கடல் சார் தொழிலில் முன்அனுபவம் உடையோர் இப்பயிற்சிநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

இப்பயிற்சி நெறிகளைப் பின்பற்ற விரும்புபவர்கள் தமது சுயவிவரங்களுடன் 4ரூபா 50சதம் முத்திரையொட்டிய சுயவிலாசமிடப்பட்ட தபாலுறையை 372, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பினால் உரியவர்களுக்கு விண்ணப்படிவம் அனுப்பிவைக்கப்படும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை உரியவர்கள் இம்மாதம் 24ஆம் திகதிக்கு முன்னர் கல்லூரிக்கு அனுப்பிவைக்கவேண்டும் - இவ்வாறு அதிபர் மேலும் தெரிவித்தார்.

(ஒ-51)

# கல்விச்சாலைக் காட்சிகள்



கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தின் 'பரஞ்சோதி' மலர் வெளியீடு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட நா.வரதராசா, மலர்ப்பிரதியை பெற்றுக் கொண்டபோது எடுத்தபடம். பேராசிரியர் சபா.ஜெயராசா, அதிபர் சு.சண் முககுமார் ஆகியோரும் படத்தில் உள்ளனர்.



கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் 150ஆவது ஆண்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அதிபர் நா.சிவகடாட்சத்துக்கு விழாக்குழுச் செயலாளர் எஸ்.கே.தங்கவடிவேலு மாலை அணி விப்பதை படத்தில் காணலாம்

*(வலி.கிழக்குச் செய்தியாளர்)*



புங்குடுதீவு மகாவித்தியாலயத்தின் 'துலக்கம்' சஞ்சிகை வெளியீட்டு விழா அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர் வி.ஜி.ராதாகிருஷ்ணன் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். *(மண்டைதீவுச் செய்தியாளர்)*



சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா சமபத்தில் இடம்பெற்றது. அதில் அதிபர் பொ.கணேஸ்வரலிங்கம் ஆண்டறிக்கை வாசித்தபோது எடுக்கப்பட்ட படம் இது.

இளைப்பாறிய அதிபர் அ.பஞ்சலிங்கம், சிறப்பு விருந்தினரான உடு வில் கல்விக்கோட்ட உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் சி.மகாலிங்கம், பிரதம விருந்தினரான சட்டத்தரணி மா. திருவாதவூரன் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

# ஏகாதிபத்தியமும், முதலாளித்துவமும் ஒழியும்வரை சமாதானம் ஏற்படாது!

## ஐக்கிய சோசலிஸக்கட்சி செயலர் உரை

மண்டைதீவு,ஜன.13

இலங்கையில் ஏகாதிபத்தியமும், முதலாளித்துவமும் ஒழித்துக்கட்டப்படும்வரை நிலையான சமாதானம் ஏற்படாது.

ஐக்கிய சோசலிஸக் கட்சியின் யாழ்.மாவட்டச் செயலாளர் தேவதாசன் இவ்வாறு தெரிவித்தார். அவர் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டுத் தியாகிகளின் 29ஆவது நினைவு தினக் கூட்டத்தில் கலந்துகொண்டு அஞ்சலி உரை நிகழ்த்தினார்.

அந்த உரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த நாட்டில் ஏகாதிபத்தியங்களின் ஆதிக்கமும் முதலாளித்துவமும் ஒழிக்கப்படாவிட்டால் ஜனநாயகமும், சமாதானமும் ஏற்பட வாய்ப்புக்கள் இல்லை. விடுதலை இயக்கங்களை ஒடுக்குவதில் இந்த இரண்டும் ஒன்றுசேர்ந்துவிடுகின்றன. விடுதலை இயக்கங்களின் கையோங்கிய பொழுதெல்லாம், பதவியில் உள்ள முதலாளித்துவ அரசாங்கங்களுக்கு கைகொடுக்க ஏகாதிபத்தியமும் முதலாளித்துவமும் பல சாட்டுக்களை கூறிக்கொண்டு உதவ ஓடிவந்துவிடுகின்றன".

இவை இரண்டும் சுரண்டலையும் அடக்குமுறையையும் அடையாளமாகக் கொண்டவை. இதுவரை இங்கு நடந்தது அடக்குமுறைக்கு எதிரான போராட்டமாகும்.

யாழ்ப்பாணத்தில் அரச பயங்கரவாதம் முதன்முதலில் கட்டவிழ்த்து விடப்பட்ட இடம் தமிழாராய்ச்சி மாநாடாகும். அரச பயங்கரவாதத்திற்கு நாங்கள் திருப்பி அடித்தபொழுது எங்களது நியாயமான போராட்டத்தை முதலாளித்துவ அரசுகள் பயங்கரவாதமாக்கின; பயங்கரவாதமாகக் காட்டிக்கொண்டன. இந்த வேளையில், ஏகாதிபத்தியமும் முதலாளித்துவமும் ஜனநாயகத்தைப் பாதுகாக்கிறோம் என்று கூறிக்கொண்டும், அண்டை நாட்டுக்கு உதவப் போகிறோம் என்று கூறிக்கொண்டும் ஓடி வந்தன.

உண்மையில் ஜனநாயகமோ, சமாதானமோ இவர்களது நோக்கமல்ல. வர்க்கநலனும் உணர்வுமே காரணம். தேசிய இனப்பிரச்சினை வேறு வர்க்கப்பிரச்சினை வேறு என்பதை இவர்கள் இனங்காட்டிக்கொள்வதில்லை.

அடக்குமுறைக்கும் ஒடுக்குமுறைக்கும் எதிரான போராட்டத்திற்குப் பொருத்தமான அமைப்பும்,சரியான தலைமையும் தமிழர்களாகிய எங்களுக்கு இப்பொழுது உண்டு.

நாம் சுதந்திரத்திற்கான போராட்டத்தை அண்மையில்தான் ஆரம்பித்துள்ளோம். இந்தப் போராட்டத்தில் பொது எதிரியை இனங்கண்டு, நாங்கள் அனைவரும் ஒன்றுசேரவேண்டும். அதுவே எமது ஏகபிரதிநிதித்துவத்தைப் பலப்படுத்தும் அதற்கும் விட்டுக்கொடுப்புக்கள் தேவை. நண்பர்கள் பட்டியலில் மாற்றம் ஏற்படும். எதிரிகள் நண்பர்களாகவேண்டிய காலம் இது.

பிழையான கொள்கைகள் உரிக்கப்படவேண்டும். அதுவே தமிழ் மாநாட்டுத் தியாகிகளுக்கு நாம் செய்யும் உண்மையான அஞ்சலியாகும்.

எமது கட்சியை சிங்களக்கட்சி என்றும் சிலர் கூறுகிறார்கள். எமது தலைமை சிங்களத் தலைமைதான் ஆனால், இரண்டு அரசுகள் அமைவதற்கு உதவ நல்ல சிங்களவர்களும் தயாராய் இருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

தனிநாடு வேறு தனி அரசு(கள்) வேறு. ஒரு நாட்டில் இரண்டு அரசுகள் செயற்படமுடியும் இதில் மயக்கம் இருக்கக்கூடாது - என்றார் அவர்.(ஒ-88)


# TTN இன் மாபெரும் பொங்கல் விழா

எதிர்வரும் 17ஆம் திகதி பிற்பகல் 3மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்திலே காணத்தவறாதீர்கள். மாபெரும் இசை நிகழ்ச்சியுடன் இன்னும் பல சுவையான நிகழ்வுகளும் இடம் பெறக்காத்திருக்கின்றன. அனுமதிகள் இலவசம். இவ்விழாவிலே அறிவுச் செல்வம் 2002, மாவீரர் தின கவிதைப் போட்டி மற்றும் பாடும் சுரங்கள் போட்டிகளுக்கான பரிசளிப்பு வைபவமும் இடம்பெறும்.

(C/26033) - தமிழ் தொலைக்காட்சி இணையம்(ரி.ரி.என்)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஜெயசிங்கம் தெய்வானை

வலந்தலை, காரைநகரை நிரந்தர வதிவிடமாகவும் புதுறோட்டை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஜெயசிங்கம் தெய்வானை நேற்று (12-01-2003) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தர் - இராமு தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னையா ஜெயசிங்கத்தின் மனைவியும், காலஞ்சென்ற பரஞ்சோதி, திரௌபதாதேவி மற்றும் தில்லையம்பலவாணர் (கணக்காளர், பாரிஸ்), சற்குணதேவி, யசோதாதேவி, காலஞ்சென்ற நளாயினிதேவி மற்றும் சிவகாமசுந்தரி, சபாநாதன்(கொழும்பு) ஆகியோரின் தாயாரும் பரஞ்சோதி, விக்னேஸ்வரன், மகாலட்சுமி, காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் மாலினி ஆகியோரின் மாமியாரும் பவானி(லண்டன்), மயூரதன், ராகவி, துஷ்யந்தன், உதயராகவன், விஜயவாகினி, கமலரூபன் ஆகியோரின் பேர்த்தியும் விபுஷன், கோபி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13-01-2003) திங்கட்கிழமை பி.ப 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக சாம்பலோடை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

*புதுறோட்*
*காரைநகர்.* (13166) தகவல்: ஜெ.சபாநாதன் (மகன்)

## திருமதி பரமேஸ்வரி சுப்பிரமணியம்

உரும்பிராயைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பரமேஸ்வரி சுப்பிரமணியம் நேற்று (12.01.2003) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் - சிவக்கொழுந்து அவர்களின் அருமைப் புதல்வியும் காலஞ்சென்ற சண்முகம் சுப்பிரமணியம் அவர்களின் அருமை மனைவியும் காலஞ்சென்றவர்களான மனோகரரூபன் (Manoharan - Vettivel), மோகனா (Bink) மற்றும் மகேந்திரராசா (Srikrishna Corporation) ஆகியோரின் அருமைத் தாயாரும் கருணாதேவி, சுந்தரமூர்த்தி, அகதா ஆகியோரின் அன்பு மாமியாரும் வீணா, கிருஸ்ணவேணி, மோகன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் சரஸ்வதி, பாலசிங்கம், விக்கினேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.01.2003) திங்கட்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*49, அம்பலவாணர் வீதி,*
*அத்தியடி,*
*யாழ்ப்பாணம்.* (13169) தகவல்: திருமதி ம.கருணாதேவி (மருமகள்)

## நமசிவாயகம் சிவபாதம்

வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயகம் சிவபாதம் (இளைப்பாறிய இ.போ.ச. நடத்துநரும் சங்கானை தெய்வேந்திகரம் ஹோட்டல் முகாமையாளரும்) அவர்கள் 09.01.2003 வியாழக்கிழமை அன்று, காலமானார்.

அன்னார் சுசீலாதேவியின் அன்புக் கணவரும் சுமதி (யாழ்.பல்கலைக் கழகம் 2ஆம் வருடம் - கலைப்பீடம்) கோமதி, நிரஞ்சன் (யாழ் அருணோதயக் கல்லூரி உயர்தர மாணவன்),, சஞ்சீவன், சசீகரன் (அருணோதயக் கல்லூரி மாணவர்கள்) ஆகியோரின் அன்புத் தந்தையும் நமசிவாயகம் தேவநாயகம் (R.D.O, மட்டக்களப்பு) காலஞ்சென்ற நமசிவாயகம் துரைராஜசிங்கம், திருமதி ச.சற்குணராசா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (13.01.2003) திங்கட்கிழமை பி.ப 2 மணிக்கு இடம்பெற்றுப் பூதவுடல் அளவெட்டி மேற்கு தம்மனை நுள்ளானை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அளவெட்டி மேற்கு,*
*அளவெட்டி.* (13168) தகவல்: திருமதி சி.சுசீலாதேவி (மனைவி)


## மதுபாரத்

இந்துமகளிர் ஒழுங்கை.

A/L 2003

அதிதுரித மீட்டல்

பகுதி II

LOGIC P.கமல்

செவ். 4 p.m.

இந்து நாகரிகம்

I.கமலநாதன்

வெள். 3 p.m.

★ தரம் 6-O/L வரை.

வகுப்புகள் நடைபெறுகிறது.

(13165)



திருமதி சாந்தினி சிவநேசனின் நெறியாள்கையில்

நாடக அரங்கக் கல்லூரி வழங்கும்

ஆர்கொலோ சதுரர்

- நடன நாடகம்



இன்னும் இரு வாரங்களில்

SYP Graphics


# மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவுக்குக் கொடுப்பனவு இல்லை

## அந்த அமைப்பு கவலை தெரிவிப்பு

வவுனியா,ஜன.13

ஏ-9 பாதை புனரமைப்பிற்கென ஆசிய அபிவிருத்தி வங்கி எண்ணூறு கோடி ரூபா வழங்கியுள்ளது. இந்த நிலையில் அவ்வீதியில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினருக்கும் எந்தக் கொடுப்பனவும் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏ-9 பாதையில் ஏராளமாகப் புதையுண்டுள்ள கண்ணிவெடி, மிதிவெடி, மற்றும் குண்டுகள் அகற்றும் பணியே பிரதானமாக உள்ளது. அந்த வேலையில் ஈடுபட்டுள்ள மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினருக்கு இதுவரையில் எந்தவித கொடுப்பனவும் வழங்கப்படவில்லை.

அந்த அமைப்பு வெளியிட்ட செய்திக்குறிப்பொன்றிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏ-9 வீதியில் உள்ள மாங்குளம், கனகராயன்குளம், முகமாலை, இயக்கச்சி, பளை, ஆனையிறவு, புளியங்குளம் முதலான பகுதிகளில் இவர்கள வெடிபொருளகளை அகற்றி வருகின்றனர்.

அத்தோடு, வீதி ஓரங்களில் உள்ள வயல் நிலங்கள், தென்னங்காணிகள், உப்பளப்பகுதி முதலானவற்றில் இவர்களது பணிகள் சிறப்பாக இடம்பெற்று வருகின்றன. ஏ-9 பாதையின் இரு புறங்களிலும் ஆபத்தான இடங்களில் பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்படவும் உள்ளன.

இவர்கள் தமது பணியை மேலும சிறப்பாக மேற்கொள்வதற்கு பாதுகாப்பு அங்கிகள், கண்ணிவெடி அகற்றும் நவீன கருவிகள், தொலைத்தொடர்பு உபகரணங்கள், வாகனங்கள் முதலான பல்வேறு தேவைகள் உள்ள போதிலும் அவற்றினை நிறைவேற்ற அரசு இன்னமும் சரியான நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-12)

# மரண அறிவித்தல்கள்

## கந்தவனம் சுப்பிரமணியம்

கோப்பாயைப் பிறப்பிடமாகவும் மாதகல், விபுலானந்தர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தவனம் சுப்பிரமணியம் (இளைப்பாறிய தொழில்நுட்ப உத்தியோகத்தர், மின்தறி ஆலை, பல நோ.கூட்டுறவுச் சங்கம், பண்டத்தரிப்பு) 11.01.2003 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தவனம் - வள்ளியம்மை தம்பதிகளின் மூத்த மகனும், சதாசிவம் - நாகம்மாவின் அன்பு மருமகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் தயாளகுமார் (கனடா), இந்திரகுமார் (மாவீரர்), புஸ்பலதா, தவக்குமார் (ஜேர்மனி), நந்தகுமார், தனேஸ்குமார், மேகலா, கோகிலா ஆகியோரின் அன்புத் தந்தையும் கோணேஸ்வரி சண்முகநாதன், கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் யோகராசாவின் அன்பு மாமனாரும் தெய்வேந்திரம், புஷ்பராணி, பத்மாவதி, சந்திராவதி, வசந்தகுமாரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (13.01.2003) திங்கட்கிழமை பி.ப. 2மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் மாதகல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*விபுலானந்தர் வீதி,*
*மாதகல்.* (13164) தகவல்: யோகராசா (மருமகன்)

## சபாபதி நாராயணன் (சபா)

(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்)

பண்டத்தரிப்பு, வடலியடைப்பைச் சேர்ந்த சபாபதி நாராயணன் அவர்கள் 11.01.2003 சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதி - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும், தருமலிங்கம் - சிதம்பரம் தம்பதிகளின் அன்பு மருமகனும், பத்மாவதியின் (திருமண, பிறப்பு, இறப்பு பதிவாளர் - பண்டத்தரிப்பு) அன்புக் கணவரும், அருள்மொழி, வசந்தமொழி, கயல்மொழி, காந்திமதி, சித்தார்த்தன் ஆகியோரின் அருமைத் தந்தையாரும், காலஞ்சென்றவர்களான சிவநேசன், சிவசம்பு மற்றும் மங்கையர்க்கரசி, பேரின்பநாயகம் (லண்டன்), பாலச்சந்திரன் (லண்டன்), பாக்கியநாதன் (சீமெந்து கூட்டுத்தாபனம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கண்மணி, செல்வரத்தினம், இராஜி, பகீரதி, செல்வமலர், பத்மநாதன், கமலாவதி, கலாவதி, சோமஸ்கந்தராசா (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும், நேசமலர், பத்மராஜா, நகுலேந்திரன், சிவாஜினி ஆகியோரின் சகலனும், காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், சரஸ்வதி மற்றும் சரவணமுத்து, சவுந்தரம், கண்மணி ஆகியோரின் கிட்டிய உறவினரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.01.2003) திங்கட்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பிள்ளையார் கோவிலடி,*
*வடலியடைப்பு, பண்டத்தரிப்பு* (C/26034) தகவல்: மனைவி, பிள்ளைகள்.

## நாகமணி இரத்தினம்

(உரிமையாளர், இந்திரா மோட்டோஸ் வேக்ஸ், சாவகச்சேரி)

சாவகச்சேரி, சங்கத்தானையைப் பிறப்பிடமாகக் கொண்ட நாகமணி இரத்தினம் 10.01.2003 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் சங்கத்தானை மீனாட்சி அம்மன் ஆலய தர்மகர்த்தாவாகிய காலஞ்சென்றவர்களான நாகமணி - அன்னம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற யோகாம்பிகையின் அன்புக் கணவரும், இந்திராணி (அமெரிக்கா), காலஞ்சென்ற சந்திரா மற்றும் இரத்தினா, லலிதா, நஞ்சனி (கனடா) தேவி, ஈஸ்வரி (பிரான்ஸ்), இராஜன் (பிரான்ஸ்), இராஜமோகன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், நித்தியானந்தன் (அமெரிக்கா), சண்முகநாதன், கருணாநிதி, செல்வராசா, புவனேந்திரன்(கனடா), சிவசிதம்பரம் (பிரான்ஸ்), மல்லிகாதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற துரைராசா மற்றும் செல்லையா, கைலாயபிள்ளை, சிவாநந்தம், கணேசு, திருமதி கோபாலபிள்ளை அழகம்மா, திருமதி சுப்பிரமணியம் (கனடா), சரஸ்வதி (கண்மணி) ஆகியோரின் சகோதரனும் விக்னேஸ் (அமெரிக்கா), அஜந்தா (அமெரிக்கா), ஜிதேந்திரா (கனடா), சுதேந்திரா, டயானா, சிந்துஜா, தர்ஷா, சர்மிளா, டயானா, செந்தா, செந்தூரன், பிரான்ஸைச் சேர்ந்த அலெக்ஸிஸ், அலெக்ஸ், சிந்துஜா, இந்திரகா, பிரான்சிஸ், கனடாவைச் சேர்ந்த கெவன், பினோ, லண்டனைச் சேர்ந்த சந்திரமோகன், குகாநந்தினி ஆகியோரின் பேரனும், ஆகாஸ் (சுயன்) அவர்களின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.01.2003) திங்கட்கிழமை 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மீனாட்சி அம்மன் கோவிலடி,*
*சங்கத்தானை,*
*சாவகச்சேரி.* (13165) தகவல்: இ.இராஜமோகன் (மகன்) ந.கருணாநிதி (மருமகன்)



'உதயன்' பத்திரிகை நிறுவனத்தின் அனுசரணையுடன் நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் பொலீஸாரால் வாகன சாரதிகளுக்கான செயலமர்வு நடத்தப்பட்டது. இச்செயலமர்வின் ஆரம்பத்தில் பொலீஸ் அத்தியட்சகர் ஹெட்டர் தர்மசிறீ மங்கள விளக்கேற்றுவதனையும், யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம், சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் ஏ.கமால்டீன், யாழ்.மாநகர முதல்வர் எஸ்.கந்தையன், யாழ்.மாவட்ட நீதிபதி ரீ.விக்னராஜா, பொலீஸ் அதிகாரி ஹட்டர் தர்மஶ்ரீ ஆகியோர் அமர்ந்திருப்பதையும் செயலமர்வில் கலந்துகொண்டவர்கள் வீதி ஒழுங்குகளைப் பேணுவதாக உறுதிமொழி எடுத்துக்கொள்வதையும் படங்களில் காணலாம். (படம்:பத்மராஜ்)

# போக்குவரத்து ஒழுங்குகள் தொடர்பான கருத்தரங்கு

## பொலீஸார் நடத்தினர்

யாழ்ப்பாணம்,ஜன.13

யாழ்.குடாநாட்டைச் சேர்ந்த வாகனச் சாரதிகள், மாணவர்களுக்கான போக்குவரத்து ஒழுங்கு முறை தொடர்பான கருத்தரங்கு நேற்றுக்காலை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ்.பொலீஸ் நிலைய போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவுப் பொலீஸாரால் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கருத்தரங்கை யாழ்.மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் ஆரம்பித்து வைத்தார். மாணவர், சாரதிகள் ஆகியோரின் பிரதிநிதிகள், பொலீஸ் அதிகாரிகள் ஆகியோர் மங்கள விளக்கேற்றினர். யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் விமல் சுவாமிநாதன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் யாழ். பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி கெ.தர்மசிறி, போக்குவரத்துக் கண்காணிப்பு பிரிவு பொலீஸ் பொறுப்பதிகாரி பெரேரா, யாழ்மாவட்ட போக்குவரத்துத் திணைக்கள அதிகாரி வி.பத்மநாதன், உதவி பொலீஸ் பொறுப்பதிகாரி எம்.ஏ.கமாலதீன், யாழ்.மாநகர முதல்வர் செ.கந்தையன், யாழ்.நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா ஆகியோர் கலந்துகொண்டு போக்குவரத்து ஒழுங்குகள் தொடர்பாக விளக்கமளித்து உரையாற்றினார்கள்.

இக்கருத்தரங்கில் வாகனச் சாரதிகள், மாணவர்கள் உட்பட பெருந்தொகையானோர் கலந்துகொண்டனர்.

(ஒ-173-12)

# நாகதம்பிரான் அம்மன் ஆலயம் படையினரால் பராமரிப்பாம்

வடமராட்சி,ஜன.13

நாகர்கோவில் உயர்பாதுகாப்பு வலயத்தில் உள்ள அம்மன் கோவில் அங்கு நிலை கொண்டுள்ள படையினரால் பராமரிக்கப்பட்டு வருவதாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

இப்பாதுகாப்பு வலயத்துக்குள் உள்ள வீடுகள், கோயில்களைப் பார்வையிட இரண்டாவது தடவையாக அப்பகுதியைச் சேர்ந்த ஒன்பது பேர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை படையினரால் அழைத்துச் செல்லப்பட்டனர்.

இவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டவர்கள் நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் கோவில், அம்மன் கோவில் ஆகியவற்றைப் பார்வையிட அனுமதிக்கப்பட்டனர்.

பூர்வீக நாகதம்பிரான் கோவில் சுற்றாடல் சுத்தமாகக் காணப்படுவதாகவும் -

ஆனால், மூலஸ்தானத்தைப் பார்ப்பதற்கு உட்செல்ல முடியாமல் போய்விட்டதாகவும் - கோவிலின் மணிக்கோபுரம் உடைந்து கண்டாமணி துண்டுதுண்டாக உள்ளதாகவும் - அவர்கள் தெரிவித்தனர்.

அம்மன் கோவிலில் தாம் அமுது வைத்து வழிபடுவதாக அங்கு சென்றவர்களிடம் படையினர் தெரிவித்தனர்.

சுமார் ஒன்றரைமணி நேரம் அங்கு நின்ற இவர்கள், அங்கு நின்றவாறே தூரத்தில் இருந்த தமது குடியிருப்புகளைப் பார்த்ததாகவும் தெரிவித்தனர். (ஒ-173)

# வடமராட்சி கிழக்கு பகுதியில் தேக்கு, சமண்டலை நடுகை

வடமராட்சி கிழக்கிலுள்ள குடத்தனை, மணல்காட்டுப் பகுதியில் தேக்கு மற்றும் சமண்டலை மரங்கள் நடப்பட்டு வருகின்றன.

இப்பகுதியில் சட்டவிரோதமாக சவுக்கு மரங்கள் அழிக்கப்பட்ட இடங்களில் வடமராட்சி கிழக்கு சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சங்கத்தினால் இம்மரங்கள் நடப்பட்டு வருகின்றன.

நடுகைக்குத் தேவையான தேக்கு, சமண்டலை மரங்களை பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்திடமிருந்து பெற்று, விடுதலைப் புலிகளின் வடமராட்சி அரசியல் துறை அலுவலகம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-173)

# நல்லூர் பகுதியில் 1603 குடும்பங்கள் மீளக்குடியமர்வு

யாழ்ப்பாணம்,ஜன.13

கடந்த வருடம் யாழ். - கண்டி வீதி திறக்கப்பட்ட பின்னர் இதுவரை நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் மட்டும் ஆயிரத்து 603 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்திருப்பதாக நல்லூர் பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.

இவற்றில் 133 குடும்பங்களுக்கு மீளக்குடியமர்வுக் கொடுப்பனவாக தலா 15 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு விட்டதாகவும் -

மேலும் 33 குடும்பங்களுக்கு இம்மாதம் இக்கொடுப்பனவு கொடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

தமது பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மணியந்தோட்டம் மற்றும் அதனை அண்டிய சில பகுதிகளில் வெடிபொருள்கள் அகற்றப்படாமல் இருப்பதால் அங்கு மக்கள் மீளக்குடியமர்வது தடைசெய்யப்பட்டிருப்பதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

(ஒ-4)


சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 3327497 இருந்து 3345596 வரை
சீட்டிழுப்பு இல. 1366
திகதி 11.01.2003

வெற்றி எண்கள்
08 09 24 44 57

போனஸ் எண்
33

ஜக்பொட் பரிசு
ரூபா.1,500,000/- வெல்லப்படவில்லை.

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 1,500,000- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 04 | 100,000/- | 400,000/- |
| 4 | 112 | 10,000/- | 1,120,000/- |
| 3 | 5,630 | 500/- | 2,815,000/- |
| 2 | 95,405 | 20/- | 1,908,100/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 08ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 116,272 | 10/- | 1,162,720/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.7,405,820/-

இந்த புதன்கிழமைக்கான ஜக்பொட்
ரூபா. 2,400,250/-

தொடர் இல. 2346937க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுகள் 2003 ஜனவரி 15ம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

3342035-5-74
3330749-1-83
3328352-5-30
3334668-8-86
3337803-0-11

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

PHOENIX O&M



அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 439 |
| திகதி | 10.01.2003 |

டிக்கட்டின் நிறம் - சிவப்பு

செல்லுபடியாகும் தொடர் இல.
5668654-5682844

வெற்றி இலக்கங்கள்
28 43 52 55

லக்கினம்
கும்பம்

ஜக்பொட் பரிசு
ரூபா. 3,815,250/-
வெல்லப்பட்டது

இந்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூபா 1,000,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1 இல | 311,793 | 10 | 3,117,930 |
| 2 இலக்கங்கள் | 28,698 | 20 | 573,960 |
| 1 இல + லக்கினம் | 28,394 | 30 | 851,820 |
| 2 இல + லக்கினம் | 2,589 | 100 | 258,900 |
| 3 இலக்கங்கள் | 771 | 500 | 385,500 |
| 3 இல + லக்கினம் | 71 | 5,000 | 355,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | 01 | 3,815,250 | 3,815,250 |
| மொத்தம் | 372,321 | - | 9,758,360 |

மொத்தப் பரிசுத் தொகை
ரூபா. 9,758,360/-

தொடர் இல. 4688931க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுகள் 2003 ஜனவரி 14ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் பஜாஜ் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

5681842-1-91
5673289-5-25
5675547-3-98
5669776-1-54
5673491-5-96

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

PHOENIX O&M

# சோதனைகளை எதிர்நோக்கும் புத்தாண்டு

**உலக வரைபடத்தில் சிறிலங்கா மீது பட்ட ரத்தக் கறை தற்போது கலைந்து வருகிறது என்கிறார் கட்டுரை யாளர் ரஞ்சித் ஆனந்த ஜயசிங்க. 'லங்காதீப' நாளிதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

கடந்துபோன காலத்தைவிட இந்த ஓராண்டுகால இடைவெளியில் உலகில் பெருமளவிலான மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. செயற்பாடுகளின் பலாபலன்களே மாற்றங்களாகும். மனிதனின் செயற்பாடுகளின் வெற்றி, சமூகத்தின் அமைதியிலேயே தங்கியுள்ளது. எனவே, நாம் மற்றவர்களுடன் தொடர்புகளை மேற்கொள்ளும்போது நேற்றையைவிட இன்று நடுநிலை நின்று நியாயத்துடன் நடந்துகொள்ளுதல் அவசியம் என்றாகிறது.

'ஒருமனிதனின் வயது அவனது செய்கைகளாலொழிய, காலத்தால் அளக்கப்படுவதில்லை' என்ற பிரபல அறிஞரின் கருத்தை நாம் கேள்விப்பட்டுள்ளோம். எமது தராதரத்தைக் கணிப்பதற்கான அளவுகோல் எமது நடவடிக்கைகளே எனக்கூற இயலும்.

இந்த அடிப்படையில், நம்மில் பெரும்பாலானோர் பேசவிரும்பாத யதார்த்தம் பற்றிச் சிந்தித்துப் பார்ப்பதற்காக நாம் உங்களைக் கூட்டிச் செல்லப் பொருத்தமானவேளை இந்த ஜனவரியின் ஆரம்பமேயன்றி, வேறெதுவாயும் அமையமுடியாது.

நாம் நாட்டின் இன்றைய நிலை தொடர்பாக எதிர்நோக்கும் பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு அவற்றுக்குத் தீர்வுகாண முயற்சிக்க உகந்த வேளை இதுவேயாகும். இச்சந்தர்ப்பத்தில் நியாயமான தர்மநெறிகளுக்கு நாம் மதிப்பளித்தல் அவசியமாகும். நியாயமான தர்மவழிகளை எமக்குப் போதித்த புத்தபிரானின் போதனைகளை மனத்தில் கொண்டு தொடர வேண்டிய எமது பயணம், இடைநிலை மத்தியஸ்தர்மூலம் இலகுபடுத்தப்பட்டுள்ளது. ஆரம்பத்திலிருந்தே பௌத்தமதத்தில் இனவாதம் புறந்தள்ளப்பட்டுள்ளது.

சில நாட்களின் முன் உதயமான 2003ஆம் ஆண்டில், ஸ்ரீலங்காவில் இடம்பெற்றுவந்த பாரதூரமான இனமோதலுக்கு எம்மால் தீர்வுகாண வேண்டியேற்பட்டுள்ளது. இதுதொடர்பாக முன்னெடுக்கப்படும் முயற்சிகளில் நியாயமான தர்மம், பௌத்தமத அடிப்படை நோக்கு, பரிசுத்தமான அமைதி நாடும் மனம் ஆகியவற்றுடன் விரைவான செயலூக்கமும் இடம்பெறவேண்டும். முற்காலத்தில் 'உலகத்தின் முத்து' எனக் கருதப்பட்ட ஸ்ரீலங்கா, கடந்த 20 ஆண்டுக்கும் மேற்பட்ட காலமாக 'இரத்தம் சிந்தும் யுத்த பூமி' என மேற்கத்திய நாடுகளால் விமர்சிக்கப்பட்டதை எங்களால் மறந்துவிட முடியுமா?

கடந்தவருட ஆரம்பம்முதல் இன்றுவரை நாட்டில் அமைதி நிலவுகின்றது. யுத்தம் தொடர்பான கொடிய அநுபவங்கள் பெரும்பாலும் அற்றுப்போய்விட்டன. கடந்த ஒருவருட காலமாக யுத்தம் இடம்பெறாமையால் நாட்டுக்கு 1,540கோடி ரூபா மீந்துள்ளமை பொருளாதார ரீதியில் பலமளிக்கும் நிலையாகும். ஆனால், இவை யாவற்றுக்கும் மேலாக வடக்குக்கும் தெற்குக்கும் இடையேயான மனிதப்பண்பு வலுவடைவது பெறுமதிமிக்க விடயமாய் அமைகிறது. யுத்தம் காரணமாக உலகம் முழுவதிலும் நிலவிய நம் நாடு தொடர்பான அவப்பெயர் நீங்கிவருகிறது.

2003ஆம் ஆண்டைச் சமாதானத்துக்கான ஆண்டாக அரசு பிரகடனப்படுத்தியுள்ளது. துப்பாக்கி வேட்டுச் சத்தம் எதுவுமற்ற ஆண்டாகக் கடந்த ஆண்டு கழிந்தமையையிட்டுத் நாம் மகிழ்ச்சியடைவதாக ஜனாதிபதி சந்திரிகா தமது நத்தார்தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருந்தார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவோ சமாதானத்துக்கான பாதையில் நாம் இன்னும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளதெனத் தெரிவித்திருந்தார். இவை ஒருபுறமிருக்க ஜே.வி.பி.உட்பட எதிரணியினரால் ஒட்டப்பட்ட சுவரொட்டிகளில் ரணில் விக்கிரமசிங்க, மிலிந்த மொறகொட மற்றும் ஜி.எல். பீரிஸ் ஆகியோரை யேசுநாதரைக் காட்டிக் கொடுத்த 'யூதாஸ்'க்கு ஒப்பிட்டு அவர்கள் நாட்டைக் காட்டிக் கொடுக்கப்போவதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. சில ஆண்டுகளுக்கு முன்னர் பொ.ஐ.முன்னணி அரசின் ஆட்சிக் காலத்தில் புதிய அரசமைப்பின்மூலம் அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் தன்யோசனையைத், தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா முன்வைத்தவேளையில் சந்திரிகா,ஜீ.எல். பீரிஸ் மற்றும் அஸ்ரப் ஆகியோர் இரகசிய ஒப்பந்தமூலம் நாட்டைத் துண்டாட முயல்வதாக ஜே.வி.பி.யினர் சுவரொட்டிகள் ஒட்டினர். அன்று எதிரணியிலிருந்த ரணில் விக்கிரமசிங்க, மிலிந்த மொறகொட ஆகியோர் அவ்வேளையில் ஜே.வி.பி.யினரது பார்வையில் பரிசுத்தமானவர்களாகத் தோன்றினார்கள். ஆனால், பின்னர் தற்போதைய அதிகாரப் பகிர்வு ஆலோசனைகளை ஐ.தே.முன்னணி அரசசமர்ப்பித்ததையடுத்து ஜே.வி.பி.யினரது பார்வையில் அவர்கள் கறைபடிந்தவர்களாகத் தோன்றுகின்றனர்.

ஜே.வி.பி.யினர் முன்னர் சந்திரிகாவுக்குச் சூட்டிய 'யூதாஸ்' பட்டத்தை இன்று ரணில் விக்கிரமசிங்கவுக்குச் சூட்டியுள்ளனர். இந்தவிதமாக தற்போதைய அதிகாரப்பகிர்வு யோசனைகளுக்கெதிராக எதிரணியினர் தமது அரசியல் மேடைகளிலும் தாம் பங்குகொள்ளும் பொது நிகழ்ச்சிகளிலும் பிரசாரத்தை மேற்கொண்டு வருகின்றனர். ஜனநாயகம் பேணப்படும் நாடொன்றில் எவருக்கும் தமது கருத்துக்களை வெளிப்படுத்தும் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், இவ்வித பண்பற்ற சுவரொட்டி நடவடிக்கைகளில் ஈடுபடும் இவர்கள், இதற்கும் மேல் சென்று தரக்குறைவான நடவடிக்கைகளிலும் ஈடுபட வாய்ப்பு ஏற்படலாம்.

அதிகாரப்பகிர்வு யோசனைகளை செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் புரையோடியுள்ள இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண பொருத்தமான வழி குறித்து எவரும் யோசனை தெரிவிப்பதாயில்லை. புலிகளை யுத்தத்தின்மூலம் தோற்கடிக்க வேண்டுமெனச் சிலர்

## மாற்றார் தோட்டத்திலிருந்து.....

இலேசான விடயம்போல் கூறிக்கொள்கின்றனர். இதுஒரு சிறந்த கற்பனையாகும்.

ஆனால், இத்தகைய எதிர்பார்ப்பில் கடந்த 20 ஆண்டுகாலம் அரசுகள் எடுத்த முயற்சிகள் யாவும் தோல்வியில் முடிவடைந்தன. அரசின தற்போதைய முயற்சி தொடர்பான சரியான பெறுபேறு தெரிந்துகொள்வதற்கு முன்னர், நாம் இப்பிரச்சினையில் தலையிடாதிருத்தல் சிறப்பாகும்.

வங்கிக் கடன்மூலம் அரச உத்தியோகத்தர்களுக்குச் சம்பளம் வழங்கும் நலிவுற்ற பொருளாதார நிலைகொண்ட நாடு, வெளிநாட்டு உதவிகளைக் கொண்டு யுத்தத்தைத் தொடர்ந்து நடத்த முற்பட்டால் நாடு பொருளாதாரச் சீரழிவுக்குட்படுவதனின்றும் தவிர்க்கமுடியாது. முடிவில் நாடும் மக்களும் அழிவுக்குள்ளாக வேண்டியேற்படும். எனவே, சமாதானத்துக்குத் தயாராவதைத் தவிர எம்மில் எவருக்காவது வேறு மாற்றுவழிகள் உள்ளனவா? சமாதானம் தொடர்பாகத் தொடரும் நடவடிக்கைகள் பற்றி சரியான இடத்திலிருந்து சரியான தகவல்களை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்காக எப்படியும் சமாதானம் உருவாகியே தீரும் என்ற நம்பிக்கையில் நாட்டின் பாதுகாப்பைத் தளர்த்துதல் பொருத்தமானதல்ல. 'சமாதானத்தைப் பாதுகாப்பதற்கான செயல்மார்க்கம் என்னவெனில் எவ்வேளையிலும் யுத்தத்துக்குத் தயாராக இருப்பதேயாகும்' என முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் வாஷிங்ரன் ஒரு சந்தர்ப்பத்தில் கூறியிருந்தார். தற்போதுகூட சில இடங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளதாக விமர்சனங்கள் எழுந்துள்ளன. இது அதிக வனத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கையாகும்.

நாட்டின் சமாதான முயற்சிகள் தொடர்பாக பலதரப்பட்ட விமர்சனங்கள் தலைதூக்கியுள்ளன. இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதன்மூலம் அரசு தொடர்ந்து பதவியில் நீடித்திருக்க முயற்சிக்கிறது என ஒருவர் கூறினார். சமாதானம் எட்டப்பட்டால் குறிப்பிட்ட அந்த நபருக்கு 'நோபல்' பரிசு கிடைக்கும் என்பது மற்றொரு கருத்தாகும். இச்சமாதான முயற்சிகளில், தமது பங்கு என்னவென வேறொரு பிரிவினர் வினாவுகின்றனர். இது வேறொரு வகை அபிப்பிராயம். இதேசமயம் தீவிர இடதுசாரித் தலைவர்களான விக்கிரமபாகு கருணாரத்ன, பட்டி வீரக்கோன் மற்றும் ராஜா கொல்லுரே ஆகியோர் எந்தப் பிரச்சினையையும் உருவாக்காமல் இம்முயற்சிகளை முன்னோக்கித் தள்ளும் பணியை மேற்கொண்டுள்ளனர். சமாதான முயற்சிகள் தொடர்பான திட்டங்கள் எவற்றையும ஆராயாமலே கொள்கை ரீதியாக அவர்கள் இச்சமாதான முயற்சிகளை ஆதரிக்க முன்வந்துள்ளனர்.

இது இவ்வாறிருக்க பிறிதொரு குழுவினர் இதுதொடர்பான பயனற்ற கருத்துக்களைத் தெரிவிப்பது மட்டுமன்றி, விளைவுகள் குறித்துக் கற்பனைக் கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

இவை யாவற்றினதும் முன்பாக உண்மை அமைதி பேணுகிறது. இந்த உண்மை பற்றிய விமர்சனங்களால் கருத்துக் குழப்பங்கள் உருவாகின்றன.

2002 டிசெம்பர் 5ஆம் திகதியின் பின்னர், தான் விரும்பும் எவ்வேளையிலும் அரசைக் கலைத்துவிடுவதற்கான அதிகாரத்தை ஜனாதிபதி பெறுள்ளார். நாடாளுமன்றத்தின் திறவுகோல் ஜனாதிபதியின்கையில் கிடைத்தவேளையில், சமாதானத்தின திறவுகோலை அரசு தன்கையில் எடுத்துக்கொண்டது. ஒருபுறம் எதிரணி பலமான நிலையை அடையும்வேளையில், சமாதான முன்னெடுப்புக்கள் காரணமாக அரசும் பலமானதொரு நிலையை எட்டியுள்ளது. தற்போது அரசும் எதிரணியும் சமமான பலத்துடன் இயங்கிவருவதாகத் தோன்றுகிறது. ஜனாதிபதிக்குத் தாம் விரும்பும் வேளையில் அரசைக் கலைத்துவிடுவதற்கான அதிகாரம் இப்போது கிடைத்துள்ளபோதும், பதிலுக்கு அரசும் தன் சமாதான முயற்சிகளை முக்கியமானதொரு கட்டத்திற்கு எடுத்துச் செல்வதில் வெற்றிகண்டிருப்பதால், தற்போதைய நிலையில் ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. இந்த வேளையில் ஜனாதிபதி அரசைக் கலைப்பதற்கு முயன்றால் ஜனாதிபதியின் தலைமையிலான பொ.ஐ.முன்னணி சமாதானத்தைச் சீர்குலைப்பதான குற்றச்சாட்டுக்கும், அபகீர்த்திக்கும் உள்ளாக நேரிடும். அதுவுமின்றி சர்வதேச சமூகம் இச்சமாதான முயற்சிகளின் வெற்றியை ஆவலோடு எதிர்நோக்கியுள்ளது. அமெரிக்கா தொடக்கம் இந்தியாவரை எல்லா நாடுகளுமே இவ்வெற்றியை எதிர்பார்த்திருக்கின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உட்பட்ட பொ.ஐ.முன்னணியிலும் எதிர்வரும் ஓரிரு மாதங்களில் அடிப்படை மாற்றங்கள் ஏற்படலாமென இப்போது தெரியவந்துள்ளது. இதுவரை பொ.ஐ.முன்னணியில் அங்கம் வகித்த லங்கா சமசமாஜக்கட்சி மற்றும் கம்யூனிஸ்ட்கட்சி ஆகிய இடதுசாரிக் கட்சிகள் அம்முன்னணியினின்றும் வெளியேற, ஜே.வி.யினரை அம்முன்னணியில் சேர்த்துக்கொள்ளவதற்கான ஆரம்பப் பேச்சு தொடங்கப்பட்டுள்ளதாக அறியவந்துள்ளது. இவை ஸ்ரீலங்கா அரசியல் அரங்கில் மாற்றங்களை உண்டாக்கக் காரணிகளாக அமையலாம். ஜே.வி.பியும் ஸ்ரீல.சு.கட்சியும் இதற்கு முன்னர் தகுதிகாண் அரசொன்று அமைப்பதற்கு உடன்பட்டு சிறிதுகாலம் செயற்பட்டது எமக்கு ஞாபகத்தில் உள்ளது. இம்முறை அக்கட்சிகள் இணைவது முன்னையதைவிட முக்கியமானதாகும் ஏனெனில், எதிர்வரும் தேர்தல்களில் இவ்விரு கட்சிகளும் இணைந்து பொது அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள இருகட்சிகளுக்கும் வாய்ப்பு உருவாகும்.

ஜனாதிபதி சந்திரிகா, நாட்டின் ஜனாதிபதிப் பதவியை வகிப்பதோடு பொ.ஐ.முன்னணியின் தலைவியாகவும், ஸ்ரீல.சு.கட்சியின் தலைவியாகவும் இருந்து வருகிறார். அந்தவகையில் தற்போதைய சமாதான முயற்சிகளில் அவர் வகிக்கும் பாத்திரம் முக்கியத்துவம் கொண்டதாகும். சமாதான முயற்சிகளுக்கு தன் முழு ஆதரவையும் வழங்கத் தயாரென பல தடவைகள் கூறிவந்த அவர், தற்போது அரசின் சமாதான முயற்சிகளில் தான் நம்பிக்கையற்றிருப்பதாகக் கூறிவருகிறார். அதுமட்டுமன்றி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது விருப்பப்படி முடிவுகளை மேற்கொள்வதைதான் அனுமதிக்கப்போவதில்லை எனவும் கூறிவருகின்றார்.

இந்தச் சூழ்நிலையில் சமாதான முயற்சிகளின் வெற்றி குறித்து ஸ்ரீல.சு.கட்சி மற்றும் ஜே.வி.பியினரின் நிலைப்பாடு எதுவாயிருக்குமென்பது குறித்து சமாதான முயற்சிகளை ஆதரித்தும், எதிர்த்தும் கருத்துக்களைக் கொண்டுள்ள ஏனைய குழுக்களைப் போன்றே பிரபாகரன் தரப்பினரும் அவதானித்தவாறுள்ளனர். இச்சமாதான முயற்சிகள் நாட்டைப் பிரிக்கும் முயற்சியென ஜே.வி.பியினர் வாதிடுகின்றனர். இவ்விடயத்தில் ஸ்ரீல.சு.கட்சியின நிலைப்பாடு பண்டாரவளையின் காலநிலை மாற்றம போன்று அடிக்கடி வேறுபடுகிறது. எப்படியிருந்தபோதும் ஸ்ரீல.சு.கட்சி மற்றும் ஜே.வி.பியின் கூட்டைப் பேணுவதற்கு முடிவு காணப்படவேண்டிய பிரச்சினையாக

**தமிழில்: வீயெஸ்ரீ**

மீள்திருப்பது இச்சமாதான முயற்சிகள் தொடர்பாக அவ்விருகட்சிகள் கொண்டுள்ள நிலைப்பாடேயாகும். இவ்விடயத்தில் ஸ்ரீல.சு.கட்சி, ஜே.வி.பியின் நிலைப்பாட்டுக்கு இணங்கிப் போகுமா? அல்லது ஜே.வி.பி., ஸ்ரீல.சு.கட்சியின் கொள்கையை அனுசரித்து நடக்குமா என்பதைக் காண முழு நாடும் ஆவலுடன் காத்திருக்கிறது. உண்மையில் இச்சிக்கலான விடயத்தில் தீர்மானம் மேற்கொள்வது சிரமமானதே. ஜே.வி.பியினரின் விருப்பத்தை அனுசரித்து ஜனாதிபதி தனது ஸ்திர நிலையிலிருந்து தடம்மாறிச்செல்வாரா என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ள இன்னும் வேளைவரவில்லை.

ஜனாதிபதி, நாட்டின் முக்கிய தேசியக் கட்சியொன்றின் தலைவியாக உள்ளதால் சர்வதேச சமூகத்தின் குற்றச்சாட்டுக்களின்றும் தம்மைப் பாதுகாப்பது இலேசான காரியமல்ல. அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் நோர்வே உட்பட்ட ஐரோப்பிய நாடுகள் பலவும் ஸ்ரீலங்காவின் சமாதான முயற்சிகளுக்கு பெரும் ஆதரவளித்து வெற்றிகரமாக அமையப் பல வழிகளில் உதவ முனவந்துள்ளன. அமெரிக்க ராஜாங்க செயலாளர் ஜெனரல் கொலின் பவலும், அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷும் இவ்வாண்டில ஸ்ரீலங்காவுக்கு விஜயம் செய்யக்கூடுமென உயர் ஸ்தானிகராலயத் தகவல்கள் மூலம் தெரியவருகிறது. இவர்கள் அரசு மற்றும் எதிரணியினருக்கு மட்டுமன்றி விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் சமாதானம் தொடர்பான செய்திகளை எடுத்து வரவிருப்பதாகக் கூறப்படுகிறது. எனவே, இச்சமாதான முயற்சிகளுக்கு பாதிப்பு ஏற்படுத்துவது எவராலும் இலேசில் செய்யக்கூடிய காரிய மல்ல. எனவே, ஜே.வி.பிக்கும் ஸ்ரீல.சு. கட்சிக்குமிடையே கொள்கை அடிப்படையில் நெருக்கமான உறவு நிலவிய போதும், இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் கடைசியல் அக்கொள்கை நிலைப்பாடுகளில் மாற்றம் ஏற்படுத்துவதற்கு அதிக வாய்ப்புக்கள் உண்டு.

'ஒரே ஆற்றில் இரு தடவைகள் இறங்கமுடியாதென்ற' பழமொழியை நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம். ஆனால், சமஷ்டி அமைப்பு என்ற கங்கையில் நாம் மீண்டுமொரு தடவை இறங்க வேண்டியுள்ளது. 1920களில் முதன்முதலில் இந்நாட்டை நிர்வகித்த வெள்ளையர் இனத்தை சேர்ந்த 'சேர் வில்லியம் ஹென்றி மனிங்ஸ் என்பவரே இந்நாடு சமஷ்டி அமைப்பு முறையில் நிர்வகிக்கப்படவேண்டும் என்ற கருத்தை வெளியிட்டார். அபிப்பிராயம் தெரிவித்தது மட்டுமன்றி மலையகத் தலைவர்கள் தலைமைச செயலாளரை சந்தித்து அதனை இலங்கைப்பிரஜைகளின் வேண்டுகோளாக பிரித்தானிய அரசுக்கு சமர்ப்பிக்க அவர் நடவடிக்கை மேற்கொண்டபோதும் அக்கோரிக்கை அரங்கில் அரசால் மறுக்கப்பட்டது.

அதற்கும் பல ஆண்டுகளின் பின்னர் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் கல்விகற்றுத்திரும்பிய எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க இந்நாட்டுக்கு சமஷ்டி அமைப்பு ஆட்சி முறையே உகந்ததெனக்கருத்துத் தெரிவித்தார். அவ்வேளையில் அவரது அக்கருத்துக்கு எவ்வித எதிர்ப்பு அலையும் உருவாகவில்லை அதன்பின்னர் வடக்கின் தமிழ் அரசியல் தலைவரான எஸ்.ஜே.வி. செல்வநாயகம் 1940களின் பிற்பகுதியில் சமஷ்டி ஆட்சி முறைபற்றிப் பிரஸ்தாபித்தார். அந்தக கொள்கையை அடிப்படையாகக் கொண்டு சமஷ்டிக் கட்சியையும் உருவாக்கினார்.அத்தோடு வடக்கின் மற்றுமொருகல்விமானும் அரசியல் வாதியுமான சி.சுந்தரலிங்கம் 1950ஆம் ஆண்டளவில் தமிழர்களுக்கான தாயக பூமி என்ற கருத்தை ஸ்ரீலங்காவின் அரசியல் வரலாற்றில் முதன் முதலாக முன்வைத்தார். ஆனால், இக்கருத்துக்களுக்கு நாட்டில் ஆதரவு கிட்டவில்லை 1958 இல் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கவும் 1967 இல் டட்லியும் செல்வநாயகத்துடன் ஒப்பந்தம் செய்துகொள்ள ஆர்வம் காட்டியமை சமஷ்டி முறையின் கீழ் அதிகாரங்களை பகிர்ந்து கொள்ளும நோக்கத்திலாகும். அவ்விரு முயற்சிகளும் தோல்வியுற்றன. 1987இல் இந்திய - இலங்கை ஒப்பந் தம்மூலம ஜே.ஆர்., மாகாண சபைகளை நிறுவியபோதும் அரசியல் மாற்றமேயன்றி அதிகாரப்பகிர்வுகள் சிறு அளவிலேயே இடம்பெற்றன.

இப்போது மீண்டுமொருமுறை நாம் சமஷ்டி அமைப்பு என்ற இடத்துக்கு வந்திருக்கிறோம். இம்முயற்சியின் வெற்றியும் தோல்வியும் நாட்டின் பொதுமக்கள் கையிலேயே தங்கியுள்ளது. அரசியல் கட்சி ஒன்றினாலோ அல்லது குழுக்களாலோ இதுபற்றி தீர்மானிக்கமுடியாது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டவாறு வடக்கு - கிழக்கு தொடர்பான பிரச்சினையில் மேற்கொள்ளப்படும் எந்த ஒப்பந்தமும் பொதுமக்களின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்டே அரசமைப்பாக்கப்படவேண்டும். எனவே, எவரது விமர்சனங்களுக்கு மத்தியிலும் இனப்பிரச்சினை தொடர்பான கடைசித்தீர்மானம் எடுப்பதை ஜனநாயகத்தின் உரிமையாளர்களான பொதுமக்களின பொறுப்பில் விடுவதே உசிதமானது.

இவ்வாறான தீர்மானம் மேற்கொள்ளுமுன் யுத்தத்தினால் பெற்ற இலாப நட்டங்களையும் சமாதானத்தால் கிட்டவுள்ள இலாபநட்டங்களையும் ஒப்பிட்டு பார்க்கப் பொதுமக்களுக்கு சந்தர்ப்பம் கிட்டுகிறது. இவ்விடத்தில் பிரபாகரன் தொடர்பாகவும் பொதுமக்கள் மதிப்பீடு இருக்க வேண்டும். அவர் 20 வருடகால யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்து ஐம்பது வருடங்களாக செல்வநாயகம் ஆகியோர் முன்வைத்த சமஷ்டி அமைப்புப் பற்றி பேச இணங்கியுள்ளார். இது அவரது தந்திரமா அல்லது அரசியல் உபாயமா அல்லது ஜனாதிபதி கூறுவது போன்று வேறு ஏதாவது நோக்கமோ என்பது குறித்து எமக்குத்தெரியாது.

அரசுக்கு தற்போதுள்ள வழி அவ்வப்போதைய தருணங்களிலுள்ள நிலைமைக்கு ஏற்ப நடவடிக்கை மேற்கொள்வதேயாகும். இச்சமாதான முயற்சிகள் வெற்றியடையுமானால் பிரதமரின் பெயர் மட்டுமல்ல ஜனாதிபதியின் பெயரும் வரலாற்றில் இடம் பெறும். எனவே, பொறுப்புள்ள அரசியல் அதிகாரத்தின்மூலம் இந் நாட்டின பாரதூரமான பிரச்சினைக்கு தீர்வு கண்டு நாட்டைச்சுபீட்சமடையச் செய்வதற்கு இதுபோன்ற அரியசந்தர்ப்பம் இனியொருபோதும் கிடைக்கப்போவதில்லை. இந்நிலையில், இந்நடவடிக்கைகளுக்கான ஆதரவு மற்றும் எதிர்ப்பு அபிப்பிராயங்களையும் அனைத்துச்சிறிய கட்சிகளின் அபிப்பிராயங்களையும் ஒன்று திரட்டி இறுதித்தீர்வுகாணவேண்டிய கடமை அரசுக்கு உண்டு.

இதற்காக ஜனாதிபதி கருதுவது போன்று சர்வகட்சி மாநாடு அவசியமா என்பது பின்னர் தீர்மானிக்கப்படவேண்டிய விடயம் இவ்வகையான மாநாடுகளின் தீர்மானம் குறித்து பொதுமக்கள் அக்கறை காட்டுவதில்லை பொ.ஐ.முன்னணியாலும் ஐ.தே.கட்சியினாலும் முன்னர் தீர்க்கமுடியாத இப் பிரச்சினையை இவ்வகையான குழுவினால் தீர்ப்பதற்கு முன்னர் பல தடவைகள் முயற்சி மேற்கொள்ளப்பட்டன. எனவே, திருப்தி அளிக்கும் வகையிலான முடிவுகளைத்தரும் விசுவாசமான பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்படுமாயின் அது நியாயமானதே ஒருகாலத்தில் பிச்சைக்காரனின் உடம்பிலுள்ள காயம் போன்றிருந்த இந்த இனப்பிரச்சினைக்கு இவ்வருடத்தில் தீர்வு ஒன்று எட்டப்பட முடியுமாயின் 2003ஆம் ஆண்டு பூரணமான ஆரோக்கியமான ஆண்டாக அமையும். சமாதானத்துடன், ஐக்கியத்துடன், சௌபாக்கியம்மிக்க நற்புத்தாண்டாய் அமைவதாக. ★

# நாட்டைப் பாதுகாப்பதற்காக அணிதிரள பிக்குகளுக்கு அழைப்பு

## நாளை நுகேகொடையில் பேரணி

கொழும்பு,ஜன.13

நாடு பிரிவினையை நோக்கிச் சென்றுகொண்டுள்ளது. இதனைத் தடுத்து நாட்டைப் பாதுகாப்பதற்கு பிக்குகள் ஒரே அணியில் திரள வேண்டும்.

நாட்டைக் காப்பாற்றுவதற்கான வெளித்த பிக்குமாரின் முன்னணியின் தலைவர் மடிதியவெல விஜிதசேன அநுநாயக்க தேரர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பிக்குமார் பேரணி ஒன்று நாளை பிற்பகல் மூன்று மணிக்கு நுகேகொடை ஆனந்த சமரக்கோன் திறந்த வெளி அரங்கில் நடைபெறவுள்ளது.

அது தொடர்பாக தேரர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

எமது பிக்குகள் சமய, சமூகப் பணிகளில் மிக ஈடுபாடுகொண்டவர்கள். தேசிய சமய, சமூக ரீதியான பிரச்சினைகளை நாடு எதிர்கொண்ட போதெல்லாம் பொதுமக்களுடன் இணைந்து பிக்குகள் போராடிய வரலாறுகள் உண்டு.

ஆங்கில ஏகாதிபத்தியவாதிகளின ஆக்கிரமிப்பை முதலில் எதிர்த்தவர்கள் பிக்குமாரே. 1815 ஆம் ஆண்டு மலைநாட்டு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. வாரியபொல ஸ்ரீசுமங்கல தேரர் பொதுமக்களுடன் இணைந்து அதனை எதிர்த்தார்; எமது உரிமைகள் பாதுகாக்கப்பட்டன.

1848 ஆம் ஆண்டு மாத்தளையில நடந்த கிளர்ச்சியின்போது பிக்குமாரே எதற்கும் தலைமை வகித்தனர். வீரபுரன் அப்புவுடன் இணைந்து குடாபொலமஹா தேரர் ஆங்கிலேயருடன் போராடி எமது உரிமைகளை மீட்டார்.

இலங்கை வரலாற்றில் இவையுள்ளன. தற்போது இலங்கைப் பிக்குமார் மீது பாரிய பொறுப்புச் சுமத்தப்பட்டுள்ளது.

அரசும் விடுதலைப் புலிகளும் செய்துகொண்டுள்ள போர் நிறுத்த உடன்படிக்கை தனி ஈழமொன்றை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டதாகும்.

காவல்துறை, தமிழீழ வங்கி, நீதிமன்றங்கள் வரி விதிப்பு, தமிழீழ வானொலி என்பனவற்றை தன்னகத்தே கொண்ட தனியானதொரு நிர்வாகத்தைப் புலிகள் நடத்திவருகின்றனர்.

இவையெல்லாம் இலங்கை ஒரே நாடு என்ற கோட்பாட்டுக்குள் அமைந்தவையல்லவா?

முந்நூறுக்கும் அதிகமான இராணுவ முகாம்கள் வடக்கு - கிழக்கு பகுதிகளில் மூடப்பட்டுவிட்டன. இப்போது உயர்பாதுகாப்பு வலயத்திலுள்ள இராணுவ முகாம்களையும் அகற்றுமாறு புலிகள் கோருகின்றனர்.

இத்தகைய பாரதூரமான செயல்களை 'எல்லாம் சமாதானத்திற்காகவே' என்று அரசு கூறுவது இங்கு வாழ்கின்ற மக்களின் துரதிர்ஷ்டமாகும்.

நாட்டின் ஐக்கியத்திற்காக பிக்குமார் உடனடியாக அணி திரளவேண்டும். இது அவர்களுடைய கடமை.

நாட்டைப் பாதுகாக்கும் பணியின் முதற்கட்டமாக 10 லட்சம் துண்டுப் பிரசுரங்கள் எம்மால் விநியோகிக்கப்பட்டன. செய்தியாளர் மாநாடும் நடத்தப்பட்டது.

இரண்டாவது கட்டப் பணியாகவே நாளைய பேரணி இடம்பெறவுள்ளது. இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# நடைபெறும் சமாதனப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதிய அவகாசம் இன்மையால் 200 பேராளர்களே அழைக்கப்பட்டிருந்த மாநாட்டுக்கு ஐந்நூறுக்கு மேற்பட்டோர் சமுகமளித்திருந்தனர். முஸ்லிம் காங்கிரஸ் மீது கொண்ட அன்பாலும் பாசத்தாலும் தலைமையின் மீது வைத்துள்ள நேசத்தாலும் அழைக்காமலேயே பெரும் எண்ணிக்கையினர் வந்து குழுமியிருந்தது கண்டு உணர்ச்சிப் பெருக்கால் உருகிப்போனார் ஹக்கீம், அனைவருக்கும் உளமார நன்றி தெரிவித்தார்.

ரவூப் ஹக்கீம் பேராளர் மாநாட்டை ஆரம்பித்து வைத்து உரைநிகழ்த்துகையில், தாம் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டிருப்பதையும் அதியுயர் பீட உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விவரங்களையும் அறிவித்தார்.

மதிய போசன இடைவேளைக்குப் பின்னர் பேராளர் மாநாட்டின் இரண்டாவது' அமர்வு பொதுக்கூட்டமாக நடைபெற்றது.

ரவூப் ஹக்கீம் தனது உரையில் மேலும் கூறியதாவது:-

இன்றைய அரசாங்கம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தயவிலேயே ஆட்சி அமைத்துள்ளது. எமது பங்களிப்பு இல்லாவிட்டால் அரசாங்கமே இல்லை. நாட்டு மக்களின் அரைப் பங்கினரைக் கூட தன்பக்கம் கொண்டிராத அரசுடன் புலிகள் பேச்சு நடத்துகின்றனர்.

'அரசுதான் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்தான் அரசு' என்பதை புலிகள் உணர வேண்டும் இப்படியான நிலையில் எமது தலைமை, எமது ஒற்றுமை, எமது ஐக்கியம் பற்றி எம்மிடம் வியாக்கியானம் செய்கின்றனர்; கேள்வி கேட்கின்றனர். இது வேதனையாக இருக்கின்றது.

எமது தனித்துவத்தை, எமது ஐக்கியத்தை, எமது பேரம் பேசும் வல்லமையை எம்மவர்களே கேள்விக்குறியாக்கிவிட்டனர்.

காலம் காலமாக புறக்கணிக்கப்பட்டுவந்த எமது சமூகத்திற்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத்துள்ளது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் என்ற முறையில் சமாதானப் பேச்சுக்களில் எனக்கு இடம்கிடைத்துள்ளதானது,எமது சமூகத்திற்குக் கிடைத்த கௌரவம்.

சமாதானப் பேச்சு என்ற கூடாரத்துக்குள் ஒரு ஒட்டகம் போல் இப்போது தலையை நுழைத்துள்ளது முஸ்லிம் காங்கிரஸ். அந்தஒட்டகம் தலையை உயர்த்திவிட்டால் கூடாரம் என்னவாகும் என்றுகேட்டார் ரவூப் ஹக்கீம்.

# வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இன, மத பேதமற்ற கல்வி நடவடிக்கை இதில் விடுதலைப் புலிகள் மிக உறுதி!

## தமிழீழ கல்வி மேம்பாட்டுக்கழக துணைத் தலைவர்

வடக்கு - கிழக்கு மாகாணம் கடந்தகால யுத்தத்தால் பொருளாதார ரீதியாக மட்டுமல்ல, கல்வியிலும் பாதிப்பைச் சந்தித்தது மறுக்கமுடியாத ஒன்று. எனவே, இம்மாகாணத்தில் கல்விவளர்ச்சி தொடர்பான செயற்பாடுகள் மிகத்துரிதமாக முன்னெடுத்துச் செல்லப்படவேண்டும். கல்வி நடவடிக்கைகள் இன, மத பேதமின்றி முன்னெடுத்துச் செல்லப்படுவதில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உறுதியாக இருக்கின்றது.

திருகோணமலை, துளசிபுரத்தில் உள்ள முகாமைத்துவ மண்டபத்தில் மாகாணக் கல்வி அபிவிருத்தி தொடர்பான செயலமர்வில் கலந்துகொணட தமிழீழ கல்வி மேம்பாட்டுக்கழகத் துணைப் பொறுப்பாளர் அருண் மாஸ்ரர் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ், கிழக்கு மாகாண வலயக் கல்விப பணிப்பாளர்களுக்கான மூன்று நாள் செயலமர்வு கடந்த 8ஆம் திகதி முதல 10 ஆம்திகதி வரை இடம்பெற்றது. இறுதிநாள நிகழ்வு மாகாணக்கல்விப் பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

துணைப்பொறுப்பாளர் அருண் மாஸ்ரர் தொடர்ந்து பேசுகையில் மேலும் கூறியதாவது:-

எமது மாகாணம் மொழி, ஆங்கிலம், கணிதம் போன்ற பாடங்களில் முன்னேற்றம் காணவில்லை. அதற்கு ஆளணிப்பிரச்சினை, பௌதிகவளத் தட்டுப்பாடு 'என்பவை காரணமாகவிருக்கலாம்.

நகர்ப்புற பாடசாலைகளைவிட பாதிக்கப்பட்ட கஷ்டப் பிரதேச மற்றும் பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளுக்கு முதல் நன்மை பயக்கும் வண்ணம் கல்வி வேலைத் திட்டங்கள் வகுத்துச் செயற்படுத்த வேண்டும்.

அந்த வகையில், அடிப்படைத் தேவைகள் நிவர்த்தி செய்யப்பட்ட நிலையிலேயே அனைத்துப் பாடசாலைகளும் வடக்கு - கிழக்கில் காணப்படவேண்டும். இதனைக் கருத்திற் கொண்டு இந்த ஆண்டுக்கான கல்வி அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் அமையப்பெறவேண்டும்.

வடக்கு - கிழக்கு மாகாணப் புனர்நிர்மாணம், புனர்வாழ்வுக்குச் சர்வதேசநிதி கிடைக்கப்பெறும்போது அதனைக்கொண்டு பிரயோசனமாகச் செயற்படுத்தக் கூடிய வேலைத்திட்டங்கள் எம்மிடம் இருக்கவேண்டும். எல்லாத்தரத்திலானவர்களும் பொறுப்புணர்ந்து துரிதமாகச் செயற்பட வேண்டும். கழிப்பறை, வகுப்பறைகள், கிணறு மற்றும் அடிப்படை வசதிகள் அற்ற பாடசாலைகள் வடக்கு - கிழக்கில் அடுத்த ஆண்டில் இருக்கக் கூடாது.

வடக்கு - கிழக்கு மாகாணத் தலைமைச் செயலாளர் எஸ்ரங்கராஜா தனது உரையில் -

எம்மைச் சுற்றி இடம்பெறுகின்ற பல மாற்றங்களின் மத்தியில் நாம் இருக்கின்றோம். அதனால் நாமும் மாறியாகவேண்டும். இப்போது மாகாண மட்டத்தில் இடம்பெற்று வருகின்ற நிர்வாக சீராக்கலில் பட்டங்களுக்கு முன்னுரிமை கொடுப்பதைவிட சிறப்பாக தொழிற்படுபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்றார்.

மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம், மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் எஸ்.சுப்பிரமணியம், தெஹியத்தை கணடி வலயக்கல்விப் பணிப்பாளர் கொடிதுவக்கு, வே.இளங்குமரன் ஆகியோரும் அங்கு உரையாற்றினர். (ம)

### அகதிகள் மீள்குடியமர்வு குறித்து கிளிநொச்சியில் நாளை கூட்டம்

தமிழகத்தில் உள்ள ஈழத்துத் தமிழ் அகதிகளைத் திருப்பியழைத்து அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துவது தொடர்பான கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிக பிரதிநிகளும் அரசுத்தரப்பு அதிகாரிகளும் புலிகளின் பிரதிநிதிகளும் இக்கூட்டத்தில் கலந்துகொள்வார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

### கோஷ்டி மோதலில் 4பேர் காயம்

யாழ்ப்பாணம்,ஜன.13

நாவாந்துறைப்பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற கோஷ்டி மோதலில் நான்கு பேர் காயமடைந்தனர்.

மோதல் நிலைமை மோசமானதை அடுத்து அப்பகுதியில் நேற்றிரவு பொலீஸார் ஊரடங்கு உத்தரவை பிறப்பித்திருந்ததாகத் தெரியவந்தது.

இரு உதைபந்தாட்ட அணிகளின் ஆதரவாளர்களிடையே இடம்பெற்ற மோதலையடுத்தே இவ்ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

நேற்று மாலை, துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றையடுத்து இந்த மோதல் ஆரம்பமானதாகக் கூறப்பட்டது.

இச்சம்பவத்தில் காயமடைந்த நாவாந்துறை கடற்கரை வீதியைச் சேர்ந்தவர்களான சவிமுத்து பிரசாத் (வயது-23), யேசுதாஸ் ஜெயக்குமார் (வயது-21), பென்டிற் செபமாலைதாஸன் (வயது-25), செல்வராசா றேமன் (வயது-35) ஆகிய நால்வரும யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-9)

### சமய சந்நிதி

காரைநகர்,ஜன.13

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 10.00 மணிக்கு ஐயனாருக்கு ஸ்நபன அபிஷேகம் நடைபெறவுள்ளது.

அன்று பிற்பகல் 4.00 மணிக்கு விசேடபூசை ஆராதனைகளைத் தொடர்ந்து பூரணை, புட்கலை சமேத ஐயனார், திருவீதி உலாவரும் காட்சியும் இடம்பெறும். (ஜ-73)

LOGIC A/L 2004
வகுப்பு அளவையியல்
(வெள்வரைபடம்)
By: P.கமல்
செவ்வாய் - 5.00 p.m.
BRIGHTMAN நீராவியடி.
(13052)

ராஜா யாழ்ப்பாணம்.
முரளி, ராதிகாசௌத்திரி, வடிவேல், மணிவண்ணன் நடித்த
சுந்தரா ட்ராவல்ஸ்
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30
15 முதல் விஜய், ஸ்நேகா நடித்த
வசீகரா
ரிக்கற்றுக்களை முற்பதிவு செய்து கொள்ளலாம்.

நிறைஞ்சனாஸ் சங்கானை
சூர்யா, லைலா, ஸ்னேகா நடித்த
உன்னை நினைத்து
கா.நே. - 11.00, 2.45, 6.00
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 காட்சி மட்டும்
SPIDER MAN

நாகம்ஸ் சுன்னாகம்
அஜித், கிரண், மீனா, திருக்கள் ரவி நடித்த
வில்லன் (புதியது)
காட்சிகள்: 11.00, 5.00 மணி
விசேட காட்சிகள்
வெள்ளி, சனி, ஞாயிறு: 6.30 (புதிய நேரம்)
பொங்கல் வெளியீடாக 15.01.2003 முதல்
பிரசாந், ஸ்னேகா நடித்த
விரும்புகிறேன்
(13162)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



மந்துவில் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சிரேஷ்ட அஞ்சலரும், பல பொது அமைப்புகளில் பதவி வகிப்பவருமாகிய

**வேலுப்பிள்ளை இரத்தினசிங்கம்**

என்பவர் 05-12-2002 சமாதான நீதிவானாகப் பதவியேற்றமையைப் பாராட்டி வாழ்த்துவதோடு, அவரின் சேவை மேன்மேலும் வளர்ச்சி பெறவும் வாழ்த்துகிறோம்.

மக்கள்,
மந்துவில் மேற்கு.

(13171)

## கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலக பிரிவில் கிராம உத்தியோகத்தராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற

**சபாபதி நாராயணன்**

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு அன்னாருக்கு இதயபூர்வமான அஞ்சலியைச் சமர்ப்பிப்பதுடன், துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கிராம உத்தியோகத்தர்கள்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலகம்,
சண்டிலிப்பாய்.

(13173)

# மரண அறிவித்தல்கள்

## செல்லப்பா ஐயாத்துரை

*(ஓய்வு பெற்ற அதிபர்)*

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா ஐயாத்துரை நேற்று (12-01-2003) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா - பச்சைமுத்து தம்பதிகளின் புதல்வரும் காலஞ்சென்ற இராசமணியின் அன்புக்கணவரும் பவானி, மாலினி, நந்தினி, குமுதினி, சிறிதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் இராமச்சந்திரன், தவசீலன்(தவம் ஸ்ரோர்ஸ்-ஈச்சமோட்டை) சச்சிதானந்தம் (இலங்கை மின்சாரசபை), ஞானச்சந்திரன், சுகந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13-01-2003) திங்கட்கிழமை மு.ப. 10.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நுணாவில் மத்தி,*
*தூர்க்கையம்மன் வீதி,*
*சாவகச்சேரி.*

தகவல்:
**மக்கள், மருமக்கள்.**

(c/26038)

## கோபாலபிள்ளை புவனேஸ்வரி

வேலணை கிழக்கு, வங்களாவடியைப் பிறப்பிடமாகவும் இல.7/2, தாளையடி லேன், திருநெல்வேலியைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கோபாலபிள்ளை புவனேஸ்வரி அவர்கள் நேற்று (12-01-2003) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லையா - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் செல்லையா கோபாலபிள்ளையின் அன்பு மனைவியும் சுமதி, இளங்கோ (செல்வா - சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஏகேந்திரன் (இந்திரன்), ஜெயந்தி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் தர்சிகா, தர்சன், தர்சிந்தா, தர்மிளா, தர்னிகா, நிரோசனன் (சுவிஸ்), தேனுகா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பாக்கியலெட்சுமி, காலஞ்சென்ற புனிதவதி மற்றும் திருநாவுக்கரசு, குணபூசணம்(ஜேர்மனி) ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய அறிவித்தல் பின்னர் அறிவிக்கப்படும்.

*7/2, தாளையடிலேன்,*
*திருநெல்வேலி.*

தகவல்:
செ.கோபாலபிள்ளை (கணவர்),
ச.இந்திரன் (மருமகன்)

(c/26037)

## திருமதி சிவப்பிரகாசம் சின்னப்பிள்ளை

**(விடத்தற்பளை)**

விடத்தற்பளையைச் சேர்ந்த திருமதி சிவப்பிரகாசம் சின்னப்பிள்ளை நேற்று (12.01.2003) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் ஜெயலட்சுமி, காலஞ்சென்ற சிவமலர் மற்றும் கமலாம்பிகை (சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, சாவகச்சேரி), சிவராசா (பூசகர், விடத்தற்பளை அம்மன் கோவில்), ரஞ்சினிதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் தங்கராசா, கணபதிப்பிள்ளை, காலஞ்சென்ற தெய்வேந்திரம்பிள்ளை, சரோஜினிதேவி, வேகாவனம் (அஞ்சல் அலுவலகம், வவுனியா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.01.2003) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் உசன், மிருசுவிலில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உசன்,*
*மிருசுவில்.*

தகவல்:
சி.சிவராசா (மகன் - பூசகர்)

(13172)

## ஜப்பான் விசேட.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தியை மேற்கொள்வதற்கான உதவிகளை ஜப்பான் வழங்கவுள்ளதாகத் தூதர் அகாஷி அப்போது தெரிவித்தார்.

எதிர்வரும் மார்ச் மாதத்தில் ஜப்பானில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள ஆறாம் கட்டப் பேச்சுக்களுக்கு வேண்டிய முழு ஒத்துழைப்புக்களையும் ஜப்பான் வழங்கும் என்றும் அகாஷி அப்போது உறுதியளித்தார். ஐந்தாம் கட்டப் பேச்சுக்கள் அடுத்த மாதம் மீண்டும் தாய்லாந்தில் நடைபெறுவது தெரிந்ததே.

அகாஷி இந்த வாரம் வன்னிக்கு விஜயம் செய்யவுள்ளார். எதிர்வரும் 16ஆம் திகதி கிளிநொச்சியில் நடைபெறவுள்ள அவசர மனிதாபிமான மற்றும் புனரமைப்புப் பணிகளுக்கான உதவி அமைப்பான "சிராணி"ன் கூட்டத்திலும் அவர் கலந்துகொள்வார்.

இந்தச் சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம், "இலங்கையின் சமாதான முயற்சிகளில் ஜப்பான் முக்கிய பங்காற்றும் என்று நாம எதிர்பார்க்கின்றோம். இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு ஒன்றைக் காண்பதற்கு ஜப்பான் இரு தரப்பினரையும் ஊக்குவித்து வருகின்றது" - என்று தெரிவித்தார்.

"போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கு ஜப்பான் உறுதியளித்துள்ளது. அது வடக்கு - கிழக்குக்கு மட்டுமானதாக இருக்காது. தென்பகுதிக்கும் கிடைக்கும். அவர்களது பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் வகையில் அது அமைந்திருக்கும்" - என்று பாலசிங்கம் மேலும் சொன்னார்.

பாலசிங்கத்துடனான சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அகாஷி, "ஆசியாவில் சமாதானத்தையும் ஸ்திரத் தன்மையையும் கட்டியெழுப்புவதற்கான பெரும் கடப்பாடு ஜப்பானுக்கு இருக்கின்றது" - என்று கூறினார். சமாதானத்தை வலுப்படுத்தும் ஜப்பானின் தத்துவத்திற்கு இலங்கை ஒரு நல்ல முன்னுதாரணமாக இருக்கும். ஆகவே, போரையும் வன்முறையையும் தடுத்து நிறுத்த முடியும். அது வெற்றிகரமாக முடிந்தால், மக்கள் பாதுகாப்பாக வாழ்வதற்கு ஏற்ற இடமாக ஆசியா மாறிவிடும் என்றும் அவர் சொன்னார். (ம)


**பொருளியல்**

ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள உயர்தரப் பரீட்சையில் தோற்றுகின்ற மாணவர்களுக்கான

**துரித மீட்டல் வகுப்பு**

(ஆரம்ப அலகிலிருந்து)

ஆரம்பம்:-
15.01.2003
புதன்கிழமை
6 மணி (மாலை)

(13124)

ஆசிரியர்:-
S.ஜெயகுமார்
B.A (Hons) Eco.Spl.

SUBRA (14)
சித்தன்கேணி.

குறிப்பு:- வாரத்தில் 7 நாள்களும் மின்னொளியில் வகுப்பு நடைபெறும். அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன.


## கூட்டணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சந்திப்புக்கள் நடைபெற்றுவிட்டன.

20ஆம் திகதி நடைபெறவிருக்கும் முக்கிய சந்திப்பில் சுதந்திரக் கட்சியின் சார்பில் ஜனாதிபதி சந்திரிகா, மங்களசமரவீர, நிமல் சிறிபால டி சில்வா ஆகியோரும் மக்கள் விடுதலை முன்னணி சார்பில் செயலாளர் ரில்வின் சில்வா, பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ மற்றும் அனுர திஸாநாயக்க எம்.பி. ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

இப்பேச்சு வெற்றிகரமாக முடிந்தால் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழுவுக்கும் பொதுமக்கள் ஐக்கியமுன்னணியின் மத்திய குழுவுக்கும் பேச்சுக்கள் குறித்து ஜனாதிபதி தெரியப்படுத்தவுள்ளார் என்றும் தெரியவருகிறது. (ம)


**OXFORD INSTITUTE**
கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.

A/L, O/L வரையிலான தனிப்பட்ட பாடநெறி வகுப்புகளையோ, பிரத்தியேக வகுப்புகளையோ, வேறு வகுப்புகளையோ நடத்த விரும்புவோர்க்கு இடம் ஒதுக்கீடு செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு:-
பரமேஸ்வரி,
C/O புண்ணியலிங்கம்,
தாவடி சந்திக்கருகில்,
தாவடி.

T.P:- 222 5133 -நிர்வாகி.


## பாயிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பட பல குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் எனக் கூறப்படும் இந்த 11 பேர், ஆயுதங்கள் பலவற்றுடன் டொலபின் ரக வாகனம் ஒன்றில் பயணம் செய்தபோது, இரணவில பகுதியில் வைத்து சிலாபம் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் மூன்று தன்னியக்க துப்பாக்கிகள், ஒரு ரி-56 துப்பாக்கி, மூன்று ரி-56 மெகஸின்கள், 6 கைக்குண்டுகள் ஆகியவை அடங்கும் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களில் ஒருவர் பிரதேச சபை உறுப்பினர் எனவும் பொலீஸார் கூறுகின்றனர். நான்கு கையடக்கத் தொலைபேசிகளும் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்டவர்களில் மூவர் வடபகுதியைச் சேர்ந்தவர்கள். எஞ்சிய எட்டுப்பேரும் நீர்கொழும்பையும், கொச்சிக்கடையையும் சேர்ந்த முஸ்லிம்கள் என்று பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

## பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சந்திப்பு நடைபெறுகிறது.

வடக்கு - கிழக்கு புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் பற்றிய பூர்வாங்க விடயங்கள் குறித்து செயலாளர் ஒஸரின் பெர்னாண்டோ, கண்காணிப்புக் குழு பிரதிநிதிகளுடன் ஆராயவிருக்கின்றார் எனத் தெரிகிறது.

கடந்த வாரம் தாய்லாந்தில் நடைபெற்ற பேச்சுக்களில் உயர்பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியே மக்களை மீளக்குடியேற்ற அரசு - புலிகள் இயக்க பிரதிநிதிகள் இணங்கியது தெரிந்ததே.

இந்த இணக்கத்துக்கு ஏற்ப, வடக்கிலுள்ள உயர்பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியே மக்களை மீளக்குடியேற்றுவது தொடர்பாகவும் இடம்பெயர்ந்தோருக்கு நஷ்டஈடு வழங்குவது தொடர்பாகவும் இன்று நடைபெறும் சந்திப்பில் கண்காணிப்புக்குழு பிரதிநிதிகளுக்கு செயலாளா ஒஸ்ரின பெர்னாண்டோ விளக்கிக் கூறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

## மாற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யங்களையும் குறிப்பிட்டுள்ளதே இதற்கான காரணமாகும்.

மாற்று இயக்கத்தலைவர்கள் சகஜ வழ்வுக்குத் திரும்பி அரசியலில் ஈடுபடலாம் என்று நாம் துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிட்டிருந்தோம். ரெலோ தற்போது இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பி அரசியலில் ஈடுபடுகின்றது. அதுபோல் ஏனைய தமிழ்க் குழுக்களும் சகஜ வாழ்வுக்குத் திரும்பி அரசியலில் ஈடுபடவேண்டும் என்று பட்டு - அம்பாறை அரசியல்துறை மேலும் அறிவித்துள்ளது.

# தாய்லாந்தில் இருந்து புலிகள் திரும்பினர்

தாய்லாந்தில் 4ஆம் கட்டப் பேச்சுக்களில் கலந்துகொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை வன்னி திரும்பினர்.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும் விடுதலைப் புலிகளின் சமாதான செயலகசெயலர் புலித்தேவன், அலெக்ஸ், நெடியவன் மற்றும் தொல்காப்பியன் ஆகியோரும் நேற்றுக்காலை 7.45 மணியளவில் ஹெலிமூலம் கிளிநொச்சி விளையாட்டு மைதானத்தைச் சென்றடைந்தனர். மூத்த தளபதி கேணல் கருணா அம்மான் கொழும்பிலிருந்து மற்றொரு ஹெலிமூலம் நேரடியாக மட்டக்களப்பு பளுகாமத்தை நேற்றுக் காலை சென்றடைந்தனர். (ஏ-9)

## இந்து விவகார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சர்வதேச குழுவினருடன் தொடர்பு கொண்ட சிலர், அவர்களது உதவியுடன் சோதனை நிலையங்களைத் தாண்டி பயணஞ்செய்யமுடிந்தது.

ஓமந்தை சோதனைச் சாவடிகளும் நேற்று மூடப்பட்டிருந்ததால் வவுனியாவில் இருந்து வடக்கே வந்த பயணிகளும் ஏமார நேர்ந்தது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை பாதையைத் திறப்பதற்கான அனுமதியை பாதுகாப்பு அமைச்சு வழங்கியிருப்பதாகவும் -

இது தொடர்பாக அமைச்சு இராணுவத் தளபதிக்கு உத்தரவிட்டிருப்பதாகவும் -

இந்து கலாசார அமைச்சின் ஊடகச் செயலாளர் எம்.எஸ்.அப்துல்கபூர் கடந்த வெள்ளியன்று ஊடகங்களுக்கு அறிவித்திருந்தார்.

இந்த அறிவிப்பை நம்பிச் சென்ற பயணிகளே பெரும் ஏமாற்றம் அடைய நேர்ந்தது. பயணம் தடைப்பட்டு திரும்பிய பலரும் இது குறித்து கடும் விசனத்தை வெளிப்படுத்தினர்.

ஏ-9 வீதி திறக்கும் நடைமுறை இராணுவம் - புலிகள் - செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு ஆகிய முத்தரப்புகளுடன் சம்பந்தப்பட்டது. இந்த மூன்று தரப்புகளுக்கும் பாதை திறப்பது பற்றிய தகவல் முறைப்படி தெரிவிக்கப்படாததே நேற்றைய குழப்பத்துக்கு காரணம் என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் தொடர்பு கொள்ளாமல் கொழும்பில் இருந்து விடுக்கப்பட்ட அறிவிப்பினால் பயணிகள் பல அலைச்சலையும் அசௌகரியங்களையும் சந்திக்க நேர்ந்துள்ளது என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டது. ஐ)

## முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் அதியுயர் பீட உறுப்பினர்கள் ஆகியோருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

நாடுமுழுவதிலும் இருந்து வந்திருந்த கட்சிப் பேராளர்கள் மத்தியில் கூட்டத்தை ஆரம்பித்துவைத்து அமைச்சர் ரவூப் ஹக்கீம் உரையாற்றுகையில், கட்சியின் தலைமை மாலுமியாகத் தாம் மீண்டும் தெரிவு செய்யப்பட்டிருப்பதாகவும் தனது தோள்களின் மீது சுமத்தப்பட்டுள்ள தலைமைப் பொறுப்பை நேர்மையாக ஏற்று நடத்துவதாகவும் தெரிவித்தார். கட்சியின் மறைந்த ஸ்தாபகத் தேசியத் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப்பையும் அவர் நினைவு கூர்ந்தார். மௌலவி கலீல், மௌலவி இல்யாஸ் ஆகியோர் மறைந்த தலைவர் எம்.எச்.எம்..அஷ்ரப் பிற்காக விசேட துஆ பிரார்த்தனை செய்தனர். அதனைத் தொடர்ந்து கட்சியின் தேசிய அமைப்பாளர் கே.எ.பாயிஸ் உரையாற்றினார். பின்னர் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹஸன் அலி கடந்த பேராளர் மாநாட்டு அறிக்கையை வாசித்தார்.

## தனியார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
லாம் எனவும் பொலீஸார் தெரிவித்திருக்கின்றனர்.

சைக்கிளில் வந்த இரண்டு புலி உறுப்பினர்கள், வாதரை பஸ் நிலையம் அருகே இந்தச் சீருடைகள் உட்பட ஏனைய பொருள்கள் கொண்ட இரண்டு உரப்பைகளையும் பொலித்தின் பாக் ஒன்றையும் பஸ்ஸினுள் வைத்துவிட்டு அவற்றை ஏறாவூரில் வைத்து பெற்றுக்கொள்வதாகக் கூறிச் சென்றனர் என்று சாரதியும் நடத்துநரும் பொலீஸாரிடம் தெரிவித்திருக்கின்றனர்.

இப்பொருள்களை பஸ்ஸில் ஏற்றியதாகக் கூறப்படும் இரண்டு புலி உறுப்பினர்களில் ஒருவர் அப்பொருளகள் பிடிபட்டதை அடுத்து சயனைட் வில்லையை உட்கொண்டு இறக்க முயன்றார் என்று பாதுகாப்புத் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன. எவ்வாறாயினும் அவர் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு உயிர்காப்பாற்றப்பட்டார் எனவும் தெரிவிக்கப்பட்டது. மற்றவரும் கைதுசெய்யப்பட்டார்.

முத்துலிங்கம் நிமலன், சோமநாதன் பிரபாகரன் ஆகிய இருவருமே கைதுசெய்யப்பட்டிருக்கின்றவர்கள் ஆவர். (ம)


யாழ். மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்க

**முக்கிய அறிவித்தல்**

நேற்று 12.01.2003 நடைபெற்ற பொதுச்சபைக் கூட்ட தீர்மானத்தின்படி இன்று 13.01.2003ஆம் திகதி தொடக்கம் மீண்டும் காலவரையற்ற சாத்வீக மறியல் போராட்டம் பருத்தித்துறை இறங்குதுறையில் நடைபெறும். எனவே, சகல உரிமையாளர்களையும் சாரதிகளையும் பணியாளர்களையும் தவறாது இப்போராட்டத்திற்கு சமுகந்தரும்படி கேட்டுக்கொள்கின்றோம். எமது சங்கத்திற்கு சாதகமான பதில் கிடைக்கும்வரை தற்காலிகமான எமது சங்கப் பணிமனை மூடப்பட்டிருக்கும் என்பதனை தெரிவித்துக்கொள்கின்றோம்.

215, பழையபூங்கா வீதி,
யாழ்ப்பாணம். (13170)

நிர்வாகம்
யா.மா.த.பா.உ. கூ.சங்கம்



**வீரர்களே! உங்கள் தேவையை நாம் அறிவோம்**

◆ உதைபந்தாட்ட உபகரணங்கள் ◆ CRICKET உபகரணங்கள்
◆ பட்மின்ரன், TABLE ரெனிஸ் ரக்கற்ஸ் ◆ வெற்றிக்கிண்ணங்கள்
◆ சகலவிதமான விளையாட்டுப் பாதணிகள் ◆ விளையாட்டு சீருடைகள்
◆ மெய்வல்லுநர் விளையாட்டு உபகரணங்கள்
என்பவற்றிற்கு இன்றே விரையுங்கள்

உயர்ந்த தரம்!
யாழ் நகரில்
ஜொனெக்ஸ் மஸ்ரி பலஸ்
குறைந்த விலை!
இல. 76, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

NOTE:- பாடசாலைகள், கழகங்கள், பொதுநிறுவனங்கள் என்பனவற்றிற்கு விசேட கழிவுகள் வழங்கப்படும். (13132)



இலவசம்!
உழவு இயந்திரங்களை வாங்குபவர்களுக்கு 14", 21" கலர் TV ஒன்று

**தைப்பொங்கலுக்கு.....**
**மிகவும் விசேட கொடுப்பனவுகள்**

இந்த அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடவேண்டாம்
2003 ஆம் ஆண்டு ஜனவரி 14 வரையிலுமே இச்சலுகைவழங்கப்படும்.




மேலதிக விபரங்களுக்கு :

**Tel No: 818415, Fax: 818416**

*. எஸ். திருச்செல்வம்- சேச் டிஸ்பென்சறி லேன், உரும்பிராய்.
*. கே. சாந்த சோதி, பிள்ளையார் கோவிலடி, இணுவில் கிழக்கு- இணுவில்.
*. பி.அருட்பிரகாசம், கைத்தொழில் பேட்டை வீதி- அச்சுவேலி.




GUDWIL

55 Dutugemunu Street, Pamankade, Dehiwela.
Tel No : 818415, FAX: 818416.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.01.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.